Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 21 ஞாயிற்றுக்கிழமை (03.06.2012) பக்கங்கள் 20 ஓசை – 246

**Restaurant Tilko**



10% Disscount
மே மாதம் மட்டும்
(உணவு மட்டும்)
(Fully Air Condationed)

Tilko Jaffna City Hotel
Tel : 021 222 5969, Fax:021 222 7291
Wdb:www.cityhoteljaffna.com
e-mail : info@cityhoteljaffna.com
TILKO (C/1515)

துரத்தும் அவலம்



15



முட்டாள் தனத்திலிருந்து விடுதலை...

08

Dongle Unlock செய்வது





18



இறுதிவரை முயற்சிப்பேன்


07

வடமராட்சிக்கு தீயணைப்பு படை



05

# உள்நாட்டில் விசாரணை நடத்த சர்வதேசத்துக்கு அனுமதி இல்லை



## அரசாங்கம் மீளவும் தெரிவிப்பு

(கொழும்பு)

உள்நாட்டு விவகாரம் தொடர்பாக இலங்கையில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு, எந்தவொரு வெளிநாட்டிற்கும் இடமளிக்க முடியாதென முன்னாள் சட்டமா அதிபரும், ஜனாதிபதியின் சட்ட ஆலோசகருமான மொகான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனிதஉரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இலங்கைப் பயணத்துக்கு முன்னதாக, ஐ.நாவின் உண்மை கண்டறியும் குழு கொழும்பு வருவதற்கான சாத்தியம் உள்ளதா என்பது குறித்து கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

போருக்குப் பிந்திய நிலைமைகள் மற்றும் நல்லிணக்க முயற்சிகள் குறித்து நேரில் கண்டறிய வருமாறு நவநீதம்பிள்ளைக்கு அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது. ஆனால் எந்தவொரு ஐ.நா. உண்மை கண்டறியும் குழுவுக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை.

நவிபிள்ளைக்கும் கூட கடந்த ஆண்டு தான் அழைப்பு விடுக்கப்பட்டது. எனினும், ஜெனிவா தீர்மானத்தை அடுத்து இந்த அழைப்பு அவருக்கு விடுக்கப்படவில்லை. உண்மை கண்டறியும் நோக்கில் தமது அதிகாரிகள்

19 ஆம் பக்கம் பார்க்க

### யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியர் விபத்தில் உயிரிழந்தார்

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடப் பகுதியில் நேற்றுப் பகல் இடம்பெற்ற வீதி விபத்தில் யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் உடுவில் பிரதேச செயலக வீதியைச் சேர்ந்த வீரசிங்கம் ஜெகதீஸ்வரன் (வயது-35) என்ற மத்திய கல்லூரியின் கணித பாட ஆசிரியரே உயிரிழந்தவராவார்.

நேற்று மதியம் ஒரு மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவ்து,

யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற தனியார் பேருந்துடன் எதிர்ப்பக்கமாக மோட்டார் சைக்கிளில் வந்த ஆசிரியர் மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலயத்திற்கு அருகில்

19 ஆம் பக்கம் பார்க்க

## சுற்றுலாப் பயணிகளுக்காக காத்திருந்த வடதாரகை

### உள்ளூர் பயணிகள் விசனம்

நெடுந்தீவுக்கான பயணிகள் சேவையில் ஈடுபடும் பொதுப் போக்குவரத்துக் கப்பலான வடதாரகை வழமையாகப் புறப்படும் 10.00 மணிக்குப் புறப்படாது ஒன்றே முக்கால் மணி நேரம் தாமதமடைந்து நெடுந்தீவுக்குப் புறப்பட்ட சம்பவமொன்று நேற்றைய தினம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குடாநாட்டிற்கு தமது தேவைகளை நிறைவேற்ற வந்த நெடுந்தீவு மக்கள் மீண்டும் ஊருக்குச் செல்வதற்கு தமது காரியங்களை விரைவாக முடித்து விட்டு நேற்றைய தினம் குறிகாட்டுவானுக்குச் சென்றனர். ஆனால் காலை 10.00 மணிக்குப் புறப்பட வேண்டிய வடதாரகை புறப்படாமல் நின்றது.

நெடுந்தீவுக்குச் செல்லவிருந்த தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகளுக்காகவே வடதாரகை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது எனத் தெரியவந்தது. சுற்றுலாப் பயணிகளுக்காக காத்திருந்த வடதாரகை முற்பகல் 11.40 மணியளவில் அதாவது ஒன்றரை மணி நேரத்திற்கும் கூடுதலாக தாமதித்த நிலையிலேயே தனது பயணத்தை ஆரம்பித்தது.

நெடுந்தீவு சென்று மீளவும் இந்தக் கப்பலில் யாழ்ப்பாணம் திரும்பி வர வேண்டிய பயணிகளும் இருந்தனர்.

இதேவேளை, நெடுந்தீவுக் கரைக்குச் சென்ற மக்களை ஏற்றிச் செல்ல வேண்டிய போக்குவரத்துச் சபையின் பேருந்தும் சுற்றுலாப் பயணிகளுக்கே முன்னுரிமை கொடுத்து அவர்களை ஏற்றி இறக்கும் காரியத்தை

19 ஆம் பக்கம் பார்க்க

# திறந்த பல்கலையின் கிளிநொச்சி அலகு திறப்பு

(கிளிநொச்சி)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் கிளிநொச்சி பிராந்திய கற்கை நிலையம் ஏ-9 வீதியின் 155ஆம் கட்டை பகுதியில் நேற்று ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிர தித் தலைவருமான மு.சந்திரகுமாரினால் திறந்து வைககப்பட்டது.

திறந்து வைத்து அவர் உரையாற்றும்போது,



இது போன்ற உயர் கல்வி நிலையங்கள் கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்படுவது மகிழ்ச்சியான வரவேற்கத்தக்க விடயம். கிளிநொச்சி மாவட்டத்தில் பெருமளவான இளைஞர், யுவதிகள் வேலையற்று இருக்கின்ற அதே வேளை தொழிநுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைசார்ந்த வெற்றிடங்களுக்கு தகைமையுள்ளவர்கள் இங்கு இல்லை.

இந்த மாவட்டத்தில் உள்ள வேலைவாய்ப்பு வெற்றிடங்களுக்கு இந்த மாவட்டத்தில் உள்ளவர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் எனும் எமது செயற்பாடுகளுக்கு இது

19 ஆம் பக்கம் பார்க்க

## மத்திய கல்லூரி நீச்சல் தடாகத்தில் வவுனியா மாணவன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)


யாழ்.மத்திய கல்லூரியில் அமைந்திருக்கும் நீச்சல் தடாகத்தில் நேற்று முன்தினம் இரவு நீரில் மூழ்கி மாணவன் ஒருவன் உயிரிழந்ததாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாவைச் சேர்ந்த யோகேஸ்வரன் கிரிதரன் (வயது-15) என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

19 ஆம் பக்கம் பார்க்க

## குற்றச் செயல்களில் ஈடுபட்ட பலர் குடநாட்டில் கடந்த வாரம் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற குற்றச் செயல்களுடன் தொடர்புடைய பெருமளவான குற்றவாளிகள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன், அந்தச் சம்பவங்களின் போது கொள்ளையிடப்பட்ட பெருமளவான பொருட்களும் மீட்கப்பட்டிருப்பதாக யாழ்.பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார். யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அவர் இவ்வாறு தெரிவித்தார். இவ் ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி பொலிஸ் பிரிவில் இரண்டு பாரிய குற்றச் செயல்கள இடம்பெற்றுள்ளன. அதில் எட்டு வயதுச் சிறுமி ஒருவரை இளைஞர் ஒருவர் கடத்தி பாலியல்

19 ஆம் பக்கம் பார்க்க

## தகவல் தொழில்நுட்பத்தை பிழையாக பயன்படுத்தும் புலிகளின் அனுதாபிகள்



தமிழ் புலம்பெயர் சமூகம் தகவல் தொழில நுட்பத் துறையை பிழையாக பயன்படுத்தி வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான புலம்பெயர் தமிழர்கள் தகவல் தொழில்நுட்பத்துறையை துஷ்பிரயோகம் செய்வதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.கொழும்பு ரேணுகா ஹோட்டலில் நடைபெற்ற

19 ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்காவிடம் கையளித்த அறிக்கை பகிரங்கப்படுத்த ஐ.தே.க. கோரிக்கை

(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அமெரிக்காவிடம் இரகசியமான முறையில் கையளிகப்பட்ட செயற்திட்ட அறிக்கையை நாடாளுமன்றில் பகிரங்கப்படுத் துவதற்கு அரசிடம் சபாநாயகர் கோர வேண்டுமென ஐ.தே.க. தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல, சபாநாயகர் சமல் ராஜபக்ஷவுக்கு எழுத்து மூலமாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த மே 18 ஆம் திகதி நாள் வொஷிங்டனில் அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஹிலாரியை சந்தித்தபோது, வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் சமர்ப்பித்த செயற்திட்ட அறிக்கை நாடாளுமன்றத்துக்கோ பொது மக்களுக்கோ பகிரங்கப்படுத்தப்படவில்லை. ஐ.நா. மனித உரிமைகள் பேரவைத் தீர்மானத்தை அடுத்து அமெரிக்காவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த

19 ஆம் பக்கம் பார்க்க

# பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரம் உயர இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நலனை முன்நிறுத்தியதாக தமது அரசியல் பணியினை முன்னெடுத்து வரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி யுத்தத்தால் பாதிக்கப்பட்டு இடப்பெயர்வுகளுக்கு உள்ளாகியுள்ள மக்களை மீண்டும் அவர்களின் சொந்த வாழ்விடங்களில் மீள்குடியமர்த்தி வருவதுடன் இளைஞர் யுவதிகளுக்கான வேலைவாய்ப்புக்களை வழங்கி அம்மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப உதவிபுரிவதாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் (கமல்) தெரிவித்தார்.



யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கான வேலை வாய்ப்புத் தொடர்பான கலந்துரையாடல் கடந்த சில நாட்களாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட தலைமை அலுவலகத்தில் நடைபெற்று வருகின்றது.

இவ் வேலைவாய்ப்புத் தொடர்பான கலந்துரையாடலில் யாழ். குடாநாட்டின் பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் தகுதியுள்ள இளைஞர், யுவதிகள் கலந்து கொள்கின்றனர். இந்த வகையில் நேற்று முன்தினம் சண்டிலிப்பாய் மற்றும் சங்கானைப் பிரதேச இளைஞர், யுவதிகளுக்கான தொழில் வாய்ப்புத் தொடர்பான கலந்துரையாடல் ஈ.பி.டி.பி. யின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தலைமையில் நடைபெற்றது.

அங்கு ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் (கமல்) உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த காலங்கள்ல் சில அரசியல் கட்சிகள் தமது தனிப்பட்ட நலனை முன்நிறுத்தி அரசியல் நடத்தினர். இதனால் நாட்டில் வேலையற்ற இளைஞர் யுவதிகள் தொகை அதிகரித்தது. இதனைச் சாதகமாக பயன்படுத்திய அக்கட்சிகள் இளைஞர், யுவதிகளை தவறான வழியில் வழி நடத்திச் சென்று ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளை யுத்தத்தில் பலிகொடுத்ததுடன் பலர் அங்கவீனராகியும் வாழ்ந்து வருகின்றனர் எனவும் தெரிவித்தார்.

# வல்வை வரலாற்று ஆவணக் காப்பகம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை நகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களின் ஆன்மீகம், பாரம்பரியம், கலை, பண்பாடு, கப்பல் ஓட்டிய வரலாறு, வல்வை அறிஞர்களின் வரலாறு, வல்வெட்டித்துறை தொடர்பான இலக்கியங்கள், வல்வெட்டித்துறை எழுத்தாளர்களின் நூல்கள், பாரம்பரியமாகப் பயன்படுத்திய பொருட்கள் ஆகியவற்றைக் கொண்ட வல்வை வரலாற்று ஆவணக்காப்பகம் வல்வெட்டித்துறை, ஊரிக்காடு கீதாஞ்சலி இல்லத்தில் இயங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கனடாவில் கடந்த 15 வருடங்களாக நகுலசிகாமணி தம்பதியினரால் சேகரித்து வந்த வல்வையின் வரலாற்றுப் பொக்கிஷங்கள் மக்களின் பாவனைக்காக நிரந்தரமாகக் கையளிக்கப்படும் நிகழ்வு வல்வெட்டித்துறை நகர பிதா நடராஜா அனந்தராஜா தலைமையில் இன்று பி.ப. 4.00 மணிக்கு வடமராட்சி வடக்கு பிரதேச கலாசார உத்தியோகத்தர் எஸ்.செல்வசுகுணாவால் ஊரிக்காடு கீதாஞ்சலி இல்லத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

# அனர்த்தப் பாதுகாப்பு விசேட செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணக் கல்வித்திணைக்களத்திற்குட்பட்ட 12 கல்வி வலயங்களையும் சேர்ந்த அனர்த்தப் பாதுகாப்புக் கல்வி வலய இணைப்பாளருக்கான 5 நாள் பாதுகாப்புப் பயிற்சிச் செயலமர்வு நடைபெறவுள்ளதாக வடமாகாணக் கல்வித் திணைக்கள மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார்.

இச் செயலமர்வு எதிர்வரும் 6 ஆம், 7 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை கோப்பாய் சங்கமம் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

GTZ/ESC நிறுவனம் இந்தச் செயலமர்வினை வலய இணைப்பாளர்களிற்கு மேற்கொள்ளவுள்ளது. இச் செயலமர்வில் பங்குபற்றுவோர்களிற்கான தங்குமிட வசதி, உணவு, சிற்றுண்டி என்பன நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இவற்றுடன் பங்கு பற்றுநருக்கான கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளது. (06)

## சின்னஞ்சிறு செய்திகள்

### மகா கும்பாபிஷேகம்

நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை காலை 6.39 மணி முதல் 7.12 வரையுள்ள புண்ணிய காலத்தில் நடைபெறவுள்ளது. சிவஸ்ரீ க.சிவசண்முககுருக்கள் தலைமையில் நடைபெறும். (109)

### புதிய சப்பறம் வெள்ளோட்டம்

(தீவகம்)

வேலணை மேற்கு பெரிய புலம்பதி அருள்மிகு மகா கணபதிப் பிள்ளையார் முடிப்பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த மாதம் 29 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

நேற்று புதிய சப்பற வெள்ளோட்ட நிகழ்வு இடம்பெற்று இரவு 7.00 மணிக்கு சப்பறத் திருவிழா இடம்பெற்றது.

இன்று காலை 10.00 மணிக்கு இரதோற்சவமும் நாளை காலை 9.00 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை 7.00 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (85)

### பரிசளிப்பு விழா

(ஏழாலை)

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலையின் கேட்போர் கூடத்தில் அதிபர் செல்வி பிறவரத்தினம் தலைமையில் இடம்பெறவுள்ள இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக யாழ். கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ். கே.யோகநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் கலந்துகொள்ளவுள்ளார். ஆசியுரையினை சிவஸ்ரீ சர்வேஸ்வரக் குருக்கள் வழங்கவுள்ளார்.

மாணவர்களுக்கான பரிசில்களை ஆசிரியை திருமதி பத்மராணி யோகநாதன் வழங்கவுள்ளார். (06)

### மணியந்தோட்டத்தில் வீடமைப்புத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை மணியந்தோட்டம் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு வீடமைப்புத் திட்டம் வழங்குவது தொடர்பாக விண்ணப்பப் படிவம் நல்லூர் பிரதேச செயலகமூடாக வழங்கப்பட்டு வருகிறது.

கிராம அலுவலரூடாக வழங்கப்பட்டு வரும் இவ்விண்ணப்பப் படிவங்களை பெற்று பூரணப்படுத்தி ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

### சங்கத்தானையில் நடமாடும் நூலக சேவை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையின் சாவகச்சேரி பொதுநூலகத்தினரால் நடமாடும் நூலக சேவை இன்று சங்கத்தானை ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தில் காலை 10.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்நடமாடும் சேவையில் மாணவர்கள் மற்றும் நூலக ஆர்வலர்கள் கலந்து பயன்பெறுமாறு பிரதம நூலகர் க.வித்தியானந்தன் அறிவித்துள்ளார். (11)

### லலித், குகன் வழக்கு சட்டவாதி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

லலித், குகன் வழக்கில் அரச சட்டத்தரணியாக சட்டத்தரணி நயந்த ஆஜராவார் என யாழ். நீதிமன்ற நீதவான் மாணிக்கவாசகர் கணேசராஜாவிடம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ். மேல்நீதிமன்றில் அரச சட்டத்தரணியாக வி.திருக்குமரனே கடமையாற்றி வருகின்றார்.

லலித், குகன் வழக்கிற்கு மட்டும் சட்டத்தரணி நயந்த சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் 24.07.2012 இல் ஆஜராவார் என யாழ். நீதவானுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. (எஸ்,137)

### இருளில் மூழ்கியது வடமராட்சி

பருத்தித்துறையிலிருந்து யாழ. நோக்கி வந்துகொண்டிருந்த கன்ரர் வாகனம் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து மின் கம்பத்துடன் மோதியது.

வல்லை மண்டான் சந்தியில் நேற்றிரவு 9.00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. மின் கம்பம் முறிந்ததால் வடமராட்சிக்கான மின் விநியோகம் தடைப்பட்டு வடமராட்சி பிரதேசம் இருளில் மூழ்கியது.

### பழமுதிர்ச்சோலை விசேட பொதுக்கூட்டம்

சாவகச்சேரி பழ உற்பத்தியாளர் விற்பனை கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் கண்டுவீதி, மீசாலையில் அமைந்துள்ள பழங்கள் கொள்வனவு விற்பனை நிலையத்தில் (பழமுதிர்ச்சோலை) எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெறவுள்ளது.


இக்கூட்டத்தில் பழமுதிர்ச்சோலையின் எதிர்கால செயற்பாடு தொடர்பாக ஆராயப்படவுள்ளது. பழ உற்பத்தியில் ஈடுபடும் ஆர்வமுள்ள அனைவரும் இக்கூட்டத்தில் பங்குபற்றி தங்கள் பங்களிப்பை வழங்குமாறு பிரதி விவசாயப் பணிப்பாளர் கி.சிறிபாலசுந்தரம் கேட்டுக்கொண்டுள்ளார்.

# வதிரி தமிழ் மன்றத்தின் விளையாட்டு விழா

(வடமராட்சி)

வதிரி தமிழ் மன்றத்தின் விளையாட்டு விழா இன்று பிற்பகல் 1.30 மணிக்கு வதிரி டைமன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வதிரி தமிழ் மன்றத் தலைவர் தி.வரதராஜன் தலைமையில் நடைபெறவுள்ள விளையாட்டு விழாவில் யாழ். பல்கலைக்கழக காசாளர் ம.மதியழகன் பிரதம விருந்தினராகவும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி அமைப்பாளரும் பருத்தித்துறை பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான ஸ்ரீரங்கேஸ்வரன் சிறப்பு விருந்தினராகவும், மந்திகை ஆதார வைத்தியசாலை ஊழியர் திருமதி ஜே. தேவராஜன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (116)



இணுவில் கந்தசுவாமி கோவில் மீது பாடப்பெற்ற பெருமஞ்ச நாயகனே எனும் இறுவட்டை கடந்த திங்கட்கிழமை ஆசிரியர் சண்முகலிங்கன், வைத்தியர் பாலசுப்பிரமணியம் ஆகியோர் இணைந்து வெளியிட்டு வைத்தனர்.

# ஒரு குடும்பத்துக்கு ஒரு மில்லியன் அரசு வடக்கில் செலவிட்டுள்ளது

## ஆளுநர் தகவல்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் ஒரு குடும்பத்திற்காக தலா ஒரு மில்லியன் ரூபா என்ற அடிப்படையில் அரசாங்கம் செலவிட்டுள்ளதாக வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

வடக்கின் வசந்தம் என்ற அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் பாரியளவில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மக்களின் வாழ்க்கைத் தரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் அரசாங்கம் பல திட்டங்களை வடக்கில் முன்னெடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டு புலிகளின் பிடியிலிருந்து வடக்கு மீட்கப்பட்டதிலிருந்து அரசாங்கம் தொடர்ச்சியாக அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் ஏனைய பகுதிகளை விடவும் வடக்கில் அபிவிருத்திப் பணிகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். வடக்கில் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வதற்கும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக ஆளுநர் சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

ஒன்றுக்குச் சான்றுகள் இல்லாமை என்பது
அது இல்லாமைக்குச் சான்றில்லை. - பொன்மொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## வந்தேறு குடிகள் பிரச்சினை!

எல்லாவெல மேதானந்த தேரரின் 'வந்தேறு குடிகள்' கதையைத் தற்போதைய கடைவாய்ச் சப்புதலுக்கு எடுத்துக் கொண்டுள்ளன நம் ஊடகங்கள். தமிழ் மக்களைக் குஷிப்படுத்துவதற்கு, விக்கிரமபாகு கருணாநாயக்க வேறு 'வந்தேறு குடிகள் சிங்களவரே... ஆதாரத்துடன் நிரூபிக்கத் தயார்' என்று சவாலும் விட்டிருக்கிறார்.

நாம் மாறி மாறி நிரூபித்துக் கொண்டிருக்க வேண்டியதுதான். வேடர்கள் சிரித்துக் கொள்ளட்டும். மனிதர்களின் தோற்றம், பரம்பல் பற்றி குறைந்தபட்ச வரலாற்றறிவுள்ளவர்கள் கூட இத்தகைய பேச்சுகளுக்குக் காதுகொடுப்பதைக் கால விரயமாய் உணர்வார்கள்.

அல்லது, அமெரிக்க ஐரோப்பிய அவுஸ்ரேலிய நாடுகளுக்கெல்லாம் போய் அந்தந்த நாடுகளில் வந்தேறு குடிகளாய்த் தொடர்ந்து சீவிப்பதை விருப்பத்துடன் ஏற்றுக் கொண்டுவிட்ட நந்தமிழ்க் குடிகளில் பலரும்கூட இந்தப் பிடுங்குப்பாட்டுக்கு வெட்கிச் சிரித்துக் கொள்வார்கள்.

எல்லாவெல மேதானந்த தேரர் நம் 'தமிழ்வீர' அரசியலாளர்களுக்கும் ஊடகங்களுக்கும் சளைக்காமல் எவ்வாறு இனவாதத் தீனி கொடுத்துக் கொண்டிருக்கிறாரோ அதற்குச் சற்றும் குறைவில்லாமல் அதே பாணியிலான தீனியை நம்மவர்களும் அந்தத் தரப்பிலுள்ளவர்களுக்குக் கொடுத்துக் கொண்டு தானிருக்கிறார்கள். தமிழர்களா கொக்கா?

"இலங்கையில் தமிழ்க்குரலென்று ஒன்றும் சிங்களக் குரலென்று இன்னொன்றும் உண்டு. எமது இனத்திற்கென்று உள்ள தேசிய அம்சங்களுக்காக எமது ஏராளம் உறவுகள் உயிர் கொடுத்துள்ளதை மறந்துவிடக் கூடாது. எனவே எமது எதிர்கால சிற்பிகளான நீங்களும் தேசிய இன உணர்வாளர்களாக உருவாகி வர வேண்டும்..." என்று, ஐந்தாம் வகுப்பு மாணவர்களிடம் ஆவேசத்தை விதைக்கும் தமிழ் எம்பிமார் நம்மிடம் இருக்கிறார்கள்.

அந்தப் பக்கம் எப்படி விக்கிரமபாகுவும் உண்டு எல்லாவெல தேரரும் உண்டோ அதுபோல இந்தப் பக்கமும் இரண்டு மாதிரி ஆட்களும் உண்டு. மக்கள் நிம்மதியான வாழ்வொன்றை அமைத்துக்கொள்வதற்கு எத்தகைய பேச்சுகளை முதன்மைப்படுத்த வேண்டும் என்பதை ஊடகங்கள் புரிந்து கொள்ளாதவரை அல்லது அவர்களும் மேதானந்த தேரர் வகையறாக்களுக்கே முன்னுரிமை கொடுத்து கல்லாகட்டும் வரை இந்த நாட்டுக்கு விடிமோட்சம் இல்லை.

இவர்களிடமிருந்து தப்பி, வன்முறைச் சுழலிலிருந்து எமது சமூகம் வெளியே வருவது எப்படி என்பதை எண்ணுவது மலைப்பாகவே இருக்கிறது. அதிகார விருப்பங்களுக்காகவும், குறுகிய லாபங்களுக்காகவும் பேசப்படும் ஊட்டப்படும் இந்த இனவாதமும் வெறுப்பும் விரோதமுமான நஞ்சு நம்மை மீண்டும் மீண்டும் எங்கு கொண்டுபோய் விடும்?

நம்முடைய இன, மொழி, தேசிய உணர்வுகளைக் கூர்தீட்டிவிடும் பேச்சுக்களிலிருந்தே பிறவற்றின் மீதான மறுப்பும் வன்முறை உணர்வும் வளர்த்துவிடப்படுகிறது. இந்த எல்லைக்கோடுகளை நமக்குள் போட்டு வைத்துக்கொண்டு அதனுள்ளேயே இருப்பதன் மூலம் நாம் பாதுகாப்புடன் இருப்பதாக உணர்கிறோம்.

ஆனால் உண்மையில் இந்தப் புனித எல்லைக்கோடுகள் யாவும் மனிதகுலத்துக்குத் தீங்கு விளைவிப்பவையாகவே உள்ளன என்றும் நாம் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் புரிந்து கொண்டே வருகிறோம். இருந்தாலும் நம்மை மாற்றிக்கொள்ள எண்ணுவதில்லை அல்லது விடுவதில்லை.

சமூகமும் ஊடகங்களும் தலைவர்கள் எனப்படுவோரும் நம் மூளையில் திணிக்கின்ற அனைத்து விஷயங்களைப் பற்றியும் நாம் வேறோர் கோணத்திலிருந்து பார்க்க வேண்டிய தேவை இருக்கிறது. தமிழர்கள் என்ற அடையாளத்தை நாம் எல்லையற்ற நேயத்தின் வழியேதான் அடைய முடியுமே அல்லாமல், வெறுப்பினாலும் இரத்தக்களரியினாலும் அல்ல.

- ஆசிரியர்

# பள்ளிக்குடாவில் வீடமைப்புத்திட்டம்; சுவிஸ் அபிவிருத்தி நிறுவனம் உதவி

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் பள்ளிக்குடா கிராம சேவகர் பிரிவில் சுவிஸ் அபிவிருத்தி நிறுவன அனுசரணையுடன் அண்மையில் மீளக் குடியமர்ந்துள்ள சுமார் 403 குடும்பங்களுக்கு வீடமைப்பு உதவி கிடைத்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வீடும் தலா 5 ரூபா இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. தற்போது இவ்வீட்டுத் திட்ட வேலைகள் ஆரம்பிக்கப் படவுள்ளதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முதல்கட்டமாக இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டிருப்பதாகவும், மீளக குடியமர்ந்த நிரந்தரக் குடும்பங்கள் 667 இருப்பதாகவும், ஏனைய குடும்பங்களுக்கு இரண்டாம் கட்டமாக மேற்கொள்ளப்பட விருக்கும் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

(112)

# பயணிகளுக்கு எச்சரிக்கை; "முடிச்சு மாறிகள்" தாராளம்

(யாழ்ப்பாணம்)

தற்போது யாழ்.குடாநாட்டில் முடிச்சு மாறிகள் அதிகரித்துள்ள நிலையில், இவர்களிடம் பொதுமக்கள் தங்கள் பொருட்களை இழந்து அவதிப்படுவதையும், அவமானப்படுவதையும் காணக் கூடியதாக இருப்பதோடு, இது குறித்து அவதானமாகவும் இருக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

ஆண், பெண், முதியோர், இளையோர் என்ற பேதமின்றி பலரும் பொதுமக்களிடம் தங்களின் கைவரிசையைக் காட்டிவிட்டுச் செல்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

இம் முடிச்சுமாறிகள் மக்களோடு மக்களாகவும், பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகள் போன்றும், வணிகநிலையங்களில் பொருட்களைக் கொள்வனவு செய்யவரும் நுகர்வோர் போன்றும் நாகரிகமான தோற்றத்தோடு காட்சியளிப்பதாகவும் முடிச்சுமாறிகளால் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துக் கொள்கின்றனர்.

சமீபத்தில் மன்னார் - நானாட்டான் பகுதியைச் சேர்ந்த பெண்மணியொருவர் யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கிச் சென்ற பேருந்தில் பயணம் செய்தபோது இப்பெண்மணிக்கு அருகில இருந்த வேறு மூன்று இளம் பெண்கள் அப் பெண்மணியின் கைப்பையில் இருந்த ஐயாயிரம் ரூபாவை மிகவும் சாதுரியமான முறையில் திருடிச் சென்றதாகவும், இதே போன்று யாழ்.நகரில் நகைக்கடையொன்றில் முதியவர் ஒருவர் காசு மாற்றுவதற்காகச் சென்று அங்குள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நெக்கிலஸ் திருட முயற்சித்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(138)

# "சிசுதிரிய" புலமைப் பரிசில் கொடுப்பனவு அதிகரிப்பு

(கோண்டாவில்)

இலங்கை கல்வியமைச்சு தரம 10 இல் கல்விகற்கும் வறுமைக் கோட்டின் கீழுள்ள மாணவர்களின் வறுமையில் திறமைகாட்டும் மாணவர்களிற்கென வழங்கிவரும் சிசுதிரிய புலமைப் பரிசில் கொடுப்பனவு இவ்வருடம் தொடக்கம் 5000 ரூபாவிலிருந்து 7500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு சுற்று நிருபம் மூலம் வலயக்கல்விப்பணிப்பாளர்களிற்கு அறிவித்துள்ளது.

இப புலமைப்பரிசில் கொடுப்பனவுக்குரிய மாணவர்களை இதற்கென வலயக்கல்விப் பணிமனைகள் தோறும் அமைக்கப்பட்டுள்ள குழுவினர் தெரிவு செய்து வருகின்றனர்.

மாணவர்களின் வறுமை நிலை, அந்நிலையிலும் மாணவர்கள் கற்றலில் காட்டும் ஆர்வம், திறன், ஏனைய இணைபாட விதானச் செயற்பாடுகளில் காட்டும் திறன்கள் என்பனவற்றை அடிப்படையாகக்கொண்டு மாணவர்கள் இப்புலமைப்பரிசில்களிற்குத் தெரிவு செய்யப்பட்டு வருகின்றனர்.

(06)

# கால் நடைகள் களவு வன்னியில் அதிகரிப்பு

(புதுக்குடியிருப்பு)

வன்னிப் பகுதியில் திருட்டுத்தனமாகவும் சட்ட விரோதமான முறையிலும் கால்நடைகள் களவாடப்படுவது அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

குறிப்பாக மேய்ச்சலுக்குச் செல்லும் மாடுகள் சில பாதை தவறிப்போய் விடும் நிலையில், தனித்துக் காணப்படும் பொழுது களவாடப்படுவதாகத் தெரியவருகிறது.

இவ்வாறு சில நாட்களுக்கு முன்பு கிளிநொச்சி - கண்டாவளைப் பகுதியில், களவாடப்பட்ட நாம்பன்மாடு ஒன்று இறைச்சிக்காக வெட்டப்பட்டபோது, இச்சம்பவத்துடன் தொடர்புடைய நபர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்து கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தியதாகவும் தெரியவருகிறது.

போரின் பின்பு மீள்குடியேறிய மக்களின் வாழ்வாதார மேம்படுத்தலில் மாடு வளர்ப்பானது ஒரு முக்கிய செயற்திட்டமாக இருக்கையில், சிலரது விஷமச் செய்கையினால் தங்கள் தொழிலும், வருமானமும் மிகவும் பாதிக்கப்படுவதாக சம்பந்தப்பட்ட மக்கள் தங்கள் கவலையை வெளியிட்டு வருவதையும் காண முடிகிறது.

(138)

### மண்டை தீவு சித்தி விநாய கருக்கு பஞ்சதள இராஜகோ புரம்

(மண்டைதீவு)

மண்டைதீவு-திருவெ வண்காடு சித்திவிநாயகர் ஆ யத்தின் பஞ்சதள இராஜகோபுர த்திற் கான அடிக்கல் நாட்டும் நிக ழ்வு நேற்று முன்தினம் காலை ஆலயத்தில் சிறப்புற நடைபெற்று ள்ளது.

நேற்று முன்தினம் காலை 6.00 மணிக்கு திருவென ர்காடு சித்தி விநாயகர் ஆலயத்தி ல் நடைபெற்ற சிறப்பு பூசை வழிபாடுகளை அடுத்து, காலை 8 மணிமுதல் 9 மணிவரையான கா லப் பகுதியில் இவ் இராஜகோபுர த்திற்கான அடிக் கல் நாட்டி வைக் கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டிருந்தனர். இதேவேளை இவ் ஆலயத்திற்கான தீர்த்தக் கேணி அமைப்பு வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

(பா)

# வியாபாரத்தில் கொள்ளை இலாபம்; 20 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு

பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின்போது 20 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக பாவனையாளர் அதிகார சபையின யாழ். மாவட்ட அதிகாரி ற.சிவசீலன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி, துன்னாலை, நெல்லியடி போன்ற பிரதேசங்களில் உள்ள வர்த்தக நிலையங்களில் காலாவதியான பொருட்கள், நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமாக விற்பனை செய்தமை, விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாமை போன்ற பல்வேறு குற்றங்களுக்காக குறித்த இருபது வர்த்தகர்களுக்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் பாவனையாளர் அதிகாரசபையின் யாழ். மாவட்ட அதிகாரி மேலும் தெரிவித்தார்.

(எஸ்)

# பயனுள்ள போட்டிகள் நடாத்தப்பட வேண்டும்

(யாழ்ப்பாணம்)

திறமையையும் ஆற்றலையும் வெளிபடுத்தக் கூடிய வகையில் மாணவர்களுக்கிடையிலான போட்டிகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்தார்.

கோப்பாயில் அமைந்துள்ள யாழ். தேசிய கல்வியியற் பயிற்சிக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான வினாடிவினாப் போட்டியின் இறுதிப் போட்டியிலும் பரிசளிப்பு நிகழ்விலும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், இந்நிகழ்வை சிறப்பாக ஏற்பாடு செய்த வட மாகாண ஆளுநர் அவர்களுக்கு நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளும் அதேவேளை, இவ்வாறான நிகழ்வுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதுடன் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கொரு தடவையாவது நடாத்தப்பட வேண்டும்.

இவ்வாறான போட்டிகள் பாடசாலை விடுமுறை நாட்களில் நடாத்தப்படுவதுடன், அதனை நேரடியாக ஒளி, ஒலிபரப்புச் செய்வதனூடாக ஏனைய மாணவர்களுக்கும் பயனுள்ளதாக அமையுமென்பதுடன் இவ்விடயம் தொடர்பாக ஆளுநருடன கலந்துரையாடியதாகவும் தெரிவித்தார்.

இதனிடையே மாணவர்களின் திறமையும் ஆற்றலையும் வெளிக் கொணரக் கூடிய வகையில் இவ்வாறான போட்டிகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென்பதுடன் அதற்கு தமது முழுமையான பங்களிப்பு வழங்கப்படுமென்றும் உறுதிபடத் தெரிவித்த அமைச்சர் அவர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு மகிந்த சிந்தனைக்கமைவாக பாடசாலை மாணவர்களின் போஷாகுத் திட்டத்தை மேம்படுத்தும் வகையிலான ஏற்பாடுகளையும் முன்னெடுத்து வருவதாகவும் சுட்டிக் காட்டினார்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கலலூரி மண்டபத்தில் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சத்தியசீலன் தலைமையில் மாகாண மட்டத்திலான கீழ்ப்பிரிவு மற்றும் மேற்பிரிவு என இருவேறு போட்டிகள் நடைபெற்றன.

இதில் தரம் 9, 10 வகுப்புக்களை உள்ளடக்கிய கனிஷட பிரிவில் இறுதிப்போட்டியில் வவுனியா தெற்கு கல்வி வலையம் மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தையும் தென்மராட்சி கல்வி வலையம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

இதேபோன்று உயர்தர வ்குப்புக்களைக் கொண்ட இறுதிப் போட்டியில் யாழ் கல்வி வலையம் மாகாண மட்டத் தில் முதலாம் இடத்தையும் வடமராட்சி கல்வி வலயம் இரணடாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

இறுதிப் போட்டியில் வெற்றியீட்டிய கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட பிரிவுகளில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட அணிகளைச் சார்ந்த மாணவ மாணவிகளுக்கு அமைச்சர் அவர்கள் வெள்ளிப் பதக்கங்களை அணிவித்து சான்றிதழ்களையும் வழங்கிக் கௌரவித்தார்.

வடமாகாண ஆளுநரின் ஏற்பாட்டில் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் ஒழுங்கமைக்கப்பட்ட இந்நிகழ்விற்கான ஊடக அனுசரணையினை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் வழங்கியிருந்தது.

நிகழ்வின் இறுதியில் வடமாகாண கலாசார திணைக்களத்தால் உருவாக்கபட்டு வெளியிடப்பட்ட பேசும் கண்ணீர் குறுந்திரைப்படமும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

முதற்பிரதியினை திணைக்களப் பணிபாளர் திருமதி ஸ்ரீதேவி வெளியிட்டு வைக்க அதனை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பெற்றுக் கொணடார்.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், தேசியக் கல்வியியற் கல்லூரியின் அதிபர் யோகநாதன், ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ப் பிரிவின் பணிப்பாளர் ரவீந்திரன் உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

## மருத்துவரின் சாதுரியத்தால் திருட்டு முயற்சி முறியடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து பல இலட்சம் ரூபா பெறுமதியான பழைய கேடர் கம்பிகள் திருட்டு முயற்சி வைத்தியரின் சாதுரியத்தால் முறியடிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து பழைய கேடர் கம்பிகளைத் திருட்டுத்தனமாக கடத்திய பணியாளர்கள் சிலர் வைத்தியசாலை பாதுகாப்பு ஊழியர்களிடம் வெளிச்செல்வதற்கான பாஸைக் காண்பித்து பொருட்களைக் கடத்த முற்பட்டுள்ளனர்.

அச்சமயம் அப்பகுதியால் வந்த போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்திய நிபுணர் குறித்த பொருட்கள் தொடர்பாக விசாரித்த வேளை திருட்டு அம்பலமானது.

இதனைத் தொடர்ந்து கடத்தப்பட்ட பொருட்கள் மீளக் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப் படுகிறது. (எஸ்.26)

## தரச் சான்றிதழ் வழங்கல்

(வரணி)

வரணிப் பகுதி தேநீரசசாலைகளுக்கு சுகாதாரப் பகுதியினரால் தேநீர்ச்சாலைகளின் தரத்திற்கேற்றவாறு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளன.

இச்சான்றிதழ்கள் மக்கள் பார்வைக்கு தொங்க விடப்பட்டுள்ளது. A,B,C தரத்திலுள்ள உணவகங்களில் C தர உணவக உரிமையாளர்கள் படிப்படியாக தரம் உயர்த்தி B, A தரத்தில் கொண்டுவர வேண்டுமென அறி விக்கப்பட்டுள்ளது. (150)

## நாவற்குழிப் பிரதேசத்திற்கு ஆளுநர் சந்திரசிறி விஜயம்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழிப் பிரதேசத்தின் நாவற்குழி மேற்கு கிராமசேவையாளர் பிரிவிற்கு கடந்த மாதம் 28 ஆம் திகதி அன்று விஜயம் செய்த வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடினார்.

இதன்போது அப்பகுதி மக்கள் எதிர்கொள்ளும் கலாசார சீர்கேடுகள், சுகாதார சீர்கேடுகள் என்பன தொடர்பாக ஆளுநர் விரிவாக கலந்துரையாடினார். அப்பிரதேச மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை விரைந்து தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அம்மக்களிடம் ஆளுநர் உறுதி தெரிவித்தார்.

யுவர் பிரண்ட் பவுண்டேசன் நிறுவனத்தின் பிரதிநிதி, சிறுவர் நன்நடத்தை அதிகாரசபையின் உத்தியோகத்தர், நாவற்குழி மேற்கு சமூக அபிவிருத்தி நிலையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், பொதுமக்கள் ஆகியோர் இதில் கலந்துகொண்டார்கள்.

## நாய்களுக்கு கருத்தடைச் சிகிச்சை

(வரணி)

வரணிப்பிரதேச வளர்ப்பு நாய் களுக்கான கருத்தடைச் சிகிச்சை கடந்த புதன்கிழமை அந்தந்தப் பிரிவுகளில் இடம் பெற்றது.

வரணி வடக்கு J/339 கிராம அலுவலர் பிரிவில் உளள நாய்களுக்கு கறுக்காய் கந்தப்பெருமான் சனசமூக நிலைய முன்றலில் கருத்தடைச் சிகிச்சை இடம்பெற்றது.

எதிர்காலத்தில் நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் இச்சிகிச்சைகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (150)

## யாழ் மாநகர சபைக்குரிய காணிகளுக்கு எல்லை போடத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபைக்குச் சொந்தமான காணிகளுக்கு எல்லை வேலி போடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபையின் 5 ஆவது பொதுக்கூட்டம் யாழ். மாநகர சபை முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறறது.

இக் கூட்டத்திலேயே இததிடடம் முதல்வரினால் முன்மொழியப்பட்டது.

இத் தீர்மானத்திற்கு ஆளும் கட்சி உறுப்பினர்கள் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் தமது ஒத்துழைப்புக்களை வழங்குவதாகவும் தெரிவித்தனர்.

அத்தோடு, மாநகர சபை காணிகளைப் பொது மக்களின் காணிகளிலிருந்து அடையாளப் படுத்தும் நோக்கத்திற்காகவே மாநகர சபை காணிகள் இனங காணப்பட்டு எல்லைகள் போடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வுள்ளதாகவும் முதல்வர் மேலும் தெரிவித்தனர். (எஸ்)

## பேராசிரியர் மகேஸ்வரன் நினைவுப் பேருரை



(யாழ்ப்பாணம்)

அமரர் சிவபாதசுந்தரம் மகேஸ்வரனின் நினைவுப் பேருரை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்திய ஐதராபாத் பல்கலைக் கழகத் தின் துணைவேந்தரும் பௌதிகவியல் பேராசிரியருமான இராம கிருஸ்ணா இராமசாமி "குழப்பம் ஓர் இடை நிலை இராச்சியம்" என்னும் தலைப்பில் நினைவுப் பேருரையை நிகழ்த்தவுள்ளார்.

## நள்ளிரவில் நடமாடிய நால்வருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

சந்தேகத்திற்கு இடமாக நடமாடிய நான்கு பேரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கோப்பாய்ப் பகுதியில் கடந்த 26 ஆம் திகதி நள்ளிரவு 12 மணியளவில் குறித்த 4 பேரும் நடமாடிய வேளை கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நேற்று யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

மேற்படி வழக்கினை விசாரணை மேற்கொண்ட யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா 4 பேரையும் யூன் மாதம் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (எஸ்)

## யாழ். அஞ்சல் திணைக்கள எக்ஸ்பிரஸ் கூரியர் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட அஞ்சல் திணைகளத்தினால் எக்ஸ்பிரஸ் கூரியர் சேவை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வடமாகாண பிரதி அஞ்சல்மா அதிபர் ந. ரட்ணசிங்கம் நேற்று முன்தினம் காலை 9.00 மணிக்கு யாழ். பிரதான அஞ்சல் திணைக்கள அலுவலகத்தில் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

ஆரம்பிக்கப்பட்ட இக் கூரியர் சேவை வடமாகாணத்தில் 31 தபால் நிலையங்கள், 135 உப தபால் நிலையங்கள் ஊடாக 4 மணி நேர கடுகதி சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வட மாகாண பிரதி அஞ்சல்மா அதிபர் ந. ரட்ண சிங்கம் தெரிவித்தார்.

மிகவும் வலுமை வாய்ந்ததுடன், மக்களின் தொடர்பாடலுக்கு மிகவும் உதவியாக உள்ளது.

மனிதன் தோன்றிய காலத்தில் இருந்து பல்வேறு சேவைகளை வழங்கி இருக்கின்றது.

பல வாடிக்கையாளர்கள், எக்ஸ்பிரஸ் கூரியர் சேவையூடாக கடிதங்கள், பொதிகள் அனுப்பி வைத்தனர்.

கொழும்பில் கூரியர் சேவை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட போதிலும் வடமாகாணத்தில் ஏற்பட்ட யுத்தத்தின் பின்னர் தற்போது யாழ்ப்பாணத்தில் கூரியர் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதை இட்டு நாம் மகிழ்ச்சி அடைவதாகவும் தனது உரையில் வடமாகாண பிரதி அஞ்சல்மா அதிபர் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து பொதிகள் வாடிக்கையாளர்களினால் பிரதி அஞ்சல்மா அதிபரிடம் கையளிக்கப்பட்டன. வடமாகாண பிரதி அஞ்சல்மா அதிபர் எக்பிரஸ் கூரியர் விளம்பர வாகன பவனியை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட பெருமபாக அஞ்சல் அத்தியட்சகர் எஸ். ஜெயரட்ணம், பிரதம அஞ்சல் அதிபர் எ. தர்மராஜா, எ. லோகஞானம், அஞ்சல் மேற்பார்வை உத்தியோகத்தர் எஸ்குமாரவேல் மற்றும் அஞ்சல் அலுவலர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (எஸ்)

# தனியான தீயணைப்புப் பிரிவு வடமராட்சிக்கு அவசியம்

## நெல்லியடி வர்த்தக சங்கத் தலைவர்

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதிக்கென தனியான தீ அணைப்பு பிரிவு உருவாக்க வேண்டுமென நெல்லியடி வர்த்தக சங்கத்தினால் பல்வேறு தரப்பினருக்கு மகஜர் அனுப்பப்பட்டுள்ளது.

சங்கத் தலைவர் எஸ்.அகிலதாஸ் இது தொடர்பாக எமது செய்தியாளர் விசிந்தனுக்கு வழங்கிய பிரத்தியேக பேட்டியில் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் மின் ஒழுக்கு காரணமாக நெல்லியடிப் பகுதியில் உள்ள பிரபல பிளாஸ்ரிக் கடை எரிந்து நாசமாகியது. இதனையடுத்தே பொது மக்ளின் வேண்டுகோளுக்கிணங்க இந்த மகஜர் அனுப்பப்பட்டுள்ளது.

வடமராட்சிப் பிரதேசத்தில் உளள உள்ளூராட்சி சபைகளான பருத்தித்துறைப் பிரதேச சபை பருத்தித்துறை நகரசபை, கரவெட்டிப் பிரதேச சபை, வல்வெட்டித்துறை நகர சபை ஆகிய சபைகளுக்கும் வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள கரவெட்டிப் பிரதேச செயலகம், மருதங்கேணி பிரதேச செயலகம், பருத்தித்துறை பிரதேச செயலகங்களுக்கும் தனியான ஓர் தீ அணைப்பு நிலையத்தை உருவாக்கி செயற்பட வைக்க வேண்டும் எனவும் . அதற்கு நெல்லியடி வர்த்தக சங்கம் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

நெல்லியடி நகர பகுதியில் மட்டுமல்லாது வடமராட்சி பூராகவும் கடந்த காலங்களில் கடைகள் மற்றும் வீடுகளில் மின ஒழுக்கு தீ விபத்து ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். ஆனாலும் அவை பெரும் இழப்பை ஏற்படுத்தவில்லை.

தற்போது இடம்பெற்ற இச் சம்பவம் பெரும் நஷ்டத்தையும் கடையில் சேதத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

அன்று மின் ஒழுக்கு ஏற்பட்டு தீ பற்றி எரிந்து கொண்டிருக்கும் அதேவேளை அரை மணி நேரத்தின் பின்னர்தான் உள்ளூராட்சிமன்ற தண்ணீர் பவுசர்கள் வந்து தீயை ஓரளவு கட்டுப்பாட்டுக்கு கொண்டு வந்தன.

ஆனாலும் அது தவிர்க்க முடியாது இருந்தும் எமது பகுதியில் ஓர் தீயணைப்பு படை இருந்திருந்தால் இப் பாரிய சேதம் வந்திருக்காது.

எனவே, எதிர்காலத்திலும் இது போன்ற சேதங்கள் ஏற்படாமல் இருக்க சகலரும் ஒத்துழைப்பு நல்குவார்கள் என்ற நம்பிக்கை எமது சங்கத்திற்கு உண்டு. அதற்கான வழிவகைகளை செய்ய சங்கம் ஒரு போதும் பின் நிற்காது எனத் தெரிவித்துள்ளார். (116)

# நெல்லியடி - ஆலங்கட்டை வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(வடமராட்சி)

வடமராட்சி தெற்கு மேற்கு கரவெட்டிப் பிரதேச சபைக்குட்பட்ட நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திற்குச் செல்லும் ஆலங்கட்டை வீதி நீண்டகாலமாகப் புனரமைப்புச் செய்யப்படாமல் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதியானது சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரம் இடையிடையே வீதி உடைந்து சேதமாகி இருப்பதுடன், பாரிய குன்றும் குழியுமாக காட்சியளிக்கின்றது. இதனால் அவ்வீதி ஊடாக பயணிக்கும் பயணிகள் உட்பட பாடசாலை மாணவர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர், பொது மக்கள் பலர் தினமும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே போக்குவரத்துக்கும் பிரதான வீதியாக இருக்கும் இவ் வதியை உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுத்து செப்பனிட்டுத் தருமாறு இப்பகுதிப் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (116)

# யமுனாபாரி இனத்தைப் பெருக்க ஆட்டுக்கடாக்கள் கொள்வனவு

(வடமராட்சி)


செயற்கைமுறைச் சினைப்படுத்தலுக்கான பேராதனை தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் செயற்கை முறை சினைப்படுத்தல் நிலையத்திலிருந்து 21 யமுனாபாரி ஆட்டுக்கடாக்கள் யாழ்.மாவட்டத்திற்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது,

நல்லின யமுனாபாரி ஆட்டுகடாவை செயற்கை முறை சினைப்படுத்தலுக்காக யாழ். மாவட்டத்தில் உள்ள பிரிவு கால்நடை அபிவிருத்தித் திணைக்களங்களின் ஊடாக கொள்வனவு செய்யப்பட்டது.

அந்த வகையில் பருத்தித்துறை பிரிவில் 2 யமுனாபாரி ஆட்டுக்கடாவையும், கரவெட்டிப் பிரிவில் 4 யமுனாபாரி ஆட்டுக்கடாவும், கோப்பாய் பிரிவில் 7 யமுனா ஆட்டுக்கடாவும், நல்லூர் பிரிவில் 5 யமுனாபாரி ஆட்டுக் கடாவும், உடுவில் பிரிவில் 3 யமுனாபாரி ஆட்டுக்கடக்களையும் கடந்த சனிக்கிழமை பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

யமுனாபாரி ஆட்டுக்கடா ஒன்று 20 ஆயிரம் ரூபா



தொடக்கம் ஒரு இலட்சத்து 5 ஆயிரம் வரையும் கொள்வனவு செய்யப்பட்டது.

யமுனாபாரி ஆட்டுக்கடாவின் மூலம் இலங்கை பூராகவும் உள்ள அனைத்து வகையான ஆடுகளுக்கும் சினைப்டுத்தி யமுனாபாரி இனத்தைப் போன்று பெருக்கி, ஆட்டுப்பால் உற்பத்தியைப் பெற்றுக் கொள்வதே இதன் நோக்கமாகும். (116)

# வவுனியாவில் சேக்கிழார் விழா

(வவுனியா)

வவுனியா சேக்கிழார் மன்றத்தின் ஏற்பாட்டில் சேக்கிழார் விழா இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு சிந்தாமணிவிநாயகர் ஆலய கலாசார மண்டபத்தில் சேக்கிழார் மன்றத்தலைவர் ஐயம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவின் பிரதம விருந்தினராக வவுனியா பிரதேச செயலாளர் அ. சிவபாலசுந்தரன், சிறப்புவிருந்தினர்களாக வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா, வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ப. கணேசலிங்கம், வவுனியா சேக்கிழார் மன்ற ஸ்தாபகச் செயலாளர் சி.வி.பேரம்பலம், வவுனியா சுகாதாரவைத்திய அதிகாரி வைத் திய கலாநிதி ப. சத்தியலிங்கம் ஆகியோரும் கௌரவ விருந் தினர்களாக வேப்பங்குளம் இந்து அன்பக பொறுப்பாளர் செல்வி கு.ஜெயராணி, வவு னியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் தலைவர் நா. சேனாதிராஜா, வவுனியா இந்துமாமன்றத்தின் செயலாளர் சீ.ஏ. இராமசாமி, கோவிறகுளம் சிவன் கோவில் பரிபாலனசபை செயலாளர் ஆ. நவரத்தினராசா, வவுனியா மாணிக்கவாசகர் சபை தலைவர் இறைபணிச்செம்மல் வை. செ.தேவராசா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ்விழாவில் வவுனியா தேசியக் கல்வியியல் கல்லூரி உபபீடாதிபதி கு.சிதம்பரநாதனின் சிறப்புசொற்பொழிவும், கலாநிதி அகளங்கன் தலைமையில் சேக்கிழார் சுவாமி காட்டிய சைவபெருநெறியும் சமுக சமத்துவமும் எனும் தலைப்பில் கருத்துரைகளும் இடம் பெறவுள்ளது.

# பெண்ணின் தலையில் தாக்கி போலி நகையைத் திருடிய கள்வன்


(வடமராட்சி)

போலியான நகையினை அணிந்து சென்ற பெண் ஒருவரின் தலையில் தடியால் அடித்து நகையினை திருடிச் சென்ற சம்பவம் ஒன்று கடந்த புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு துன்னாலை வடக்குப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இப்பகுதியில் வசிக்கும் திருமதி சாந்தரூபி குமாரவேல் (வயது 40) என்ற பெண்மணியே திருடனின் அடிக்கு இலக்காகி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் பணியாற்றும் இவர் தனது வேலையை முடிததுவிட்டு வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த சமயம், மாலை நேரத்தில் வீட்டின் ஒழுங்கையின் குறுக்கே முள்ளுக் கம்பிகட்டியிருந்ததைத் தெரியாத பெண் மணி அதனுடன் மோதுண்டு கீழே விழுந்தார். பின்னர் அருகில் உள்ள பற்றைக்குள் இருந்த வந்த இனம்தெரியாத திருடன் தலையில் பலமாக அடித்து உடனே வாயைப் பொத்தியதுடன், கையில் அணிந்த போலி நகையான காப்பைக் கழற்றிச் சென்று தப்பி ஓடியுள்ளார். (116)



நவாலி ஊன்றுகோல் அரசபணியகத்தினர் அண்மையில் நடாத்திய உலக அன்னையர் தினவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட் முதியோர் மேம்பாட்டு உதவியாளர் ஸ்பெல்மன் பாலகுமாரி அன்னையர்களுக்கு சேலை வழங்குவதைக் காணலாம். (104)

# முரசின் இன்றைய பலன்

(03.06.2012 – ஞாயிற்றுக்கிழமை)

நந்தன வருஷம் வைகாசி மாதம் 21 ஆம் திகதி. சதுர்த்தசி முன்னிரவு 7.41 வரை.
நட்சத்திரம் விசாகம் பிற்பகல் 1.06 வரை. மரணயோகம், வைகாசி விசாகம்
இராகுகாலம் 4.22 - 5.52 வரை. சுபநேரம் 8.52 - 10.22 வரை.
எமகண்டம் 11.52 - 1.22 வரை. குளிகைகாலம் 2.52 - 4.22 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | மனத்தெளிவு, அன்னியரால்தொல்லை, குடும்ப வளம் உயரும், திடீர் வாய்ப்புகள் ஏற்படும். |
| ரிஷபம் | தொழிலில் தேர்ச்சி, பூர்வீக சொத்துக்களால் இலாபம், சஞ்சலம், மகிழ்ச்சி. |
| மிதுனம் | புதிய வாய்ப்புகள், எதிர்பாராத இலாபம் வரும், குடும்பத்தில் மனதில்நிம்மதி, கடன் தொல்லைதீரும். |
| கடகம் | கல்வியில் தேர்ச்சி, பணியில் அவதானம், உறவினரால் சஞ்சலம், வாக்குவாதங்களைத் தவிர்க்கவும். |
| சிம்மம் | வாகன சுகம், நண்பரிடையே கருத்து வேறுபாடு, தொட்டதெல்லாம் துலங்கும், சுபகாரியங்கள். |
| கன்னி | இனசன ஆதரவு, வீண் பிரச்சினைகள் ஏற்படும், பொன்பொருள் சேரும், பணியில் இடையூறு. |
| துலாம் | தான தர்மம், சுமாரான குடும்ப ஒற்றுமை, குலதெய்வ வழிபாடு அவசியம், எதிர்பாராத இடமாற்றம். |
| விருச்சிகம் | குடும்ப சுகம், இடமாற்ற அதிருப்தி, மனதில் தெளிவு ஏற்படும், கணவன் மனைவியிடையே ஒற்றுமை. |
| தனுசு | சுபச் செலவுகள், பணவருவாயில் தாமதம், தொழிலில் தகராறுகள் தீரும், பெற்றோர் அனுசரணை. |
| மகரம் | வெற்றிகள் கிட்டும், உடலில் தளர்ச்சி, குடும்பத்தில் ஏட்டிக்கு போட்டி, சகோதரர் உதவி. |
| கும்பம் | எதிலும் இலாபம், உழைப்பிற்கேற்ப ஊதியம், உறவினரால் செலவு, அகலக்கால் வைக்கவேண்டாம். |
| மீனம் | காரிய இலாபம், ஆடம்பர வாழ்க்கை, சகல முயற்சிகளிலும் வெற்றி, அயலவருடன் ஒற்றுமை. |



(படப்பிடிப்பு : சுரேஷ்)

## பிரதேச செயலகங்களுக்கான மாவட்ட மட்ட விளையாட்டு

# கோலூன்றலில் கணதீபன் சாதனை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டி நேற்று யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இதில் பல போட்டிகள் இடம்பெற்றது. இதில் ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் தெல்லிப்பளைப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கணதீபன் புதிய சாதனை ஒன்றை ஏற்படுத்தினார். இது வரை மாவட்ட மட்டத்தில் 3.65 அடைவு மட்டத்தை அவர் 4.26 மீற்றர் தூரம் பாய்ந்து புதிய சாதனையை ஏற்படுத்திக்கொண்டார்.

இதேவேளை, இந்த வருடம் மேலும் இரண்டு சாதனைகள் முறியடிக்கப்பட்டுள்ளது. இதில் 1000 மீற்றர் ஒட்டப் போட்டியில் நெடுந்தீவு பிரதேசசெயலகத்தைச் சேர்ந்த ஞானேஸ்வரன் 35. 12.01 நிமிடங்களில் ஓடி முடித்து புதிய சாதனையை ஏற்படுத்தினார். முன்னர் 35. 16.00 நிமிட அடைவு மட்டே சாதனையாக இருந்ததது.

தட்டெறிதல் போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஹரிகரன் தனது கடந்தாண்டு சாதனையை முறிடியத்துள்ளார். இவர் கடந்தாண்டு 38. 10 மீற்றர் எறிந்து சாதனை படைத்திருந்தார். இந்தாண்டு 38. 20 மீற்றர் எறிந்து புதிய சாதனையை ஏற்படுத்திக் கொண்டார்.

இதேவேளை, மாவட்ட மட்டப் போட்டியின் மூதல் நாள் ஆட்டம் நேற்று சிறப்பான முறையில் பல விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றது. இறுதி நாள் நிகழ்வு இன்றைய தினம் வெகு சிறப்பான முறையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி ரூபசிங்கம் தெரிவித்தார். (எஸ்.பி., 20)

# புது விதி செய்வோம்

(லண்டன்)


சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் ஒவர் ஒன்றில் வீசக் கூடிய பௌண்சர் பந்துகளின் எண்ணிக்கையை இரண்டாக அதிகரிக்க சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் பேரவையின் கிரிக்கெட் செயற்குழு இந்த சிபாரிசினை செய்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன் 30 யார் தூரத்திற்கு வெளியே களத் தடுப்பில் ஈடுபடக் கூடிய வீரர்களின் எண்ணிக்கையை ஐந்தில் இருந்து நான்காகக் குறைப்பதற்கும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

கோலாலம்பூரில் இந்த மாத இறுதியில் நடைபெறவுள்ள சர்வதேச கிரிக்கெட் பேரவையின் நிர்வாக அதிகாரிகளின் சந்திப்பில் இந்தச் சிபாரிசுகள் ஏற்றுக்கொள்ளப்படுமாயின் அவை நடைமுறைப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் பந்துவீச்சு பவர் பிளே முறைமை நீக்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.



# பிரச்சினைகள் சகஜம்

(மும்பை)

எல்லா அமைப்பிலுமே சில பிரச்சினைகள், சர்ச்சைகள் இருக்கத்தான் செய்யும். அது போலவே ஐ.பி.எல். தொடரிலும் சில சர்ச்சைகள் எழுந்துள்ளன. அதற்காக, அந்த தொடர் முழுவதுமே மோசமானது என்று ஒரேயடியாக ஒதுக்கிவிட முடியாது என சச்சின் டெண்டுல்கர் தெரிவித்தார். ஐ.பி.எல். தொடரில் ஆட்ட நிர்ணயச் சர்ச்சை எழுந்தது நல்ல முன்னுதாரணம் அல்ல. நாம் எப்போதுமே சிறந்த மனிதர்களின் வெற்றிப் பாதையைப் பின்பற்ற வேண்டும். சரியான திசையில் பயணம் செய்து, அனைத்து சிறந்த தகுதிகளையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். எல்லா அமைப்பிலுமே சில குறைபாடுகள், பிரச்சினைகள் இருப்பது சகஜம். அதற்காக ஒட்டுமொத்த அமைப்புமே மோசமானது என்று ஒதுக்கிவிட முடியாது. உலக கோப்பையை வென்றதால் ஏற்பட்ட அதீத தன்னம்பிக்கையும், அலட்சியமுமே இங்கிலாந்திலும், அவுஸ்ரேலியாவிலும் டெஸ்ட் தொடரில் மோசமாக தோற்றதற்கு காரணம் என்பது சரியல்ல எனவும் அவர் தெரிவித்தார்.



# மானம் காத்தது பிரேசில்

அமெரிக்க அணிக்கு எதிரான சர்வதேச 'நட்பு' உதைபந்து போட்டியில் பிரேசில் அணி அசத்தல் வெற்றி பெற்றது. பிரேசில், அமெரிக்க அணிகள் இடையிலான 'நட்பு' உதைபந்து போட்டி அமெரிக்காவின் வோஷிங்டனில் நடந்தது. போட்டியில் 12ஆவது நிமிடத்தில் கிடைத்த 'பெனால்டி' வாய்ப்பில் பிரேசில் வீரர் நெய்மர் முதல் கோல் அடித்தார். 26ஆவது நிமிடத்தில் நெய்மர் அடித்துத் தந்த பந்தை தியாகோ சில்வா தலையால் முட்டி கோலாக மாற்றினார். அமெரிக்காவின் கோமஸ் (45ஆவது நிமிடம்) பதில் கோல் அடித்தார். பின், இரண்டாவது பாதி யில் மார்செலொ, பாட்டோ ஆகியோர் 52,87ஆவது நிமிடங்களில் தலா ஒரு கோல் அடித்தனர். முடிவில் 4-1 என்ற கோல் கணக்கில் பிரேசில் அணி வெற்றி பெற்றது. சுவிட்சர்லாந்தில் நடந்த மற்றொரு போட்டியில் ஸ்பெயின் அணி 4-1 என்ற கோல் கணக்கில் தென் கொரியாவை வென்றது.

# கனவு பலித்தது



(ஆன்டிகுவா)

டெஸ்ட் அணிக்கு தேர்வு செய்யப்பட்டதன் மூலம், எனது நீண்ட நாள் கனவு பலித்தது என மேற்கிந்தியத்தீவு அணியின் சுழற்பந்து வீச்சாளர் சுனில் நரைன் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிராக மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வரும் மேற்கிந்த்தியத்தீவுகள் அணியில், வேகப்பந்துவீச்சாளர் கீமர் ரோச் காயம் காரணமாக விலகினார். இதனால் மாற்று வீரராக சுனில் நரைன் தேர்வு செய்யப்பட்டார்.

இதுகுறித்து சுனில் நரைன் கூறியது: முதன்முறையாக மேற்கிந்தியத்தீவு டெஸ்ட் அணியில் இடம் பிடித்தது மகிழ்ச்சி அளிக்கிறது. இதன்மூலம் நீண்ட நாள் கனவு நிறைவேறியது. இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் மற்றும் ருவெண்ரி - 20 தொடரில் விளையாடும் வாய்ப்பு கிடைக்கும் என காத்திருந்தேன். ஆனால் டெஸ்ட் அணியில் இடம் கிடைத்ததை சற்றும் எதிர்பார்க்கவில்லை.

விரைவில் இங்கிலாந்து செல்ல உள்ளேன். வாய்ப்பு கிடைக்கும் பட்சத்தில், கடைசி டெஸ்டில் பங்கேற்று அணியின் வெற்றிக்கு போராடுவேன். இப்போட்டி, அடுத்து நடக்கவுள்ள ஒருநாள் மற்றும் ருவெண்ரி 20 போட்டிகளுக்கான சிறந்த பயிற்சியாக அமையும் என நம்புகிறேன்.

இங்கிலாந்து மண்ணில் இதுவரை விளையாடியது கிடையாது. மேற்கிந்தியத்தீவு மற்றும் இந்திய ஆடுகளங்கள் குறித்து நிறைய விடயங்கள் தெரிந்துள்ளேன். ஆனால் இங்கிலாந்து ஆடுகளங்கள் முற்றிலும் மாறுபட்டது. இத்தொடரில் முழுத்திறமையை வெளிப்படுத்தி சாதிக்க முயற்சிப்பேன்.

இந்த ஆண்டு ஐ.பி.எல். போட்டி என்கு திருப்பு முனையாக அமைந்ததில் மகிழ்ச்சி. பாகிஸ்தான் வீரர் அசிம் அக்ரம் பல பந்து வீச்சு நுணுக்கங்களை எனக்கு கற்பித்தார். கொல்கத்தா அணியிலுள்ள அனைவரும் புரிந்துணர்வுடன் விளையாடினோம். இதுவே நாம் கிண்ணம் வெல்ல முக்கிய காரணம் எனத் தெரிவித்தார்.

# ஏன் இந்த ஆசை

(புதுடில்லி)

கிரிக்கெட்டை தொடர்ந்து ஷாருக்கானின் கவனம் தற்போது கால்பந்து பக்கம் திரும்பியுள்ளது. இந்தியாவில் உள்ள முன்னணி கால்பந்து கழகங்களில் ஒன்றான கோவாவை சேர்ந்த டெம்போ அணியின் 50 சதவீத பங்குகளை வாங்க ஷாருக்கான் திட்டமிட்டுள்ளார். இதையொட்டி அவர் டெம்போ கழகத்தின் உரிமையாளர் ஸ்ரீனிவாசை இரண்டு முறை சந்தித்து பேசியுள்ளார். தொடர்ந்து பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

ஷாருக்கானின் இந்த ஆசை பெரும் விபரீதங்களையே ஏற்படுத்தும் என விளையாட்டு ஆர்வலர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

# இவானோவிச் அதிர்ச்சித் தோல்வி



(பாரிஸ்)

பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு 3ஆவது சுற்றில், முன்னாள் முதல் நிலை வீராங்கனை அவா இவானோவிச் (சேர்பியா) அதிர்ச்சித் தோல்வி அடைந்து வெளியேறினார்.

மூன்றாவது சுற்றில் இத்தாலி வீராங்கனை சாரா எர்ரானியுடன் நேற்று முன் தினம் மோதிய இவானோவிச் 6-1, 5-7, 3-6 என்ற செட் கணக்கில் போராடித் தோற்றார். மற்றொரு 3ஆவது சுற்று ஆட்டத்தில் ஸ்லோனி ஸ்டீபன்ஸ் (அமெரிக்கா) 6-3, 6-2 என்ற நேர் செட்களில் மதில்டி ஜோகன்சனை (பிரான்ஸ்) வீழ்த்தினார். நட்சத்திர வீராங்கனை கரோலின் வோஸ்னியாக்கி (டென்மார்க்) தனது 2ஆவது சுற்று ஆட்டத்தில் அவுஸ்ரேலியாவின் ஜர்மிளா கஜ்டசோவாவுடன் மோதினார். அபாரமாக விளையாடிய வோஸ்னியாக்கி 6-1, 6-4 என்ற நேர் செட்களில் வென்று 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார். ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இங்கிலாந்தின் ஆண்டி மர்ரே 1-6, 6-4, 6-1, 6-2 என்ற செட் கணக்கில் ஜார்கோ நியமினனை (பின்லாந்து) வீழ்த்தி 3ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றார். ஆண்கள் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியாவின் லியாண்டர் பயஸ் அலெக்சாண்டர் பியா (ஆஸ்திரியா) ஜோடி 6-1, 6-7 (2-7), 6-3 என்ற செட் கணக்கில் இத்தாலியின் சைமன் போலெல்லி பேபியோ பாக்னினி ஜோடியை வீழ்த்தியது.

# நான் ரெடி

இந்திய டெஸ்ட் அணியின் கப்டன் பொறுப்பை ஏற்க தயாராக உள்ளேன். இதனை மிகப் பெரும் கௌரவமாக கருதுவேன் என இந்திய அணி யின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கௌதம் கம்பீர் தெரிவித்தார். இந்தச் சவாலைச் சந்திக்க மனதளவில் தயாராக இருக்கிறேன். ஆனாலும், என்னைப் பொறுத்தவரை கப்டனால் மட்டும் சாதிக்க முடியாது. வெற்றிகரமான அணியால் தான் வெற்றிகரமான கப்டனை உருவாக்க முடியும். மாறாக வெற்றிகரமான கப்டனால்,வெற்றிகரமான அணியை உருவாக்க முடியாது. சில போட்டிகளில் விரைவாக அவுட்டாகி விட்டால், அணியில் இருந்து நீக்கி விடுவார்களோ என்ற அச்சம் எனக்குள் எப்போதும் இருக்கும். ஐ.பி.எல்., தொடரை தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை தேவையில்லாதது. பெரும்பாலான போட்டிகளில் கடைசி ஓவரில் தான் முடிந்தன. இது போட்டியின் தரத்தை சுட்டிக் காட்டியது. இந்திய அணிக்காக விளையாடும் வாய்ப்பை பல வீரர்கள் ஐ.பி.எல். மூலம் பெற்றுள்ளனர். களத்துக்கு வெளியே நடக்கும் சில தவறான சம்பவங்களுக்கு, ஐ.பி.எல். தொடர் மீது பழி சுமத்தக் கூடாது எனத் தெரிவித்தார்.

# பதக்கம் வெல்ல இறுதி வரை முயற்சிப்பேன்

## ஆசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டி குறித்து பவித்திரா



(அளவெட்டி)

என்னுடைய தெரிவை பயனுள்ளதாக்கி, என் மீது நம்பிக்கை கொண்டுள்ள இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தின் எண்ணத்தைப் புரிந்து கொண்டு கொழும்பில் நடைபெறவுள்ள ஆசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் பதக்கம் வெல்ல இறுதி வரை என்னாலான முயற்சி மேற்கொள்வேன் என அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவி அ.பவித்திரா தெரிவித்தார்.

15ஆவது ஆசிய கனிஷ்ட மெய்வல்லுநர் விழாவில் இலங்கை சார்பாக போட்டியிடவுள்ளமை குறித்து எமது செய்தியாளர் தயாளபாலன் கருத்து கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் 17 வயதிலிருந்து தேசிய மட்ட கோலூன்றிப் பாய்தலில் சாதனையை நோக்கிப் பயணிக்க ஆரம்பித்தேன். நான் ஆரம்பத்தில் இந்நிகழ்வை பார்த்த ஆர்வம் மட்டுமல்லாமல் எனது ஆரம்ப பயிற்றுநர்களாகவிருந்த உடற்கல்வி ஆசிரியர் த. பாகீஸ்வரன் மற்றும் பொறுப்பாசிரியர் சுபாஸ்கரன் ஆகிய இருவரினதும் வேண்டுகோளின்படியும் இதில் ஈடுபடத் தொடங்கினேன். கூடுதலான காலத்தில் நான் த. பாகீஸ்வரன் அவர்களிடம் அதிக பயிற்சியை எடுத்து வந்ததுடன் கடந்த ஒரு வருடமாக அவரிடமே பயிற்சியை முற்று முழுதாக எடுத்து வருகின்றேன்.

இவ்வாறு தேசிய மட்டத்தில் நான் 20 வயதுப் பிரிவிலே முதல் கோலூன்றிப் பாய்தல் வீராங்கனையாக இருக்கும் பட்சத்தால் நான் எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறவுள்ள ஆசிய மட்ட கனிஷ்ட மெய்வன்மைப் போட்டியில் கோலூன்றிப் பாய்தல் 20 வயதுப் பிரிவில் கலந்துகொள்ளவுள்ளேன். அந்நிகழ்வில் கலந்துகொள்வதென்பது சாதாரண விடயமன்று. அதுவே பெரிய விடயம். இப்போட்டியில் சாதனை உயரமான 4.20 மீற்றர் காணப்படுகின்றது. அதனை நோக்கிப் பயணிப்பது கடினம். இருந்தாலும் இப்போட்டியில் நான் எனது அடைவு மட்டத்தை உயர்த்துவது அதாவது, 3.30 மீற்றருக்கு மேல் பாய்வதற்கு முயற்சி செய்வதே இப்போட்டியில் எனது இலக்கு. இருந்தாலும் நான் என்னால் முடிந்தளவு முயற்சி செய்து இப்போட்டியில் பங்கேற்பேன். இவ்வாறு நான் இந்நிலைக்கு வருவதற்கு முக்கிய காரணம் த. பாகீஸ்வரன் அவர்கள் மற்றும் கல்லூரி அதிபர் ஏனைய ஆசிரியர்கள் மற்றும் பல்வேறு நாடுகளிலும் இயங்குகின்ற எம்பாடசாலை பழைய மாணவர்கள் கிளைகள் முக்கியமாக இன்னொருவர் எனது பெற்றோர் போன்றவர்களின் அயராத உழைப்பும் அயராத ஈடுபாடுமே காரணம்.

இவ்வாறு என்னைப் போன்று இன்னும் மேலாக மிளிர நினைக்கும் வளரும் பிள்ளைகள் தொடர்ந்து பயிற்சி செய்து காலை, மாலை என விருப்புடன் பெரிய பெரிய இலக்குகளை நோக்கிப் பயணிக்கும் பட்சத்தில் கட்டாயமாக தேசிய, ஆசிய வீரர்களாக மிளிர முடியும். இவ்வாறு நான் பாடசாலையில் இருந்தும் பங்கு பற்றும் காலத்திற்குள்ளேயே தேசிய மட்ட அதியுயர் சாதனை உயரமாக தற்போது உள்ள 8.25 ஐ முறியடிப்பதே எனது இலக்கு. நான் இவ் இலக்கை நோக்கி தேசிய கோலூன்றிப் பாய்தல் முதல் வீராங்கனையாக வருவேன் என்பதில் ஐயமில்லை. அதற்கான நான் தொடர்ந்து எமது பயிற்றுநரின் உதவி யுடன் பாடுபடுவேன். அவரின் உழைப்பு இருக்கும் பட்சத்தில் நான் கண்டிப்பாக வெற்றியீட்டுவேன் எனவும் தெரிவித்தார். (93)



# பொன்னாலை வரதராஜா சம்பியன்

(மல்லாகம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையில் 14 வயதுப் பிரிவினர்களுக்கான மைலோ வெற்றிக்கிண்ண வலைப்பந்தாட்டப் போட்டியில் பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயம் சம்பியனாகியுள்ளது. மைலோ வெற்றிக்கிண்ணத்திற்கான வலைப்பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டி மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

இப்போட்டியில் பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயமும் வடமராட்சி மெதடிஸ் மகளிர் கல்லூரியும் மோதிக்கொண்டன. பொன்னாலை வரதராஜப் பெருமாள் அணி முதல் பாதி ஆட்டத்தில் 7 : 6 என்ற அடிப்படையில் புள்ளிகளைப் பெற்றுக்கொண்டது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் தலா 03 புள்ளிகளைப் பெற்று போட்டி சமநிலையில் முடிவடைந்தது. ஆட்ட நிறைவில் பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலயம் 10 : 9 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

இப்போட்டித் தொடரில் மூன்றாமிடத்தை அராலி சரஸ்வதி வித்தியாலயமும், நான்காமிடத்தை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் பிடித்துக் கொண்டன. இந்த நான்கு பாடசாலை அணிகளும் தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (12)

# 36 இடங்கள் பெற்றது அளவெட்டி அருணோதயா

விளையாட்டுச் செய்திகள்

(அளவெட்டி)

பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகளில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி 36 இடங்களைப் பெற்றுள்ளது.

இதில் 14 முதலிடத்தையும், 12 இரண்டாமிடத்தையும், 10 மூன்றாமிடத்தையும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி பெற்றுள்ளது.

அதன் விபரம் வருமாறு:

21 வயதின் கீழ் பெண்களுக்கான அஞ்சலோட்டம் 1ஆம் இடம், 21 வயதின் கீழ் ஆண்களுக்கான அஞ்சலோட்டம் இரண்டாமிடம், 21 வயதின் கீழ் பெண்களுக்கான முப்பாய்ச்சல், மற்றும் நீளம் பாய்தலில் ப. பிரியதர்சினி முதலாம் மற்றும் மூன்றாமிடம், அதே வயதுப் பிரிவில் கோலூன்றிப் பாய்தலில் நந்தபாலானன் இரண்டாமிடம், 400 மீற்றர் தடை தாண்டல் நந்தலாலன் மூன்றாமிடம், கோலூன்றிப் பாய்தல், உயரம் பாய்தலில் ச. சனுசா முதலாம், இரண்டாமிடம், இ. காவேரி 100 மீற்றர் மற்றும் 200 மீற்றரில் முதலாம், இரண்டாமிடம், இ. யக்ஷனா கோலூன்றிப் பாய்தல், நீளம் பாய்தல், மூன்றாமிடம், ர. நிருசன் கோலூன்றிப் பாய்தல் முதலாமிடம், உ. அகிலன் 100 மீற்றரில் இரண்டாமிடம்.


19 வயதின் கீழ் பெண்களுக்கான முப்பாய்ச்சல், கோலூன்றிப் பாய்தல், நீளம் பாய்தல் அ. பவித்திரா முதலாமிடம், அதே வயதுப் பிரிவில் கோலூன்றிப் பாய்தலில் இ.மேரி பவுஸ்ரீனா மூன்றாமிடம், ரு. டிலக்சனா இரண்டாமிடம், ஆண்கள் பிரிவில் பா. லவணன் முதலாமிடம்.


17 வயதின் கீழ் கோலூன்றிப் பாய்தலில் இ. ஜனனி மூன்றாமிடம், ம. ஜென்சிகா இரண்டாமிடம், ம. சார்ள்ஸ் அன்ரனி இரண்டாமிடம், பா. நிதுசன் முதலாமிடம்.

15 வயதின் கீழ் தட்டெறிதலில் து. துவாரகன் மூன்றாமிடம், வா. சாத்வீகா நீளம் பாய்தலில் மூன்றாமிடம், உ. தீபிகா 110 மீற்றர் தடை தாண்டலில் மூன்றாமிடம்.

13 வயதின்கீழ் நீளம் பாய்தலில் சி. கம்சிகன் மூன்றாமிடம்.

11 வயதின் கீழ் நீளம் பாய்தல் மோ. மரின்சியா இரண்டாமிடம், ச. கம்சினி இரண்டாமிடம். (93)





இலங்கை கால்பந்தாட்ட சம்மேளன உயர் அதிகாரிகள் குழு ஒன்று கடந்த வியாழக்கிழமையன்று யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக்கைச் சந்தித்துள்ளது. இதில் யாழ்ப்பாணக் கால்பந்து லீக்கின் செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளதுடன் பலமான கால்பந்தாட்ட அணிகளை எதிர்காலத்தில் உருவாக்குவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது. இதில் யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக்கின் தலைவர் அன்ரனிப்பிள்ளை உரையாற்றுவதையும், பங்குகொண்டவர்களையும் காணலாம். (படப்பிடிப்பு : சுரேஷ்)

## இன்றைய ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிறிமியர் லீக் (ஜே.பி.எல்.) ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் இன்றைய போட்டியில் யாழ். சென்றல் அணியை எதிர்த்து கிறாஸ் கோப்பர்ஸ் அணி மோதவுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள இப்போட்டி இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ள அதேவேளை, நாளை திங்கட்கிழமை மாலை 1.30 மணிக்கு கொக்குவில் கே.சீ.சீ.சீ. அணியை எதிர்த்து யாழ். சென்றலைட்ஸ் அணி மோதவுள்ளது.

இதில் கொக்குவில் கே.சீ.சீ.சீ. அணி மோதிய முதல் போட்டி சமநிலையில் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# முதலில் முட்டாள்தனத்திலிருந்து விடுதலை பெறவேண்டும்!

- நடேசன்

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஐந்து பில்லியன் டொலர்கள் வியாபாரம் நடக்கிறது. 100 மில்லியன் டொலர்களை இந்திய கம்பனிகள் முதலீட்டியுள்ளன என்று இந்திய உயர் அதிகாரி ஒருவர் சமீபத்தில் கூறினார். இந்தப்பொருளாதாரத்திற்கு அப்பால் நான் வியந்தது இந்த இரு நாடுகளுக்கும் இடையில் பயணிப்பவர்களின் எண்ணிக்கையைக் கண்டுதான்.

இலங்கைக்குப்போகும் சந்தர்ப்பங்களில் சில தடவை புதுடெல்லி மற்றும் சென்னை வழியாக




போகும் போது அந்த விமானத்தில் வரும் இந்தியர்களின் தொகையைக் கண்டு வியப்படைவேன். பலர் வியாபார நிமித்தமாக சென்றாலும் பெரும்பாலானவர்கள் உல்லாசப் பிரயாணிகள். நாடுகளைப்பயணத்தின் பலனாக அறிந்து கொள்வார்கள். குறிப்பாக அதற்குப் பாலம் அமைப்பவர்கள் ஊடகவியலாளர்களும் எழுத்தாளர்களும்தான்.

சமீபத்தில் கொழும்பில் ஒரு சிங்கள் நண்பரைச் சந்திப்பதற்காக அவரது வீட்டுக்குச் சென்ற போது, அங்கு இந்திய ஆங்கில பத்திரிகைக்கும் இலங்கை பத்திரிகைக்கும் எழுதும் இந்திய தமிழ் ஊடகவியலாளரைச்சந்தித்தேன். “இப்பொழுதுதான் ஜனாதிபதி ராஜபக்ஷவை சந்தித்துவிட்டு வருகிறேன். அடுத்து தமிழ் தேசியகூட்டமைப்பு தலைவர் சம்பந்தனை பார்க்கப் போகிறேன்” என்று அவர் சொன்னார். சென்னையில் அவர் எனக்கு ஏற்கனவே அறிமுகமானவர் என்பதால் அவரது இந்தச் சந்திப்புகள் தொடர்பாக ஆச்சரியப்பட்டேன். இவர்போன்ற பல ஊடகவியலாளர்கள் ஒரு செய்தியை எழுதும் முன்னர் பலரையும் சந்தித்துப்பேசிய பின்னர்தான் எழுதுவார்கள். இவர்கள்தான் இலங்கை அரசியலைப் பற்றியும் விரிவாக எழுதுகிறார்கள்.

இவ்வாறு பலரையும் சந்தித்து மக்களுக்கு தேவைப்படும் உண்மைகளை எழுதும் தமிழ் ஊடகவியலாளர்களைத் தேடுகிறேன்.

இருக்கிறார்களா?

முன்னர் சுமார் மூன்று வருடங்கள் தமிழ்நாட்டில் தொடர்ச்சியாக இருந்து முக்கியமான அரசியல் பத்திரிகையாளர்களுடன் பேசியிருக்கிறேன். அதன் பின்பு பத்துத்தடவைக்கு மேல் இந்தியா சென்று திரும்பியிருந்தாலும் இந்தியாவைப்பற்றிய விடயங்களை எனது இந்திய நண்பர்களின் ஊடாகவே கேட்டுத் தெரிந்துகொள்வேன். அவர்களின் அபிப்பிராயத்தைக் கேட்பேன். தமிழக விடயமாக இருந்தாலும் சரி டில்லி விடயமாக இருந்தாலும் சரி அங்கிருப்பவர்களுடன் கலந்துரையாடியே ஒரு தீர்மானத்துக்கு வருவேன். சுமார் ஒன்றரை வருடங்கள் செங்கல்பட்டில் தலித் மக்கள் மத்தியில் வசித்திருந்தாலும் இந்திய சமூக கட்டமைப்பை எழுதுவதற்கு இன்னும் எனக்குத் துணிவு வரவில்லை. ஏனென்றால் நான் தெரிந்துகொள்ள வேண்டிய பல விடயங்கள் இருப்பதாகவே இப்பொழுதும் கருதுகின்றேன்.

குறைந்த பட்சம் ஒரு அயல்நாட்டை அல்லது அந்நிய நாட்டு விடயத்தை அறிந்து கொள்வதற்கு அந்த நாட்டுக்குச் செல்லவேண்டும். சாதாரண மக்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் உட்பட அறிவுஜீவிகளுடன் கலந்துரையாடி பலதரப்பான விடயங்களையும் அறியவேண்டும்.

இலங்கைப் பிரச்சினையைப் பற்றி எழுதுபவர்கள் எத்தனை சிங்கள மக்களுடன் பேசி இருப்பார்கள்?

இப்பொழுது இலங்கைத்தமிழர்கள் விடயத்தை அறிந்து கொள்ள எவருக்கும் தடையில்லை. அரசியல்வாதிகள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், மாணவர்கள் என எவரும் வந்து போவதற்கு வசதியுள்ளது.

போர்முடிந்து மூன்று வருடங்கள் ஆகிவிட்டது. சமகாலத்தில் இந்தியாவில் இருந்து சோதிடம் சொல்பவர்கள், புடவை வியாபாரிகள், சாமியார்கள், இந்தித் திரையுலக நட்சத்திரங்கள், உல்லாசப்பயணிகள் மட்டுமல்ல தனிப்பட்ட குடும்ப நிகழ்ச்சிகளுக்காக வருபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இதுதவிர எத்தனை கள்ளக்கடத்தல்காரர்கள் வந்திருக்கிறார்கள் என்பதை சுங்க இலாகாவிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

இப்படியான காலத்தில்தான் 2011 ஆரம்பத்தில் இலங்கையில் சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டிற்காக அதன் அமைப்பாளர், அவுஸ்திரேலியாவிலிருக்கும் எழுத்தாளர் முருகபூபதி தமிழக இலக்கியவாதிகளை இலங்கைக்கு அழைத்தார்.

எஸ்.பொன்னுத்துரை (எஸ்.பொ)யின் பூச்சாண்டி பேச்சுக்களினால் வர இருந்த சிலர் தொடை நடுங்கி விட்டார்கள். மேலும்பலர் அந்த மாநாட்டை எதிர்த்து அறிக்கைக்கு மேல் அறிக்கை எழுதி இணையத் தளங்களில் காகிதப்போர் தொடுத்து இறுதியில் மண்கவ்வினார்கள். சிலர் அந்த சர்வதேச எழுத்தாளர் மாநாட்டிற்காக இலங்கைக்குச் செல்லாமல்விடுத்து தமது செயலுக்கு அதனை ஒரு தமிழ் வீரமாக கருதி புறநானூறு படைத்தார்கள்.

எனினும் தமிழகத்திலிருந்து பிரபல எழுத்தாளர்கள் சின்னப்ப பாரதி, தோப்பில் முகமது மீரான் உட்பட பல சிற்றிதழ் ஆசிரியர்களுடன் ஐம்பதிற்கும் மேற்பட்டோர் இலங்கை வந்து அந்த மாநாட்டில் கலந்துகொண்டதுடன் இலங்கையில் பல இடங்களுக்கும் சென்று திரும்பினார்கள்.

இந்த ஜுன் மாதம் கொழும்பு தமிழ் சங்கம் தனது 70 ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தவிருக்கும் இலக்கிய மாநாட்டுக்கு தமிழக எழுத்தாளர் ஜெயமோகன் அழைக்கப்பட்டிருந்தார்.

அவரும் செல்லத் தீர்மானித்திருந்தார். இந்தச் செய்தி வெளியானதுதான் தாமதம் உடனடியாக தமிழகத்தில் சிலர் மீண்டும் புறநானூறு படைக்கப் புறப்பட்டுவிட்டார்கள். விசமத்தனமான மின்னஞ்சல்களை அனுப்பி அவரது இலங்கைப்




**தமிழ்நாட்டில் இலங்கைப் பிரச்சினையைப் பற்றி எழுதுபவர்கள் எத்தனை சிங்கள மக்களுடன் பேசி இருப்பார்கள்?**

பயணத்தை தடுத்துள்ளார்கள்.

ஈழத்தமிழ் இலக்கியத்தைப் பற்றி அதிகம் எழுதிய ஒருவர் ஜெயமோகன். தமது நூல் ஒன்றில் மு.தளையசிங்கம், எஸ்.பொ, சிவத்தம்பி, சேரன், அ.முத்துலிங்கம், ஆகியோரைப் பற்றி விரிவாக எழுதியவர். ஈழத்து இலக்கிய வளர்ச்சிப்போக்கை தொடர்ந்து அவதானித்து வருபவர். அதேவேளை ஈழ அரசியலையும் அதிகம் தெரிந்து கொண்டிருப்பவர். மேலும் தெரிந்துகொள்ள விரும்புபவர். அப்படிப்பட்ட ஒரு தமிழகப்



ஜெயமோகன்

படைப்பாளி இலங்கை சென்றுவர விரும்புவது இயல்பானதே.

இதனை எதிர்க்கும் மரமண்டைகள், ஒருவரது தனிப்பட்ட உரிமையை நிராகரிக்கிறார்கள். இந்த இலட்சணத்தில் மனித உரிமை பற்றி பேசுகிறார்கள். ஜெயமோகனுக்கு இலங்கையை பார்க்க விருப்பம் இருப்பது போன்று இலங்கையில் அவரது வாசகர்கள் பலருக்கு அவரைச் சந்தித்து உரையாட விருப்பம் இருப்பதும் இயல்பானதே. மற்றவர்களின் இந்த சாதாரண விருப்பத்தைக்கூட நிராகரிக்கும் கழிசடைகள் தொடர்ந்தும் இலங்கை குறித்து பூச்சாண்டி காட்டிக் கொண்டிருக்கின்றன.

ஜெயமோகன், பால்சக்காரியா போன்று மலையாளத்திலோ அல்லது இந்தியிலோ எழுதுபவராக இருந்தால் இப்படியான அலுப்புகளில் இருந்து தப்பி இருப்பார்.

ஒரு நல்ல இலக்கியவாதி, பத்திரிகையாளன் உலகின் எந்தப் பாகத்திற்கும் சென்று மக்களை சந்தித்து புரிந்துகொள்ள வேண்டியவற்றை அறிந்து கொள்ளுவதன் மூலம்தான் வாசகர்களுக்கு பாலமாக இருப்பான். இதை இந்த நந்திகள் புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கையில் சோழர்காலம் பற்றி அறிந்து தமது நாவல்களில் எழுதுவதற்காக இலங்கை சென்று வந்த கல்கி, அகிலன், ஆகியோரும் தீபம் பார்த்தசாரதி, கு. அழகிரிசாமி, தொ.மு. பாஸ்கரத் தொண்டமான் மற்றும் இலங்கையிலிருந்து அகதிகளாகி தமிழ்நாடு மண்டபம் முகாமிலிருந்த ஈழத்தவர் பற்றி மாணிக்க கங்கை நாவல் எழுதுமுன்னர் இலங்கை வந்துசென்ற ராஜம் கிருஷ்ணன், பத்திரிகையாளர்கள் வாசந்தி, கோமல் சாமிநாதன், கஸ்தூரிரங்கன், பாரதிஇயல் ஆய்வாளர்கள் தொ.மு.சி.ரகுநாதன், பேராசிரியர் எஸ்.ராமகிருஷ்ணன், முனைவர் அரசு, அ. மார்க்ஸ், பா.செயப்பிரகாசம், படைப்பிலக்கியவாதிகள் தோப்பில் முகம்மது மீரான், சின்னப்ப பாரதி உட்பட பலர் வந்துசென்றிருக்கிறார்கள்.

இந்த வரலாறு தெரியாமல் இலங்கையை புறக்கணிக்கவேண்டும் எனச் சொல்லும் இந்த நந்திகள் அதன் மூலம் எதனைச் சாதிக்கப் போகிறார்கள், இலங்கையில் தமிழர்கள் வாழ்கிறார்கள். இலங்கையில் எத்தனை போர் வந்தாலும், எத்தகைய அடக்குமுறைகளை அவர்கள் சந்தித்தாலும் எத்தனை அரசாங்கங்களை அவர்கள் எதிர்நோக்கினாலும் இலங்கைத் தமிழர்களின் கலை, இலக்கிய, பண்பாட்டு வேர்கள் தூர்ந்து போய்விட மாட்டாது என்பதை இந்த குறுக்கே நிற்கும் நந்திகள் தெரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கையில் பாரதிக்கும் கம்பனுக்கும் வள்ளுவனுக்கும் காலாதிகாலமாகத்தான் விழாக்கள் நடத்தப்படுகின்றன. இவர்கள் மூவரும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக ஈழத்தமிழன் அவர்களை புறக்கணிக்கவில்லை. பாரதி நூற்றாண்டை தமிழகமே மறந்திருந்தபோது இலங்கையில் நாடளாவிய ரீதியில் பாரதி நூற்றாண்டை கொண்டாடியவர்கள் ஈழத்தமிழர்கள். இன்றும் கொழும்பில் வருடாந்தம் கம்பனுக்கு விழா நடக்கிறது. வள்ளுவருக்கு வடக்கு, கிழக்கு மலையகம் மட்டுமல்ல தமிழ்க் குக்கிராமங்களிலும் விழா நடைபெறுகிறது. அனைத்து தமிழ் பாடசாலைகளிலும் தமிழ் தினவிழாக்கள் நடந்துகொண்டுதானிருக்கின்றன. ஈழத்தமிழ் இலக்கியம் தொடர்ந்தும் சாதாரண தமிழ் மக்களிலிருந்து பல்கலைக்கழக மட்டம் வரையில் உயர்ந்து எழுச்சிபெற்றுக் கொண்டுதானிருக்கிறது.

அத்துடன் ஈழத்து தமிழ் இலக்கியவாதிகளின் படைப்பு இலக்கிய நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள் மட்டுமன்றி தமிழகத்தின் பாரதி, புதுமைப்பித்தன், ஜெயகாந்தன், சின்னப்பபாரதி உட்பட பலரது படைப்புகள் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டு சிங்கள வாசகர்களுக்கு சிறப்பான முறையில் அறிமுகப்படுத்தப்படுகிறது.

இந்த அரிய செயல்கள், தமிழகத்திலிருந்து வீறாப்பு பேசும் வாய்ச்சொல் வீரர்களான, இலங்கை செல்லவிரும்பும் தமிழக படைப்பாளிகளைத் தடுக்கும் அந்த நந்திகளுக்குத் தெரியுமா?

தமிழர்கள் தமது விடுதலையை சிங்களவர்களிடம் இருந்து பெறுவதற்கு முன்பு இந்த முட்டாள்தனமும் சுயநலனும் பேசும் வக்கிரங்களிடம் இருந்து விடுதலை பெறவேண்டும். ■

# பொன்சேகாவுக்கு பூரண பொது மன்னிப்பு; வத்திக்கானிடம் உதவி கோரப்படுகிறது



(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு பூரண பொது மன்னிப்பு பெற்றுக் கொள்ள வத்திக்கானின் உதவி பெற்றுக் கொள்ளப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறப்பினர் ஜயலத் ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவிற்கு பூரண பொது மன்னிப்பு பெற்றுக் கொடுக்கும் விவகாரத்தில் தலையீடு செய்யுமாறு பாப்பாண்டவர் 16 ஆம் பெனடிக்கின உதவியைப் பெற்றுக் கொள்ள உத்தேசித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஏற்கனவே பாப்பரசருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவின் சிவில் உரிமைகளை முழுமையாக உறுதிப்படுத்த எடுக்கக் கூடிய சகல நடவடிக்கைகளையும் எடுக்குமாறு, ஜயலத் ஜயவர்தன பாப்பாண்டவரிடம் கோரியுள்ளார்.

சரத் பொன்சேகாவிற்கு முழு அளவில் பொது மன்னிப்பு விழங்கப்பட வேண்டும் எனவும், அவரது இராணுவப் பதவிகள் வழங்கப்பட வேண்டும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சி கருதுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சரத் பொன்சேகா விடுதலை விவகாரத்தில் தலையீடு செய்யுமாறு கடந்த ஒக்ரோபர் மாதம் பாப்பாண்டவரிடம் ஜயலத் ஜயவர்தன கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மரக்கிளையில் தொங்கிய ஆணின் சடலம் வவுனியாவில் மீட்பு

(வவுனியா)

வவுனியா - பெரியகுளம், பூந்தோட்டம் பிரதேசத்தில் இருந்து பொலிஸாரினால் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது. இந்தச் சடலம் நேற்று முன் தினம் இரவு 9.30 மணியளவில் மீட்கப்பட்டதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நபர் வயல் வெளிப் பிரதேசத்தில் உள்ள மரம் ஒன்றில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சடலம் மீட்கப்பட்ட வேளையில் அங்கிருந்த தேசிய அடையாள அட்டையின்படி உயிரிழந்தவர் 39 வயதான சண்முகம் இராஜதுரை என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மெற்கொண்டு வருகின்றனர்.

# பள்ளிவாசல்களின் விபரம் சேகரிப்பு; தவறான தகவல்களால் சர்ச்சை

(கொழும்பு)

நாடு முழுவதுமுள்ள முஸ்லிம் பள்ளிவாசல்களின் விபரங்களைக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் திரட்டி வருகின்றனர் என்ற தகவல் பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

புத்தசாசன மற்றும் சமய விவகார அமைச்சின் கீழுள்ள முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்துக்கு கடந்த வெள்ளிக்கிழமை சென்ற குற்றப் புலனாய்வுப்பிரிவுப் பொலிஸார் இந்த விபரங்களைச் சேகரித்துச் சென்றுள்ளனர். நாட்டிலுள்ள பள்ளிவாசல்களின் எண்ணிக்கை, அவற்றின் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ள காலம் உள்ளிட்ட பல தகவல்களை குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் முஸ்லிம் சமய கலாசார திணைக் களத்திடம் பெற்றுள்ளதாக தெரியவருகிறது. இந்தத் தரவுகள் உத்தியோகபூர்வ நடவடிக்கைகளுக்காகவே இடம்பெறுகின்றது என்று முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார். பள்ளிவாசல்களின் விபரங்களைக் குற்றப் புலனாய்வுப் பொலிஸார் கோரினரே தவிர பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையிலுள்ள அனைவரது பெயர், முகவரி உள்ளிட்ட தகவல்களை அவர்கள் கோரியதாக வெளியான தகவல் தவறானது என்றும் அந்த அதிகாரி சுட்டிக்காட்டினார்.

இதேவேளை முஸ்லிம் பள்ளிவாசல் தொடர்பான பதிவு விபரங்களையும் அப்பள்ளிவாசல் நிர்வாகிகளின் தனிப்பட்ட தரவுகளையும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சேகரித்துச் சென்றுள்ளமை குறித்து அரசாங்கம் உண்மை நிலையை வெளிப்படுத்த வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் கோரிக்கை விடுத்துள்ளார்.

# கல்லூரிக்கு அருகில் சடலம் மீட்பு

(பம்பலப்பிட்டி)

பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரிக்கு அருகில் வெட்டுக் காயங்களுடன் சடலமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு - பெரியகல்லாறு பகுதியைச் சேர்ந்த 38 வயதான ஒருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். சம்பவம் தொடர்பில் பம்பலப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வெள்ளிக்கிரக சூரிய கடப்பு; இலங்கையர்களும் காணலாம்

சூரியனை வெள்ளிக் கிரகம் கடந்து செல்லும் நிகழ்வு எதிர் வரும் 6ஆம் திகதி இடம் பெறவுள்ளது. இந்த நிகழ்வினை இலங்கை மக்கள் அன்றைய தினம் காலை 7 மணியளவில் அவதானிக்க முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

சூரிய வட்டத்தின் ஊடாக வெள்ளிக்கிரகம் நகர்ந்து செல்வதை வெள்ளிக்கிரகத்தின் சூரிய கடப்பு என தெரிவிக்கப் படுகிறது.

அந்த நேரத்தில் வெள்ளிக்கிரகம் ஒரு சிறிய புள்ளி போல சூரியனின் முன்பாக ஊர்ந்து செல்வது போல காணலாம்.

புதன் மற்றும் வெள்ளிக்கிரகங்களின் சுற்றுப்பாதைகள் பூமியின் சுற்றுப்பாதையின் உட்புறமாக அமைந்துள்ளன.

எனவே இந்த இரண்டு கிரகங்கள் மட்டுமே சூரியனுக்கும், பூமிக்கும் இடையே வர இயலும். வெள்ளியின் சூரிய கடப்போ 243 ஆண்டுகளுக்கு 4 முறையே நிகழ்கிறது.

இவை இரட்டிப்பாக அதாவது 8 ஆண்டுகள் இடைவெளியில் அமைந்த இரட்டை நிகழ்வுகளாக நிகழும். இந்த இரட்டை நிகழ்வுகளுக்கு இடைப்பட்ட காலம் ஒரு நூற்றாண்டுக்கும் மேற்பட்டது ஆகும்.

தொலை நோக்கி கொண்டு சூரியனின் பிம்பத்தை வெண் திரையில் விழச் செய்து பார்த்தால் சூரியனின் குறுக்கே கறுப்பு புள்ளி போன்ற தோற்றத்துடன் வெள்ளிக்கிரகம் கிழக்கில் இருந்து மேற்காக கடந்து செல்வதை காணலாம்.

வெள்ளியுடன் சூரியப்புள்ளிகளும் தெரியும். ஆனால் வெள்ளியை காட்டிலும் சூரியப்புள்ளிகள் சற்று ஒளியுடன் இருப்பதை காணலாம்.

சூரியனை வெள்ளி கடக்கும் போது வெறும் கண்ணாலே, தொலைநோக்கி, பைனாக்குலர் போன்ற உருப்பெருக்கி கொண்டு பார்க்கலாம். சூரியனை நேரடியாக பார்க்க கூடாது.

அவ்வாறு பார்த்தால் பார்வை இழக்க நேரிடும். சூரியனின் பிம்பத்தை ஒரு வெண் திரையில் விழச் செய்து அதைக் காணலாம்.

# சினிமா பிரபலங்கள் இலங்கையில்



பிரபல இந்திய பொலிவூட் நட்சத்திரம் பிபாஷா பாசு மற்றும் கொலிவூட் நட்சத்திரம் சமீரா ரெட்டி நேற்று சனிக்கிழமை காலை இலங்கையை வந்தடைந்துள்ளனர்.

கொழும்பில் இன்று ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ள கார்ல்ரன் சுப்பர 7 ரக்பி போட்டியில் கண்டுகளிப்பதற்காகவே இவர்கள் இலங்கைக்கு வந்துளனர்.

# மண்முனை வடக்கில் அபிவிருத்திக் குழுக் கூட்டம்



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்கு பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் இக்கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா மற்றும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான பூ.பிரசாந்தன், இரா. துரைரத்தினம், மட்டக்களப்பு மாநகர பிரதியமேயர் ஜோர்ஜ் பிள்ளை, மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் எஸ்.சிறிதரன் உட்பட அதிகாரிகள், படை அதிகாரிகள் கலந்து கொண்டனர். இதன் போது பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் குறித்தும் திட்டங்களின் முன்னேற்றம் பற்றியும் ஆராயப்பட்டன.

# தாங்க முடியாத கடன் சுமை; அபாயக்கட்டத்தில் நாடு

## – ஜே.வி.பி. எச்சரிக்கை



எமது நாடு இப்போது கடன் சுமையிலிருப்பதாகவும், அக் கடன் சுமையிலிருந்து மீள முடியாத அளவிற்கு அபாயக்கட்டத்திற்குள் நாடு தள்ளப்பட்டிருப்பதாக ஜே.வி.பி. அபாய அறிவித்தல் செய்துள்ளது.


ராஜபக்ஷ - சர்வதேச நாணய நிதியக் கூட்டமைப்பே இந்த நாட்டை இப்போது ஆட்சி செய்து வருவதாகவும் ஜே.வி.பி மேலும் குற்றம் சுமத்தியுள்ளது.

2009 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் திகதி அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட்டுள்ளதாக ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தொடர்ச்சியாக அந்தக் கடனுக்கான வட்டியையே செலுத்தி வருவதோடு, பெற்றுக கொண்ட கடன்களுக்கு வட்டி செலுத்த அரசாங்கம மீண்டும் கடன் பெற்றுக் கொண்டு வருகிறது.

இந்தக் கடன் சுமை முழுவதும் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதார நெருக்கடிகளைக் கருத்திற் கொண்டு அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதில்லை.

கூடுதலான வட்டிக்கு அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் பெற்றுக் கொண்டுள்ளதுடன், இந்தக் கடன் தொகையைச் செலுத்துவதில சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.



> **மீண்டும் ஒரு போரைச் சந்திக்க அச்சமூகம் தயாராக இல்லை. உச்சபட்ச கோரிக்கையை எழுப்புவது போர்ச் சூழலுக்கே இட்டுச் செல்லும் என்பதை அவர்கள் புரிந்து வைத்துள்ளனர். அவர்களுக்கு இன்று தேவைப்படுவது ஒரு குறைந்தபட்ச கௌரவமான வாழ்வுரிமை. இந்த நிலை அவர்களது ஒவ்வொரு பேச்சிலும், அசைவிலும், கண்களின் தெறிப்பிலும் வெளிப்படுகிறது.**

# அ.மார்க்ஸ் பார்வையில்...

தமிழகம் முழுவதும் முள்ளிவாய்க்கால் நினைவு தினம் உணர்ச்சிபூர்வமாக அனுசரிக்கப்படுகிறது. அது வெறும் நினைவேந்தலாக நின்றுவிடாமல், தமிழ் ஈழத்திற்கான உறுதி ஏற்பாகவும் முன் வைக்கப்படுகிறது. "ஐக்கிய நாடுகள் சபை ஒரு கருத்துக்கணிப்பை நடத்தி தமிழ் ஈழத்தை பெற்றுத்தரவேண்டும்" என்று கருணாநிதி பேசத் தொடங்கியிருக்கிறார். அவர் தனது அரசியல் மறு உயிர்ப்புக்கு அதையே கடைசித் துரும்பாக நம்பி களமிறங்கியிருக்கிறார்.

இந்தத் தருணத்தில் சுஷ்மா சுவராஜ் தலைமையில் இலங்கை சென்று தமிழர்களின் நிலையைப் பார்வையிட்டுத் திரும்பிய குழுவில் இருந்த மார்க்சிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் டி.கே.ரங்கராஜன் கூறிய கருத்தொன்று என் நினைவில் ஆடுகிறது. "ஈழத் தமிழர்களின் இன்றைய கோரிக்கை தமிழ் ஈழம் அல்ல" என்பதுதான் அவர் சொன்னது. தீவிர விடுதலைப்புலி ஆதரவாளர்கள் இதைக் கண்டு ஆத்திரமுற்றனர். முக நூல் பக்கங்களில் அவர் திட்டித் தீர்க்கப்பட்டார்.

ஆனால் இரண்டாண்டுக்கு முன்னர் யாழ்ப்பாணம் வரை சென்று வந்திருந்த இன்னொரு விடுதலைப்புலி ஆதரவாளரான ஒரு பெண் தோழர் கிட்டத்தட்ட இதே மாதிரியான கருத்தைக் கூறியிருந்ததும், அப்போது இங்கே ஒரு இறுக்கமாக மௌனம் நிலவியதும் என் நினைவுக்கு வந்தது.

போர் முடிந்த ஓராண்டுக்கு பின் நானும் அங்கு தடைசெய்யப்பட்ட முள்ளிவாய்க்கால், திருகோணமலை தவிர, கிட்டத்தட்ட எல்லாப் பகுதிகளுக்கும் சென்று வந்தேன். பல தரப்பினரையும் சந்தித்துப் பேசினேன்.

ஒரு தமிழ் நாளிதழ் ஆசிரியர் இப்படிசொன்னார், "போர்க்குற்ற விசாரணை, மனித உரிமை மீறல் என்றெல்லாம் தமிழகத்திலிருந்து குரலெழும்பும் ஒவ்வொரு முறையும் அம்மண்ணில் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களிடம் மங்கிப்போயிருப்பதன் பின்னணி இதுவே. இந்த எதார்த்தத்தை மனதில் கொண்டே, "தனி ஈழம் ஒன்றே தீர்வு" என சொல்பவர்களும் சரி, "சேர்ந்து வாழ்தல் ஒன்றே சாத்தியம்" எனச் சொல்பவர்களும் சரி, இயங்க வேண்டும். மாறாக நம்முடைய தேர்வுகளையும், தேவைகளையும் இவற்றால் ஏற்படும் அத்தனை பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து அது சாத்தியமாகிறதோ இல்லையோ, ராஜபக்ஷ அரசுக்கு இன்னொரு 5 சதவீத சிங்களமக்கள் ஆதரவு அதிகமாகிறது. தமிழர்களிடம் இருந்து தாம் விலகிப் போவது குறித்து அவர்கள் கவலைப்படுவது இல்லை, ஏனெனில் அவர்கள் எந்நாளும் தமிழர்களின் ஆதரவை நம்பியிருந்ததில்லை.

ஒரு நாற்பதாண்டு கால உள்நாட்டு யுத்தத்திற்குப் பின் ஒரு சமூகம், அதுவும் தோற்கடிக்கப்பட்ட சமூகம் என்னென்ன துயரங்களையும் என்னென்ன பிரச்சினைகளையும் சந்திக்க நேருமோ, அத்தனையையும் இன்று ஈழத் தமிழர்கள் சந்தித்துக் கொண்டுள்ளனர். தொண்ணூறு ஆயிரம் விதவைகள், ஏராளமான ஆண் துணையற்ற குடும்பங்கள், பறிபோன நிலங்கள், பாழடிக்கப்பட்ட விவசாயம், பாதிக்கப்பட்ட மீன் பிடித் தொழில்,. அதிகரித்துள்ள குற்றச் செயல்கள், எல்லாவற்றிக்கும் மேலாக தம் பிரச்சினைகள் குறித்து பேசுவதற்கும் போராடுவதற்கும் இல்லா விட்டாலும் கூட மேலெழுந்து கேட்பதற்கான அரசியல் வெளி (Political Base) இல்லாமை ஆகியவற்றின் ஊடாக இன்று நொய்ந்து கிடக்கிறது ஈழத் தமிழ் சமூகம்.

இந்நிலையில் மீண்டும் ஒரு போரைச் சந்திக்க அச்சமூகம் தயாராக இல்லை. உச்சபட்ச கோரிக்கையை எழுப்புவது போர்ச் சூழலுக்கே இட்டுச் செல்லும் என்பதை அவர்கள் புரிந்து வைத்துள்ளனர். அவர்களுக்கு இன்று தேவைப்படுவது ஒரு குறைந்தபட்ச கௌரவமான வாழ்வுரிமை. இந்த நிலை அவர்களது ஒவ்வொரு பேச்சிலும், அசைவிலும், கண்களின் தெறிப்பிலும் வெளிப்படுகிறது.

"அடக்குமுறைக்கு ஆளாகிய ஒரு மக்கள் திரளிடம் தனிநாடு குறித்து கேள்வி எழுப்பும்போது அவர்கள் அளிக்கும் பதிலை தீர்மானிக்கிற மிக முக்கியமான கூறு, அது இப்போது சாத்தியமா, இல்லையா? என்பதுதான்.

தனி ஈழம் குறித்த கோரிக்கை வாழ நேர்ந்துள்ள ஈழ மக்களிடம் திணிப்பது அவர்களுக்கு நாம் செய்கிற துரோகமாகவே அமையும். தனி ஈழத்திற்குக் குறைவாகப் பேசுவதே சிங்கள பேரினவாதத்திற்கு துணைபோவதாக கருதும் நிலை. இங்கு தீவிர புலி ஆதரவாளர்களால் மேற்கொள்ளப்படுவது பிரச்சினையின் இம்முழுப் பரிமாணங்களையும் உணர்ந்து கொள்ளாததன் விளைவே!



இரண்டாவதாக அவர்கள் செய்யும் தவறு, தாங்கள் கொடுக்கும் வெளி அழுத்தங்களின் ஊடாகக் கொசோவாவையும், தெற்கு சூடானையும் போல இன்று இங்கும் உடனடியாக தமிழ் ஈழத்தை கொண்டு வர முடியும் என நம்பவது! கோசோவா, தெற்குசூடான் ஆகியவற்றின் வரலாறும் அவை பிரிந்த சூழலும் அதற்கு பின்னுள்ள மேற்கத்திய அரசியல் நலன்களும் ஈழச் சூழலில் இருந்து முற்றிலும் வேறானது. தனி ஈழத்திற்கான வாக்கெடுப்பு நடத்துவதற்கு சர்வதேச அழுத்தம் அளிப்பதற்கான சூழலும் இன்றில்லை.

இந்துமா கடலில் போர் முக்கியத்துவம் கருதி முற்றிலும் சீனாவின் பக்கம் இலங்கை சாயந்துவிடாமல் இருக்க மேற்கொள்ளும் அரசியல் தந்திரமே இன்று ஐ.நா தீர்மான வடிவில் வெளியிடப்பட்டுள்ளது. எனினும் இப்படியான ஒரு தீர்மானம் இயற்றக்கூடிய நிலை ஏற்பட்டதற்கு ராஜபக்ஷ அரசின் இராஜதந்திரத் தோல்வியே காரணம் எனவும் தேவையில்லாமல் ஐ.நா வையும், அமெரிக்காவையும் பகைத்துக்கொள்ள வேண்டாம் எனவும் இன்று சிங்கள அறிவுஜீவிகளிடமிருந்து அழுத்தம் வருகிறது. ராஜபக்ஷ அரசு கண்துடைப்பு விசாரணை ஒன்றை நடத்தி பிரச்சினையை முடித்துக் கொள்ளும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

எக்காரணம் கொண்டும் மீண்டும் தாயகம் திரும்பி வாழத் தயாராக இல்லாத புலம்பெயர் தமிழர்களின் விருப்புகளுக்கும் ஈழத்தில் வசிக்க நேர்ந்துள்ள தமிழர்களின் எதிர்பார்ப்புகளுக்குமான வேறுபாட்டை நான் மிகைப்படுத்தி சொல்லவில்லை. ஆனால் வேறுபாடுகள் உண்டு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. எனவே "தனி ஈழம்" என்பதை ஏதோ தாரக மந்திரம் போல உச்சரித்துக் கொண்டிராமல், ஈழத் தமிழர்கள் இன்று எதிர்நோக்கியுள்ள பிரச்சினையை நாம் இன்று பேசியாக வேண்டும்.

நான் தொடக்கத்தில் குறிப்பிட்டுள்ள பிரச்சினைகள் தவிர சிறையில் அடைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலிகளை விடுதலை செய்தல், அவர்களது மறுவாழ்வு முதலியவற்றையும் எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு கண்ணியம் மிக்க அரசியல் தீர்வையும் நாம் வலியுறுத்தியாக வேண்டும். யாழ்ப்பாணத்தில் ஊற்றுப்பாசனம், வன்னியில் ஏரிப்பாசனம் என்பன சீரழிந்துள்ளன. போர் மற்றும் சுனாமியை ஒட்டி வடக்கின் இரண்டாவது முக்கிய தொழிலான மீன் பிடிப்பும் சீரழிந்துள்ளது. இவற்றையெல்லாம் சரிசெய்தல் வேண்டும்.

நிலம் அங்கு ஒரு மிக பெரிய பிரச்சினையாக உள்ளது. குடியேற்றங்கள், பலாலி முதலான இடங்களில் இராணுவத்தின் பிடியிலுள்ள நிலங்கள், புலம் பெயர்ந்து சென்றவர்கள் விட்டுச் சென்ற விவசாய நிலங்கள் எல்லாம் முறையாக நிலமற்றவர்களுக்கு விநியோகிக்கப்பட வேண்டும். கருத்துக் கணிப்பு தொடர்பாக வெளி அழுத்தங்களுக்கு முயற்சிக்கும் அதே நேரத்தில், இதனிலும் முக்கியமாக ஈழ மக்கள் இன்று எதிர்கொண்டுள்ள இப்பிரச்சினைகளுக்கு நாம் குரல் கொடுக்க வேண்டும். அதற்கு முதல்படியாக இந்தப் பிரச்சினையை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

## காலுறைகளால் ஓவியம்!



சீனாவின் ஷங்காய் நகரைச் சேர்ந்த, இளம் பெண் ஓவியர் ஹாங் யி. வித்தியாசமான பொருட்களை கொண்டு, ஓவியங்களை உருவாக்குவதில் பெயர் பெற்றவர். கூடைப்பந்து விளையாட்டுக்காக பயன்படுத்தும் பந்தை வைத்து, இவர் உருவாக்கிய ஓவியம், ஏற்கனவே சர்வதேச அளவில் புகழ் பெற்றது.

அடுத்த முயற்சியாக, காலுறைகளை (சொக்ஸ்) பயன்படுத்தி, ஒரு ஓவியத்தை இவர் வரைந்துள்ளார். சீனாவின் பிரபல திரைப்பட இயக்குனர் யிமொய் ஷாங்கிற்கு பெருமை சேர்க்கும் வகையில், காலுறைகளை வைத்து, அவரது பிரமாண்டமான ஓவியத்தை வரைந்துள்ளார். இந்த ஓவியத்தை வரைவதற்காக, 750 சோடி காலுறைகளை அவர் பயன்படுத்தியுள்ளார்.

சீனாவில் நடக்கும் கண்காட்சிகளில், மூங்கில் தடிகளில், உயரத்தில் தொங்க விடப்பட்டிருக்கும் துணி ஓவியங்களைப் பார்த்து, இதே போன்ற வித்தியாசமான ஓவியத்தை வரைய வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டதாக கூறும் ஹாங் யி, "மற்ற பொருட்களை விட, காலுறைகளின் விலை, மிகவும் குறைவு. அதனால் தான், இந்த ஓவியத்தை வரைவதற்கு காலுறைகளை தேர்வு செய்தேன்..." என்கிறார் பெருமிதத்துடன்.

## காப்பியங்களில் தற்குறிப்பேற்றம்!

சிலப்பதிகாரத்தில் கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் மூவரும் மதுரையை நெருங்கினர். கோவலனுக்கு மதுரையில் மரணம் காத்திருந்தது. எனவே மதுரை நகரக் கோட்டைச் சுவரில் கட்டியுள்ள செடிகள், காற்றில் அசைவதை "வராதே... வராதே" என்று மறித்துக் கை காட்டுவதாக, இளங்கோவடிகள் தற்குறிப்பாகக் குறிப்பிட்டிருப்பார்.



கம்பராமாயணத்தில் கைகேயி, இராமன் காட்டுக்குப் போக, பரதன் நாடாள வரம் வாங்கினாள். மனம் வருந்திய மன்னன் தசரதன் மயங்கி வீழ்ந்தான். இரவில் இந்நிகழ்ச்சி நடந்தது. காலைப் பொழுது விடிந்தது. சேவற் கோழிகள் தங்கள் வயிற்றில் இறக்கைகளை அடித்துக் கொண்டு கூவுகிற இயல்பான காட்சியைக் கம்பர் கண்டார். இரவு நடந்த துயர நிகழ்ச்சிக்காக அவை வயிற்றில் அடித்துக் கொள்கின்றன, என்று தன்னுடைய கருத்தை ஏற்றி அந்த இயல்பான நிகழ்வுடன் பிணைத்துப் படைத்திருப்பார். காப்பியங்களில் இவ்வாறு தற்குறிப்பேற்ற அணி மிகுதியாகப் பயன்படுத்துவதால் இது காப்பிய அணி என்றும் அழைக்கப்படுகிறது.

இலங்கையில் அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான போர் முடிவுற்று மூன்றாவது ஆண்டு கடந்துள்ளது. புலிகள் ஒழிக்கப்பட்டுள்ளார்களே தவிர, இனப்பிரச்சினை ஒழிக்கப்படவில்லை. இதை அரசு உணர்ந்து அதற்கு ஒரு பரிகாரம் காண முன்வர வேண்டும்.

அடுத்ததாக, இந்த யுத்தம் பாதித்த இன்னொரு விடயம், நாட்டு மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினையாகும். யுத்தத்தினால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி தமிழ் மக்களை மட்டும் பாதிக்கவில்லை. அது இனவேறுபாடின்றி அனைத்து மக்களையும் பாதித்தது.

# பாசாங்குத்தனமின்றிப் பகிர்வோம்!



இன்று யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்கள் ஆகிவிட்ட போதிலும், மக்களின் வாழ்க்கைத் தரத்தில் எவ்வித மாற்றமும் ஏற்பட்டபாடாக இல்லை. உணவுப் பொருட்களினதும், எரிபொருட்களினதும் விலைகள் மாதாமாதம் அதிகரித்த வண்ணமே உள்ளது. யுத்தம் முடிந்தும் அதைத் தீர்க்க அரசால் முடியாமல் இருப்பதற்குக் காரணம், ஏகாதிபத்தியப் பொருளாதாரச் சில்லுடன் இலங்கைப் பொருளா-தாரம் பிணைக்கப்பட்டிருப்பதும், இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகளின் தவறான பொருளாதாரக் கொள்கைகளுமாகும்.

எனவே இந்தப் போரின் வெற்றியின் பின்னர், அரசாங்கம் பொதுவாக நாட்டு மக்களுக்கும், குறிப்பாகத் தமிழ்மக்களுக்கும் என்னென்ன விடயங்களைச் செய்ய வேண்டும் என்பதை பார தூரமாகச் சிந்தித்துச் செயற்பட வேண்டியதுதான் இப்பொழுது உடனடியாகச் செய்ய வேண்டிய விடயம். போர் வெற்றியைக் காட்டி ஒவ்வொரு தேர்தலிலும் வெற்றி பெற்று ஆட்சியைத் தொடரலாம் என அரசாங்கம் மனப்பால் குடித்தால், அது கண்ணாடிக்குள் நிலவைப் பிடித்த கதையாக முடிந்துவிடும்.

இந்த யுத்தத்தை 1977இல் பதவிக்கு வந்தவுடன் ஆரம்பித்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் அவரது ஐக்கிய தேசியக்கட்சி அரசும் தமிழ் மக்கள் மேல் திட்டமிட்ட இனப்படுகொலையைக் கட்டவிழ்த்துவிட்டது உண்மைதான். அதனால்தான் அதற்கெதிராகப் போராடுவதற்குப் பல தமிழ் இளைஞர் அமைப்புகள் ஆயுதபாணியானதும், அதற்குத் தமிழ் மக்கள் ஆதரவு கொடுத்த நிலைமையும் உருவானது.

ஆனால் ஐ.தே.கவின் 17 வருட ஆட்சி முடிந்து, 1994இல் சந்திரிகா தலைமையில் பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சி வந்ததும், புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தவும் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணவும் அவரது அரசு முன்வந்த போது, சமாதானத்தை எட்டி உதைத்தது புலிகள்தான். மக்களின் அழிவுகளைப் பற்றிச் சிந்திக்காது போரைத் தொடர்வதிலேயே அவர்கள் ஆர்வமாக இருந்தனர். தங்களை இராணுவம் வெல்லுவதானால் குறைந்தது 1 இலட்சம் தமிழ் மக்களையாவது இராணுவம் கொல்ல வேண்டிவரும் என வீராப்புப் பேசினர். அவ்வளவு தூரம் அவர்கள் பொதுமக்களை போர்க்களத்தில் பலியிடுவதற்குத் தயாராக இருந்தனர் என்பது ஒன்றும் மறைப்பதற்குரிய விடயம் அல்ல.

இறுதிப் போரின் போது சில சர்வதேச அமைப்புகள் சொல்வது போல நாற்பதாயிரம் ஐம்பதினாயிரம் அளவு இல்லை என்றாலும், அண்ணளவாக இருபதினாயிரம் மக்கள் வரை கொல்லப்பட்டிருக்கலாம் என மக்கள் மத்தியிலிருந்து கிடைக்கும் சுயாதீனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவம் இனவாத ரீதியில்தான் இறுதிக்கட்ட நேரத்தில் நடந்து கொண்டது என்றால், அதற்கு முன்னரே பல தமிழ் கிராமங்களைக் கொத்துக் குண்டுகளை வீசி பூண்டோடு அழித்திருக்கலாமே? அதை ஏன் செய்யவில்லை? (ஜே.ஆரின் ஆட்சி அவ்வாறு சில கிராமங்களை - கொக்கட்டிச்சோலை, ஒதியமலை போன்ற இடங்களில் பரீட்சார்த்தமாகச் செய்து பார்த்தது!) புலிகளிடமிருந்த தப்பி ஓடிவந்த மூன்று இலட்சம் மக்களைப் பாதுகாத்து உணவும் உறையுளும் அளித்த இராணுவம், இருபதாயிரம் மக்களை மட்டும் இனவாதக் கண்கொண்டு அழித்தொழித்தது என்பதுதான் உண்மையா?

புலிகள் பொதுமக்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருக்கவில்லையென்றால், அந்த மக்கள்கூடப் பாதுகாக்கப்பட்டிருப்பார்கள் என்பது உண்மை அல்லவா?. வாழ்வா சாவா என்ற இறுதிக்கட்ட யுத்த நிலைமையில், ஒரு போர்-முனையில் எந்தவொரு படையும் சாவகாசமாக உட்கார்ந்து விவாதித்துக் கொண்டு இருக்காது என்பது, புலிகளுக்குத் தெரியாமல் போனது ஏன்? அது விந்தையிலும் விந்தைதான்.

30 வருடமாகத் தாம் இழந்ததை ஈடுசெய்வதற்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை, இலங்கை இராணுவம் மட்டுமின்றி அந்த இடத்தில் புலிகளின் இராணுவம் இருந்திருந்தாலும் அதையேதான் செய்திருக்கும். இந்த உண்மையைச் சொல்வதற்கு எந்தப் பாசாங்குத்தனமும் நமக்குத் தேவையில்லை.

உண்மையில் மக்களின் இழப்பு துயரமானது தான். இந்தப் போரின் முடிவின் போது தவிர்க்க முடியாமல் ஏற்பட்ட இழப்புகளுக்காக நாம் மனம் வருந்தி, அப்படியானவர்களுக்காக எமது ஆழ்ந்த அனுதாபங்களைக் காணிக்கையாக்கும் வேளை, போர் முடிவுக்கு வந்ததையிட்டு அனைவரும் நிம்மதியடைகிறோம் என்பதும் உண்மையே.

**- வானவில் (வைகாசி 2012)**





1. [illegible]னைக்கு விரல் ஒன்று.
2. இரண்டு ஆட்சித் தலைவர்கள் உள்ள நாடு சான்மரினோ.
3. நுளம்பின் ஆயுள் காலம் மூன்று வாரங்கள்.
4. நீச்சலில் நான்கு வகைகள் உள்ளன.
5. மண்புழுவிற்கு ஐந்து இதயங்கள் உள்ளன.
6. எலியின் ஆயுள் காலம் ஆறு ஆண்டுகள்.
7. டான்யூப் நதி ஏழு நாடுகளில் பாய்கிறது.

# தூங்குவதற்கு முன்பு...

- உறங்கும் கட்டிலை உறங்குவதற்கு மட்டும் பயன்படுத்துங்கள். அதன் மீது உட்கார்ந்து சாப்பிடுவது, லப்-டொப், செல்போன், புத்தகங்கள் போன்றவற்றை கட்டிலில் இருந்து விலக்கி வையுங்கள்.
- டி.வியை படுக்கை அறையில் இருந்து வேறு அறைக்கு மாற்றிவிடுங்கள்.
- உறங்கும்போது உடல் அதிக உஷ்ணத்துடன் இருக்கக்கூடாது. உஷ்ணத்தைத் தணிக்க, ஜன்னல்களைத் திறந்து, காற்றோட்டமாக வையுங்கள்.
- சூரிய ஒளியைக் கடத்தும் திரைச்சீலையை ஜன்னலுக்குப் பயன்படுத்துங்கள். காலையில் வெயில் வந்ததும் இயற்கை உங்களை எழுப்புவதே நல்லது. கடிகார அலாரம் அடிக்கும்போது பதறி எழுவது நல்லதல்ல.
- கட்டில் விரிப்பை இரண்டு நாள்களுக்கு ஒருமுறை கட்டாயம் மாற்றுங்கள். ஏனென்றால் நாம் உறங்கும்போது இறந்த செல்கள் உடலிலிருந்து உதிரும்.
- குறித்த நேரத்தில் உறங்கச் செல்லுங்கள். இதுதான் மற்ற எல்லாவற்றையும் விட முக்கியம்.


**- 'வீமன் அன் த வெயிட் லொஸ் தமாஷா' புத்தகத்திலிருந்து...**




# சினிமா சினிமா



ஷங்கரின் "பாய்ஸ்" படத்திலிருந்து சமீபத்திய "காதலில் சொதப்புவது எப்படி" வரை கதாநாயகனா-கவே நடித்துவிட்ட சித்தார்த்துக்கு வில்லனாகும் ஆசை வந்திருக்கிறது. "ஈரம்" பட இயக்குநர் அறிவழகன் மூலம் அது நிறைவே-றுகிறது. நகுல் நடிக்க அறிவழகன் இயக்கும் "வல்லினம்" படத்தில் வில்லனுக்கு மிக முக்கியமான வேடம். இந்த வேடத்தில் நடிக்க பலரைப் பரிசீலித்தும் யாரும் தேர்வாகவில்லை. படத்தின் கதையைக் கேள்விப்பட்ட சித்தார்த் "இந்தப் படத்தில் நான் வில்லனாக நடிக்கிறேன்" என்று தானா-கவே வலிய வந்து வாய்ப்பைப் பெற்றிருக்கிறார். நடிப்பு தாகம்!




'அவன்-இவன்' படத்தைத் தொடர்ந்து, முரளியின் மகன் அதர்வாவை நாயகனாக வைத்து இயக்கி வரும் படத்திற்கு, "எரியும் தணல்" என்று பெயர் வைத்திருந்த பாலா, இப்போது அதை மாற்றி, "பரதேசி" என்று வைத்துள்ளார். "என் கதைக்கு இந்தப் பெயர்தான் மிக பொருத்தமாக இருக்கும்..." என்று சொல்லும் அவர், "பரதேசி என்றால், தனக்கொரு இடம் கூட இல்லாதவன். எல்லா தேசத்தையும் தன் தேசமாக கரு-துபவன்..." என்று அர்த்தம் என்கிறார். பர தேசி என்று யாரையும் திட்டாதீங்கப்பா!




திறமை இருந்தும் வாய்ப்புகள் இல்லாமல் போராடி வரும் உதவி இயக்குநர்களுக்கென ஓர் அமைப்பைத் தொடங்கும் திட்டத்தில் இருக்கிறார் பிரபல இயக்குநர் ஏ.ஆர். முருகதாஸ். இதற்காக தன்னுடைய பெரிய சம்பளத்தில் ஒரு சிறிய தொகையை ஒதுக்கி வருகிறார். இந்த ஆறாம் அறிவே பாராட்டும்படியிருக்கிறது!





மணிரத்னத்தின் "கடல்" படத்தில் சமந்தா ஒரு கதாநாயகி என்றால், இன்னொரு கதா நாயகியாக, தெலுங்கு நடிகர் மோகன்பாபுவின் மகள் லட்சுமி மஞ்சு நடிக்கிறார். மோகன் பாபுவும் ரஜினியும் சினிமாவுக்கு வருவதற்கு முன்பிருந்து நண்பர்கள். அதனால் மஞ்சுவுக்கு தமிழ்நாடு புதிதில்லை. "மணிரத்னம் படம் என்றால், ஒரு காட்சியில் நடிக்கச் சொன்னாலும் நடிக்கலாம் என்றுதான் வந்தேன். ஆனால், அவரோ, மறக்க முடியாத அளவுக்கு, ஒரு வலுவான கதாபாத்திரத்தை தந்து, என்னைப் பெருமிதப்பட வைத்துவிட்டார்..." என்கிறார் லட்சுமி மஞ்சு. கைக்குருவி கொண்டு காட்டுக் குருவி பிடிப்பார் போல!

# அரியாலையில் மணல் கொள்ளை; தடுத்து நிறுத்த நடவடிக்கை




(யாழ்ப்பாணம்)

அரியாலைப் பகுதியில் சட்ட விரோத மண் அகழ்வு தொடர்பாக நாவலடி இராணுவ முகாம பொறுப்பதிகாரி மேஜர் சொய்சாவுடன் நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித்தலைவரும் நல்லூர் பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளருமான ரவீந்திரதாஸன் கடந்த வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இக் கலந்துரையாடலின் போது சட்ட விரோதமான முறையில் இடம்பெறும் மண் அகழ்வு, அப்பகுதியிலுள்ள கால்நடைகள் களவுபோதல் மற்றும் கலாசார சீரழிவுகளைத் தடுப்பது தொடர்பாகவும் விரிவாக முகாம் பொறுபதிகாரியிடம் எடுத்துக் கூறப்பட்டது.

இவற்றைச் செவிமடுத்த முகாம பொறுப்பதிகாரி மேஜர் சொய்சா யாழ். பொலிஸாரின் மூலம் இவற்றைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளார்.

இக் கலந்துரையாடலின் போது அப்பகுதி கிராம சேவையாளர் எஸ். விஜிதன், ஈ.பி.டி.பி. எதிர்க்கட்சி உறுப்பினர் ஸ்ரீகணேசராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.



தாய்லாந்து சம்புத்த ஜயந்தி விழாவின் ஆரம்ப நிகழ்வில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வரவேற்கப்படுகிறார்.

# என்னை அனுராதபுரம் சிறைக்கு அனுப்புவதை நிறுத்துங்கள்

(திருநெல்வேலி)

அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த ஒருவர் மீண்டும் தன்னை அதே சிறைச்சாலைக்கு அனுப்பவேண்டாம் என யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ஜெ.விஸ்வநாதனிடம் விண்ணப்பித்தார்.

பாலசுப்பிரமணியம் ரவிக்குமார் மறுபெயர் மதிமாறன் என்பவரே இவ் விண்ணப்பத்தை சமர்ப்பித்தவராவார். அனுராதபுரம் சிறையில் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு ஆளாவதாக அவர் நீதிபதியிடம் தெரிவித்தார். தான் ஏதாவது மறைத்து வைத்திருப்பதாகக் கருதி தனது மலத்து வாரத்துக்குள் சோதனை நடாத்தியதாகவும், விடுதலைப்புலிகள்

## நீதவானிடம் சிறைக்கைதி மன்றாட்டம்

இயக்கத்தை சேர்ந்தவன் எனக்கூறி தப்பியோட முயற்சி செய்தால் சுட்டுக்கொல்வோம் என மிரட்டியதாகவும், தனக்கு உயிராபத்துள்ளதால் தன்னை மீண்டும் அனுராதபுரம் சிறைக்கு அனுப்ப வேண்டாம் எனவும் அவர் விண்ணப்பித்தார்.

கடந்த வியாழன் இவர் மீதான வழக்கு யாழ். மேல் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது நீதிபதியிடம் அவர் இவ் விண்ணப்பத்தை சமர்ப்பித்தார்.

இவரை விசாரணை செய்த நீதிபதி இது சம்பந்தமான அறிக்கையை எதிர்வரும் 14ஆம் திகதி மேல் நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு கட்டளையிட்டு வழக்கை ஒத்திவைத்தார். எதிரி சார்பில் சட்டத்தரணி மு. றெமிடியஸ், அரச தரப்பில் அரச சட்டவாதி வி.திருக்குமரன் ஆகியோர் ஆஜரானார்கள். (137)

# கிராமத்துக்கு ஒரு வீடு ; புதிய வீட்டுத்திட்டம் அமுல்

(யாழ்ப்பாணம்)

ஒரு வீடு ஒரு கிராமம் என்ற வேலைத்திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் 435 புதிய வீடுகள் அமைக்கும் நடவடிக்கைகள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 435 பயனாளிகளில் முதற்கட்டமாக 80 வீடுகளைக் கட்டுவதற்கான முதற்கட்ட கொடுப்பனவுக்கான காசோலைகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. ஏனைய பயனாளிகளும் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இவற்றை விட கடனாக 2 இலட்சம் ரூபா காசோலைகள் வழங்கப்பட்டு வருவதாகவும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.மாவட்ட முகாமையாளர் நோயல் ஜெயச்சந்திரன் தெரிவித்துள்ளார். (எஸ்)

# காரைநகர் வன்புணர்வு வழக்கு; சந்தேகநபர்களுக்கு பிணை நிராகரிப்பு

(திருநெல்வேலி)

காரைநகரில் மனநலம் குன்றிய யுவதியை வன்புணர்வுக்குட்படுத்திய இரண்டு முஸ்லிம்களையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் ஆர்.எம்.எஸ். மகேந்திரராஜா உத்தரவிட்டார்.

நேற்று முன்தினம் இவ்வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதுடன்,நடைபெறவிருந்த அடையாள அணிவகுப்பு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணிகள் ஜோய் மகிழ் மகாதேவா, மு.திருநாவுக்கரசு ஆகியோர் சந்தேகநபர்களை பிணையில் விடுமாறு வாதிட்டனர். பாதிக்கப்பட்ட யுவதியின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கே.சுகாஸ் இதற்கு கடும் ஆட்சேபனை தெரிவித்து அவர்களை பிணையில் விடுவிக்கக் கூடாது என வாதாடினார்.

வழக்கை விசாரணை செய்த நீதவான் சந்தேக நபர்களைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

சம்பவம் நடைபெற்ற பின்னர் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை தாங்கினார் என பொலிஸாரினால் குற்றம்சாட்டப் பட்ட காரைநகர் பிரதேச சபைத் தலைவர் ஆனைமுகன் நீதிமன்றில் சமுகமளித்திருந்தார்.

இப்படியான சம்பவங்கள் நடைபெறும் போது அவற்றை நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு வருமாறு நீதவான் தவிசாளருக்கு எச்சரிக்கை செய்து விடுவித்தார். (137)

# உலக வங்கியிடம் உதவி கோருகிறது அரசு

(கொழும்பு)

உலக வங்கியிடம் இருந்து 2,800 கோடி ரூபா கடன் கேட்டுள்ளதாகவும், உலக வங்கியோ பதில் அளிக்காமல் இருப்பதாகவும் அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தி யாளர்களிடம் கூறுகையில்;

ரூ.2,800 கோடி கடன் வழங்குமாறு உலக வங்கியிடம் அரசு கேட்டுள்ளது. இதற்கான பேச்சுவார்த்தை விரைவில் தொடங்கும். இந்தக் கடன் மூலம் எரிபொருள் விலையேற்றம் மற்றும அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் ஆகியவற்றை கட்டுப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

ஏற்கனவே, உலக வங்கியிடம் இருந்து ரூ. 13,750 கோடி கடன் வாங்கி அதை உரிய முறையில் செலுத்தியுள்ளோம் எனத் தெரி வித்தார்.

இதேவேளை சர்வதேச நாணய நிதியத்தைச் சேர்ந்த உயர் மட்ட அதிகாரிகள் குழு ஒன்று அடுத்துவாரம் இலங்கை வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமை குறித்து ஆராய்ந்ததன் பின்னர், இறுதித் தொகையான 40 கோடி அமெரிக்க டொலர் கடனை வழங்குவது குறித்த இறுதித்தீர்மானத்தை அவர்கள் எடுப்பர் என்த் தெரிவிக்கப்படுகிறது.

பொருளாதார நிலைமை குறித்து ஆராயும் இந்தக் குழுவினர் நாளை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலை சந்தித்து உரையாட வுள்ளனர்.

இதேவேளை சர்வதேச நாணய நிதியத்தினால் கடந்த ஏப்ரல் மாதம் வரையிலான காலப்பகுதியில், ஏழு கட்டங்கள் அடிப்படையில் கடன் கொடுப்பனவை வழங்கி இருந்தது.


இதன் அடிப்படையில் இது வரையில் 213 கோடி அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் எஞ்சியுள்ள 40 கோடி அமெரிக்க டொலர் கடன் தொகையை வழங்குவது தொடர்பிலேயே இந்தக் குழு ஆராயவுள்ளது.

இதற்கிடையில் இதுவரையில வழங்கப்பட்ட 213 கோடி அமெரிக்க டொலர்களுக்கு 1 சதவீத வட்டியே அறவிடப்பட்டிருந்தது.

எனினும், தற்போது வழங்கப்படவுள்ள 40 கோடி அமெரிக்க டொலர்களுக்கு 3 சதவீத வட்டி அறவிடப்படவிருப்பதாக தகவல கள் தெரிவிக்கின்றன.

# இலங்கை விடயத்தில் தலையிட ஐ.நா.வுக்கு அதிகாரமில்லை

## வடக்கில் படைக் குறைப்பு பற்றி பேசவும் முடியாது



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள சபைக்கோ, பிரித்தானியாவுக்கோ இலங்கை விவகாரங்களில் எல்லை மீறிச் செயற்படும் அதிகாரம் கிடையாது என அமைச்சரும், ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். அத்துடன், வடக்கு-கிழக்கு படை முகாம்கள் தொடர பாக பேசுவதற்கு எந்த வொரு நாட்டின் பிரதிநிதியும் இலங்கைக்குள் நுழையக் கூடாது எனவும் அவர் கூறியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

1948 ஆம் ஆண்டு காலப் பகுதி வரை இலங்கை உட்பட ஆசிய நாடுகள் பிரித்தானியாவால அடிமைப்படுத்தப்பட்டே வைக்கப்பட்டிருந்தன. இதன் பின்னரும் நாட்டில் பிரிவினைவாதத்தை ஊக்குவித்து மோதல்கள் ஏற்பட பிரதான காரணகர்த்தாவாக பிரித்தானியாவே விளங்கியது. இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போர் தொடர்பில் போலியான பரப்புரைகளை பிரித்தானியா மேற்கொண்டிருந்தது.

பிரித்தானியாவின் நோக்கங்களை இலங்கையில் நிறைவேற்றிக்கொள்ள இடமளிக்கப் போவுதில்லை. தற்போது ஐ.நா வுடன் இணைந்து மேற்குலக நாடுகள் இலங்கையை அடிமைபபடுத்தும் நோக்கில் தலையீடுகளை மேற்கொண்டுவருகின்றன. ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, தான் ஒரு அதிகாரி என்பதனையும், தனக்குள்ள பொறுப்பையும் மறந்து செயற்படக்கூடாது.

வடக்கின் படை முகாம்களை அகற்றுமாறு உத்தரவிட எந்தவொரு நாட்டுக்கும் உரிமை கிடையாது. இலங்கையின் சுயாதீன தன்மைக்கு அச்சு றுத்தல் ஏற்படும் வகையில் உள்நாட்டு விடயம் ஒன்றை மையப்படுத்தி பிரித்தானியத் தூதுவர் ஜோன் ரன்கின் கருத்தை வெளியிட்டார்.இதனை வன்மையாக ஜாதிக ஹெல உறுமய கண்டிக்கின்றது

அத்துடன் லியாம் பொக்ஸ் தலைமையிலான பிரித்தானிய நாடாளுமன்றக் குழுவொன்று இலங்கைக்கு வரவுள்ளதாகவும், இவர்கள் வடக்கின் படை முகாமகள் தொடர்பில் ஆராய உள்ளதாகவும்செய்திகள் வெளியாகியுள்ளன.

இலங்கைக்கு வரும் நோக்கத்தை லியாம் பொக்ஸ் குழுவினர் மாற்றிக் கொள்ள வேண்டும். வடக்கு படை முகாம கள் தொடர்பாகவோ, ஏனைய உள்நாட்டு விவகாரங்கள் தொடர்பாக ஆராய எந்தவொரு அந்நிய நாட்டின் பிரதிநிதிகளும் நாட்டுக்குள் நுழையக் கூடாது. இவ்வாறான விடயம் தொடர்பில அரசாங்கம் விழிப்புடன் செயற்பட வேண்டும். அதே போன்று நவநீதம்பிள்ளை தனக்குள்ள பொறுப்பையும் வரையறையையும் கணித்துச் செயற்பட வேண்டும்.

அமெரிக்காவினால் முன்னெடுக்கப்படுகின்ற எண்ணிலடங்காத மனித உரிமை மீறல்கள் குறித்து ஐ.நா நடவடிக்கை எடுக்க வேண்டும். இதனைச் செய்யாது சிறிய நாடு என்பதால் இலங்கை மீது தேவையற்ற அழுத்தங்களைப் பிரயோகிக்க முற்பட்டால் அதற்கு இடமளிக்கப் போவதில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

Grade - 13

க.பொ.த.(உயர்தர) மாதிரி வினாத்தாள்
G.C.E. (A/L) Examination model Paper

கல்வி முரசு

இரசாயனவியல் - II
Chemistry - II

02 | T | I

நேரம் : 3 மணித்தியாலம்

ஆசிரியர் :
S.T.Janarththanan
(Bse)
(0777634345)

## பகுதி A

இரு வினாக்களுக்கும் விடை தருக.

அகிலவாயு மாறிலி $R = 8.314\ J\ K^{-1}\ mol^{-1}$

அவகாதரோ மாறிலி $N_A = 6.022 \times 10^{23}\ mol^{-1}$

01

(a) பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் வினவப்பட்ட இயல்பிற்குப் பொருத்தமான மூலகங்களை / சேர்வைகளை உரிய இடைவெளிகளில் எழுதுக.

(i) Zn, Mn, Cu, Ti ஆகிய நான்கு மூலகங்களில் எது தாழ்வான உருகுநிலையைக் கொண்டது.

..................................................................................................

(ii) Hg, As, Mo, Pb ஆகிய நான்கு மூலகங்களில் அறை வெப்பநிலையில் திரவமாகக் காணப்படும் மூலகம் / மூலகங்கள்

..................................................................................................

(iii) Al, Mg, Cr, Zn, Fe ஆகிய ஐந்து மூலகங்களில் $HNO_3$ உடன் திண்ம ஒட்சைட்டைக் கொடுக்கும் மூலகம் / மூலகங்கள்

..................................................................................................

(iv) $BaSO_4$, $BaCrO_4$, $MgCO_3$, ஆகிய மூன்று சேர்வைகளில் $CH_3COOH$ இல் கரையும் சேர்வை?

..................................................................................................

(v) $ZnCl_2$, $MgCl_2$, $CrCl_3$, $FeCl_3$ ஆகிய நான்கு சேர்வைகளின் நீர்க்கரைசல்களில் $NH_4Cl$ உம், $NH_4OH$ உம் இடும்போது வீழ்படிவைக் கொடுப்பது

..................................................................................................

(vi) $KNO_2$, $Na_2O_2$, $K_2SO_3$, $K_3PO_4$, $K_2CO_3$ ஆகிய சேர்வைகளில் ஒட்சியேற்றியாகப் பயன்படுத்தக்கூடியது

..................................................................................................

(b) பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த X எனும் திண்ம அசேதனச் சேர்வை, எரிசோடாவைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும். X இன் நீரேற்றப்பட்ட உப்பு வெப்பப்படுத்தும்போது இதன் நீரற்ற உப்பை உருவாக்கும். நீரற்ற இவ் உப்பின் நீர்க்கரைசல் தாக்கு பொருட்கள் சிலவற்றுடன் குறித்த நிபந்தனையில் பெறப்பட்ட அவதானம் கீழே தரப்பட்டுள்ளது.

(P) ஐதான HCl கரைசலுடன் வெண்ணிறக் கலங்கலைக் கொடுக்கும்.

(Q) $I_2$ இன் நிறத்தை நீக்குவதுடன் KI கரைசலில் கரையக்கூடியது.

(R) வெப்பப்படுத்தும் போது கறுப்பு நிறத்தைக் கொடுக்கக்கூடிய வெள்ளை வீழ்படிவை $AgNO_3$ கரைசலுடன் கொடுக்கும்

மேலே தரப்பட்ட தரவுகளின் அடிப்படையில் கீழே வினவப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.

(i) X இனை அடையாளங்கண்டு அதன் இரசாயன சூத்திரத்தை எழுதுக.

..................................................................................................

(ii) மேற்படி தாக்கங்களிற்கான சமன்படுத்திய இரசாயன சமன்பாடுகளை எழுதுக.

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

(iii) மேற்படி சேர்வையின் இரு பயன்களைக் குறிப்பிடுக.

..................................................................................................

..................................................................................................

(c) (i) பின்வரும் மூலக்கூறு / அயன்களின் வடிவங்கள் சம்பந்தமான பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| மூலக்கூறு / அயன் | மைய அணுவைச் சூழவுள்ள இலத்திரன் சோடிகளின் ஒழுங்கு | கேத்திரகணித வடிவம் |
|---|---|---|
| $SnCl_5^-$ | | |
| $ICl_4^-$ | | |
| $ClF_3$ | | |

(ii) Y உம் Z உம் ஆவர்த்தன அட்டவணையில் ஒரே கூட்டத்தைச் சேர்ந்த தாண்டல் அல்லாத மூலகங்களாகும். இதில், ஒரு மூலகம் அறைவெப்பநிலையில் திரவமாக இருப்பதுடன் மற்றைய மூலகம் வாயுவாகக் காணப்படும். இவை இரண்டும் இணைந்து $YZ_3$, $YZ_5$ ஆகிய சேர்வைகளை ஆக்கும்.

(I) மூலகம் Y, Z என்பவற்றை அடையாளங் காண்க.

X : .................................... Y : ....................................

(II) மூலக்கூறுகள் $YZ_3$ இனதும் $YZ_5$ இனதும் வடிவங்களை உரிய பெட்டியினுள் வரைக.

| $YZ_3$ | $YZ_5$ |
|---|---|
| | |

(d) பின்வரும் அட்டவணை அணு ஐதரசன் காலல் நிறமாலையின் கட்புலனாகும் பகுதியில் நான்கு முதன்மைக் கோடுகள் சம்பந்தமான சில தரவுகள் தரப்பட்டுள்ளன.

(i) நிறமாலை சம்பந்தமான உமது அறிவைப் பயன்படுத்தி அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| கோடு | நிறம் | சக்தி மட்டங்களுக்கு இடையேயான இலத்திரன் பாய்ச்சல் | அதிர்வெண் / Hz |
|---|---|---|---|
| | | | $7.31 \times 10^{14}$ |
| | | | $6.17 \times 10^{14}$ |
| | | | $4.57 \times 10^{14}$ |
| | | | $6.91 \times 10^{14}$ |

(ii) பொருத்தமான காலல் நிறமாலைக் கேட்டு வரைபடத்தை வரைக.

2. (a) (i) FeO உம் $Fe_2O_3$ உம் கொண்ட ஒட்சைட்டுக் கலவையொன்று dil $H_2SO_4$ இல் கரைக்கப்பட்டு $KMnO_4$ உடன் தாக்கமடையவிடப்பட்டது. இதன் போது நடைபெறும் எல்லாத் தாக்கங்களினதும் சமன்படுத்திய இரசாயனச் சமன்பாடுகளை எழுதுக.

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

(ii) $FeSO_4$ கரைசல் ஒன்றில் $SO_4^{2-}$ அயனின் செறிவு 96 ppm ஆகும். இவ் $FeSO_4$ கரைசலின் $25cm^3$ முழுவதும் தாக்கம் புரிவதற்கு $0.02\ moldm^{-3}$ அமிலக் $KMnO_4$ இன் என்ன கனவளவு தேவைப்படும். ($1\ ppm = 1\ mg\ m^{-3}$, Fe = 56, S = 32, O = 16)

..................................................................................................

..................................................................................................


(ii) $FeSO_4$ கரைசல் ஒன்றில் $SO_4^{2-}$ அயனின் செறிவு 96 ppm ஆகும். இவ் $FeSO_4$ கரைசலின் $25cm^3$ முழுவதும் தாக்கம் புரிவதற்கு $0.02\ moldm^{-3}$ அமிலக் $KMnO_4$ இன் என்ன கனவளவு தேவைப்படும். ($1\ ppm = 1\ mg\ m^{-3}$, Fe = 56, S = 32, O = 16)

..................................................................................................

..................................................................................................

(iii) $Na_3AsO_4$ உம் $Na_2SO_4$ உம் கொண்ட பெயர் சிட்டை இல்லாத இரண்டு போத்தல்கள் உமக்குத் தரப்பட்டுள்ளது. இவ்விரு கரைசல்களையும் வேறுபடுத்தி இனங்காண்பதற்கு நீர் செய்யும் சோதனையைத் தருக.

(b) (i)




$0.10\ moldm^{-3}$ HCl கரைசலின் கனவளவு / $cm^3$

AOH உம் BOH உம் ஓர் அமில மென்மூலம் ஆகும். AOH இன் $pK_b$, 2.5 உம் BOH இன் $pK_b$, 6.5 உம் ஆகும்.

AOH உம் BOH உம் கொண்ட கலவையின் $25\ cm^3$, $0.1\ moldm^{-3}$ HCl கரைசலுக்கு எதிராக நியமிக்கப்பட்டது. விளைவுக் கரைசலின் PH வேறுபடும் விதம் மேலே தரப்பட்டுள்ளது. இப்பந்திகளில் காணப்படும் கோடிடப்பட்ட இடங்களை நிரப்புக.

இங்கு ........................ இலும்பார்க்க ........................ மூலவலிமை குறைந்ததாகும். மூலம், நீர்க்கரைசலில் அயனாக்கமடையும் போது $OH^-$ அயன்களைக் கொடுக்கும். நீர்க்கரைசலில் ........................ இன் $OH^-$ அயன் செறிவு அதிகமாகும். இக்கரைசல் HCl இற்கு எதிராக நியமிக்கப்படும் போது முதலில் ........................ நடுநிலையாக்கப்படும். ........................ இன செறிவும் ........................ இன் செறிவும் சமனாக உள்ளபோது அமிலத்தின் கனவளவு $25.5\ cm^3$ ஆக இருப்பதுடன் PH பெறுமானம் ........................ ஆகும்.

அமிலத்தின் ........................ சேர்க்கப்படும்போது ........................ முற்றாக தாக்கமடைவதுடன் ........................ இன் செறிவு உயர்வாகக் காணப்படும்.

இதன்படி ........................ முற்றாக நியமிப்பிற்கு உட்படும் போது முடிவுப்புள்ளிகளுக்கு அண்மையில் PH வீச்சு ........................ ஆகும். இம்முடிவுப் புள்ளிக்கு பினோத்தலின் பொருத்தமான காட்டியாகும். இதன் பின்னர் $OH^-$ அயன்கள் ........................ இனால் ஊடகத்திற்கு வழங்கப்படும் தொடர்ந்து அமிலத்தைச் சேர்க்க ........................ இனது செறிவும் ........................ இனதும் செறிவும் சமனாக உள்ளபோது பயன்படுத்தப்பட்ட அமிலத்தின் கனவளவு ........................ ஆக இருப்பதுடன் விளைவுக் கரைசலின் PH பெறுமானம் ........................ ஆகக் காணப்படும்.

கரைசல் முற்றாக நடுநிலையாக்கப்படும் போது முடிவுப்புள்ளிக்கு அண்மையில் pH வீச்சு ........................ ஆக இருப்பதுடன் தேவைப்பட்ட அமிலத்தின் கனவளவு ........................ ஆகும். இதற்கு பொருத்தமான இலட்சியக் காட்டி மெதையில் செம்மஞ்சளாகும். எனவே ஆரம்பக் கரைசலில் AOH இனதும் BOH இனதும் செறிவுகள் முறையே ........................ உம் ........................ உம் ஆகும்.

(c) (i) குறித்த வெப்பநிலையில் ஒன்றை ஒன்று கலக்கக்கூடிய propan-2-ol உம் benzene உம் கொண்ட கலவையில் ஆவி அமுக்கம் எதிர் propan-2-ol இன் மூல்பின்னம் வரைபடம் கீழே தரப்பட்டுள்ளது.

Grade - 13

# க.பொ.த.(உயர்தர) மாதிரி வினாத்தாள்
## G.C.E. (A/L) Examination model Paper


| 02 | T | I |
|---|---|---|

நேரம் :
3 மணித்தியாலம்

இரசாயனவியல் - II
Chemistry - II

# கல்வி முரசு

ஆசிரியர் :
S.T.Janarththanan
(B.se)
(0777634345)




(I) இதே அச்சுக்களில் மொத்த ஆவி அமுக்கம் இரு திரவங்களினதும் அமைப்புடன் மாறுகின்ற விதத்தைக் காட்டும் வரைபினை வரைந்து இதற்கு X எனப் பெயரிடுக.

(II) propan-2-ol உம் benzene உம் கொண்ட கலவை இரவோற்றின் விதிக்கு அமையுமாயின் கலவையின் மொத்த ஆவி அமுக்கம் அமைப்புடன் மாறும் விதத்தை காட்டுவதற்கு இதே வரைபடத்தில் வரைபு வரைந்து இதற்கு Y எனப் பெயரிடுக.

(III) மேலே கரைசலில் propan-2-ol மூல் பின்னம் 0.6 இனைக் கொண்டிருக்கும் போது benzene இன் ஆவி அமுக்கம் என்னவாக இருக்கும்.

.............................................................................................

(IV) 7.20 g propan-2-ol உம் 2.34g benzene உம் கொண்ட கலவையின் அவதானிக்கத்தக்க ஆவியமுக்கம் என்னவாக இருக்கும் (H = 1, C = 12, O = 16)

.............................................................................................

.............................................................................................

.............................................................................................

(V) propan-2-ol உம் benzene உம் கொண்ட கலவை இரவோற்றின் விதியிலிருந்து நேர்விலகலையா அல்லது எதிர்விலகலையா காட்டும்?

.............................................................................................

(ii) A யும் B யும் ஆவிப்பறப்புடைய திரவங்களாகும். A இனதும் B இனதும் மூல்பின்னங்கள் முறையே $X_A$, $X_B$ ஆகவுடைய இலட்சியத் துவிதக் கரைசல் ஆக்கப்பட்டது. இக்கலவை காய்ச்சி வடிக்கப்பட்டு ஆவி ஒடுக்கப்பட்டது வடிதிரவத்தில் A இனதும் B இனதும் மூல் பின்னங்கள் முறையே $Y_A$, $Y_B$ ஆயின்

$$Y_A : Y_B = X_A P_A^O : X_B P_B^O$$ எனக் காட்டுக.

3. (a) (i) 5 cm³ வாயு ஐதரோக் காபனும் 45 cm³ $O_2$ வாயுவும் கொண்ட கலவை மின் பொறிமூலம் எரிக்கப்பட்டது. தகனத்தின் பின் மீதி வாயுக்கலவை குளிரவிடப்பட்ட போது கனவளவு 35cm³ ஆகக் காணப்பட்டது. இவ்வாயுக் கலவை Conc KOH இன் ஊடு செலுத்தப்பட்ட பின்பு பெறப்பட்ட மீதி வாயுக் கனவளவு 20 cm³ ஆகக் காணப்பட்டது.

எல்லா வாயுக் கனவளவுக்கும் S.T.P இல் அளக்கப்பட்டது எனக் கொள்க. ஐதரோக் காபனின் மூலக்கூற்றுச் சூத்திரத்தைக் காண்க.

.............................................................................................

.............................................................................................

(ii) $CH_3CH_2CH_2Br$ இற்கும் அற்ககோல் சேர் KOH இற்கும் இடையிலான தாக்கத்தைக் கருதுக. இறுதி விளைவைக் கருதுவதுடன் பொறிமுறைக்குத் தேவையான எலலாப் படிகளையும் எழுதுக.

.............................................................................................

.............................................................................................

(b) X எனும் பசர்வை காபன், ஐதரசன், ஒட்சிசன் என்பவற்றை மட்டும் கொண்ட சக்கரமல்லாத சேதனச் சேர்வையாகும். X பின்வரும் இயல்புகளைக் காட்டுகின்றது.

(P) SP, SP², SP³ ஆகிய கலப்பு உடைய காபன் அணுக்களை கொண்டிருக்கும்.

(Q) அமோனியா சேர் $AgNO_3$ உடன் வெள்ளை வீழ்படிவைக் கொடுக்கும்.

(R) இது தொலனின் சோதனப்பொருள், பீலிங்கின் கரைசல் ஆகிய இரண்டையும் தாழ்த்தும்.

(S) இது சமச்சீர் அற்ற காபனைக் கொண்டிருக்கும்.

X இன் இவ்வியல்புகள் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(i) இழிவு எண்ணிக்கையான காபனைக் கொண்ட X இன் பின்வருவனவற்றை எழுதுக.

(I) மூலக்கூற்று சூத்திரம்

(ii) X பின்வரும் தாக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுகிறது.

$$X \xrightarrow{Na} A \xrightarrow{CH_3I} B \xrightarrow{\text{மிகை } CH_3MgBr} C \xrightarrow{H^+ / H_2O} D$$

மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளுக்கு அமைய A, B, C, D என்பவற்றின் கட்டமைப்புகளை கீழே தரப்பட்டுள்ள பொருத்தமான பெட்டிகளில் வரைக.




A

B

C

D

(c) (i) பின்வரும் அட்டவணையில் I தொடக்கம் V வரை தாக்கத்திற்குத் தேவையான தாக்கு பொருட்களும் சோதனைப் பொருட்களும் தரப்பட்டுள்ளது. இவற்றைப் பயன்படுத்தி அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| | P தாக்குபொருள் | Q சோதனைப்பொருள் | R தொழிற்பாட்டுப் பதார்த்தம் | S இடைநிலை | T பிரதான விளைவு |
|---|---|---|---|---|---|
| I |  | $Br_2 / CCl_4$ | | | |
| II |  | $CH_3CH_2Cl$ உலர் $AlCl_3$ | | | |
| III | $CH_3CHO$ |  | | | |
| IV | $(CH_3)_3C-Cl$ | $CH_3NH_2$ | | | |
| V |  | $LiAlH_4$ | | | |


(ii) பின்வரும் ஒவ்வொரு சோடி சேதனச் சேர்வைகளையும் வேறுபிரித்து இனங்காண்பதற்கான இரசாயனச் சோதனைகளைத் தருக.

(I) $CH_3-\overset{O}{\overset{\|}{C}}-O-CH_2(CH_3)_2$ உம் $CH_3-\overset{O}{\overset{\|}{C}}-O-CH_2CH_2CH_3$ உம்

(II) $CH_3-\overset{O}{\overset{\|}{C}}-\overset{H}{\overset{|}{N}}-CH_2CH_3$ உம் $CH_3-\overset{O}{\overset{\|}{C}}-\overset{CH_3}{\overset{|}{N}}-CH_2CH_3$ உம்

(II) $CH_3-C\equiv C-Cl$ உம் $CH_3C\equiv C-CH_2Cl$ உம்


4. (a) கீழே தரப்பட்டவற்றிலிருந்து மாத்திரம் பொருத்தமான சோதனைப் பொருட்களையும் கரைப்பான்களையும் தெரிந்தெடுத்து $CH_3CH_2CH=CH_2$ இருந்து ஆரம்பித்து பின்வரும் சேர்வையை எங்ஙனம் தொகுப்பீர் எனக் காட்டுக.




சோதனைப்பொருட்களும் கரைப்பான்களும்

| | | | |
|---|---|---|---|
| dil $H_2SO_4$, | $PCl_5$, | Mg, | dry $C_2H_5-O-C_2H_5$ |
| alc KHO, | HBr, | $HgSO_4$. | $Br_2 / CCl_4$ |

குறிப்பு : பின்வரும் திட்டத்தில் பொருத்தமான சேர்வைகளின் கட்டமைப்புகளைப் பெட்டியினுள்ளும் பொருத்தமான சோதனைப்பொருட்களை / கரைப்பான்களை வட்டங்களினுள்ளும் எழுதுக.



# யானைத்தாக்குதலுக்கு உள்ளாகும் இந்தியன் வீட்டுத்திட்ட மக்கள்



(பிரமிலன்-சிகரம்)

இந்திய அரசின் நிதியுதவியுடன் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக கட்டிக்கொடுக்கப் பட்ட வீடுகள் காட்டை அண்மித்த பகுதிகளில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதால் இரவு வேளைகளில் யானைகளின் தாக்குதலுக்கு உள்ளாவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக் கின்றனர்.

அத்துடன், பெண் தலைமைத்துவத்தினை கொண்டு வாழும் அநேகமானவர்கள் நிரந்தர தொழில் வாய்ப்புகள் இன்றி வாழ்வதாகவும், இதனால் தாம் பெரும் துன்பங்களுக்கு உள்ளாவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

விவசாயத்தை நம்பியே இருக்கும் 74 குடும் பங்களைச் சேர்ந்த இந்த மக்கள் தண்ணீரைப் பெற்றுக்கொள்வதற்கு 2 குழாய்க் கிணறுகள் மட்டுமே காணப்படுவதாகவும் இதனால் வெயில் அதிகரித்துள்ள தற்போதைய காலத் தில் தாம் பெரிய சிரமங்களை எதிர்நோக்கு வதாகவும் குடியிருப்பாளர்கள் சுட்டிக்காட்டியுள் ளனர். ஒட்டுசுட்டான்- கரிப்பட்டமுறிப்பு என்ற கிராமத்தின் கற்கிடங்குப் பகுதியிலேயே இந்த வீட்டுத் திட்டங்கள் இந்திய வீடமைப்பு திட்டத்தின் கீழ் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

குடிநீர் மற்றும் மின்சார வசதிகள் அற்ற நிலையில் வாழும் இந்தக் கிராமத்திற்குச் செல்லும் பாதைகளும் ஒழுங்கான முறையில் இல்லாத காரணத்தினால் இந்த வீதிகளில் பயணம் செய்யும் தாம் மிகுந்த சிரமங்களை எதிர் கொள்வதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக பல முறை உரிய வர்களுக்கு தெரியப்படுத்திய போதிலும் நடவ டிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

# “அல்சரைக்” குணப்படுத்தும் பாலைப்பழப்பாணி



(பிரமிலன்-சிகரம்)

பாலைப்பழ சீசன் தற்போது ஆரம்பித் துள்ளது. கிளிநொச்சியிலிருந்து கொண்டு வரப் படும் இந்தப் பாலைப்பழம் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது

மிக மெல்லிய தோலை உடைய இந்தப் பாலை பழத்தினை மரத்திலிருந்து பிடுங்கி இரண்டு நாட்கள் மட்டுமே பயன்படுத்தப்படக் கூடியதாக உள்ளது. எனவே, இந்தப் பழங்களை நீண்ட காலத்திற்கு பயன்படுத்துவதற்கு பயன்படுகின் றது பாலைப்பழப்பாணி.



இந்தப் பாலைப்பழப்பாணி யில் புரதம், இரும்பு போன்ற சத்துக்கள் அடங்கியுள்ளது அல்சர் நோயை முழுமையா கக் குணப்படுத் தும் தன்மை கொண்ட இந்தப் பாணி பாண், பிட்டு போன்ற உண வுகளுடன் சேர்த்து உண்ண லாம்.

ஒரு சுண்டு பாலைப்பழம் 30 ரூபாவிலிருந்து 40 ரூபா வரை தற்போது விற்பனை செய் யப்படுகின்றது. எனினும், ஒரு போத்தல் பாலைப் பழப்பாணி 500 ரூபா வரை விற்பனை செய் யப்படுவதாக வட்டக்கச்சியைச் சேர்ந்த வீரையா சந்திரகுமார் என்பவர் தெரிவித்தார்.

தயாரிக்கப்பட்டதிலிருந்து ஒரு வருடங்கள் வரை பாவிக்கக்கூடிய இந்தப்பழப்பாணியை ஆயுர்வேத வைத்தியர்கள் விரும்பி வாங்கு வதாகக் குறிப்பிட்டதுடன், இந்தப் பாலைப் பழப்பாணி பற்றிய விழிப்புணர்வு மக்களிடம் இல்லை எனவும், இந்த விழிப்புணர்வை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதன் மூலம் அதி களவில் தயாரித்து விற்பனை செய்ய முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# மலசல கூடத்திற்குள் குப்பைக் குழி; சிரமத்தில் பாவனையாளர்கள்

(பிரமிலன்-சிகரம்)

யாழ்ப்பாணம் பொது சந்தைக்கு அண்மை யில் காணப்படும் பொது மலசல கூடத்திற்குள் பாரிய குப்பை குழி ஒன்று காணப்படுகின்றது. இதனால் இந்த மலசல கூடத்தினைப் பாவிக்கும் மக்கள் பெரும் சிரமத்தினை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

பராமரிப்பாளர்கள் இல்லாத காரணத்தினால் தூய்மையற்றதாகக் காணப்படுவதுடன், துர்நாற் றம் வீசுகிறது. அத்துடன், குப்பைகளை இங்கே கொட்டுவதால் மேலும் துர்நாற்றம் வீசுகின்றது எனவும், இதனால் நுளம்புப் பெருக்கம் அதி களவில் காணப்படுவதாகவும், தாம் இதனைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுவதாக வும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், இந்த மலசல கூடத்தினுள் அதிக மான மதுபான வெற்றுப் போத்தல்களும் காணப் படுவதாகவும் இதனால் பாரிய சுகா தாரப் பிரச்சினை காணப்படுவதாகவும் தெரி வித்த ஒருவர், இதனை உடனடியாக யாழ்.மாந கர சபை கருத்தில் எடுத்து நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும் என மக்கள் சார்பாக கேட் டுக் கொண்டுள்வதாகக் குறிப்பிட்டார்.

# நல்லுறவு முயற்சி

(சிகரம்)

யுனைடெட் மோட்டேர்ஸ் நிறுவனத்தின் யாழ். கிளையினால் வாடிக்கையாளருக்கும் நிறுவனத் திற்கும் இடையில் நல்லுறவை ஏற்படுத்தும் வகையில் தமது சேவைகள் தொடர்பாக விளக்கமளிக்கும் நிகழ்வு கடந்த வியாழக் கிழமை மாலை 5.00 மணிக்கு யாழ் டில்கோ சிட்டி ஹோட்டலில் ஒன்றுகூடல் நிகழ்வொன்று நடைபெற்றது.

யாழ். நகரில் அமைந்துள்ள யுனைடெட் மோட்டேர்ஸ் நிறுவனம் தனது உற்பத்திகளை யும் பங்கு நிறுவனங்களான யுனைமோர் என்ரப் பிறைஸ்(Unimo Enterprises) நிறுவனம் மற்றும் ஒறியன்ட் மோட்டேர்ஸ்(Orient Motor) நிறுவனம் என்பவற்றின் உற்பத்திகள் மற்றும் செயற்பாடு கள் புற்றி யாழ்.மக்களிற்கு தெளிவுபடுத்துவதற் காகவே இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந் தது.

யுனைடெட் மோட்டேர்ஸ் குழுவானது ஏறத் தாழ 65 வருடங்களிற்கு மேலாக ஆடம்பர வாகனங்கள், வர்த்தக வாகனங்கள், முச்சக்கர வண்டிகள், மோட்டார் வண்டிகள் மற்றும் அவற் றிற்கான உதிரிப்பாகங்கள், டயர்கள், பெற்றே லிய உற்பத்திகள் என்பவற்றை சந்தப்படுத்தி வருகின்றது.

யுனைடெட் மோட்டேர்ஸ் நிறுவனம் சமூக நோக்குடன் யாழ். பொது நூலகத்திற்கும், யாழ் போதனா வைத்திசாலைக்கும் பல உதவிகளை செய்துள்ளதுடன், வருங்காலத்தில் பல சமூகப் பணிகளை விரிவுபடுத்தப்படும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் யுனைடெட் மோட்டேர்ஸ் நிறு வனத்தின் எல்லா உற்பத்திகள் தொடர்பாக அதி காரிகள் விளக்கமளித்ததுடன் தமது பங்கு நிறு வனத்தின் அதிகாரிகளையும் அறிமுகப்படுத் தினர்.

# பதிவிறக்கப் பெட்டகம்

இருவர் விருந்துக்கு வருகிறார்கள். அவர்களுக்கு உடை களை எடுத்து வைக்கத் தகவல் வந்தது. ஆனால் அவர்கள் வந்தபோது ஒரு உடை பயன்படவில்லை. ஏன்? காரணம் வந்த வர்களில் ஒருவர் பெண். அதாவது தகவல் உண்மை வேறு, தருக்க உண்மை வேறு. அறிவு என்பது எப்போதும் இருக்கும் அமைப்புகளில் ஒன்றைப் பற்றியது மட்டும்தான். எனவே தான் அது இன்னொரு அமைப்பில் தவறு ஆகிறது. நான் பின் னோக்கி நடந்தேன். ஆனால் முன்னால் சென்று கொண்டிருந் தேன். காரணம் நான் நடந்தது ஓடும் ரயிலில். கணிதத் தன்மை யுள்ள அறிவுகள் எல்லாமே அவற்றின் தளத்திற்கு வெளியே தவறாகிவிடும். **– ரஸ்ஸல்**

நட்சத்திரங்கள் எங்குள்ளன? அவற்றைப் பார்ப்பவனின் மூளையில். **– பிஷப் பெர்க்லி**

மாசு மறுவற்ற, போற்றிக் கொண்டாடத்தக்க பொற்காலமாக தமிழர்கள் தங்களது கடந்தகாலத்தை கற்பனை செய்யும் போது அந்த கற்பனையை உலவவிடுவதற்கு சௌகரியமான ஒரு இடமாக இந்துமாக்கடல் விளங்குகிறது. கடற் கோளுக்கு மிஞ்சிய அல்லது அதற்குப் பிறகு உருவான தமிழ்ச் சமுதாயம் அந்த இழந்த சொர்க்கத்தை மீட்டெடுப்பதில்தான் இயல்பான ஆர்வம் கொண்டு செயல்பட்டிருக்கும். இன்றைய தமிழ்ச்சமூ கம் நேற்றின் – கடல் கொண்ட நாகரீகத்தின் தொடர்ச்சிதான் என்றால் இது இருந்தால் என்ன இன்னொருமுறை கடல் கொண்டு போனால்தான் என்ன என்ற கேள்வி வருகிறது. **– ஆதவன் தீட்சண்யா**

ஊகங்கள் வலைகள் போல. அதை வீசுபவர்கள் தாங்கள் விரும்புவதைப் பிடித்துக் கொள்கிறார்கள். **– நோவாலிஸ்**

கம்பன் எழுதியது தமிழின் முதன்மைப் பெரும் படைப்பு. ஆனால் அவன் ஒட்டக்கூத்தன் உள்ளிட்ட புலவர்களால் வெறுக் கப்பட்டு சோழனால் கொல்லப்பட்டான் என்கின்றன கதைகள். பிற்காலச் சோழர் காலமே தமிழ் வரலாற்றில் வைதீகம் வேரூன் றிய, பெருமதங்கள் எழுந்த, வலங்கை இடங்கை சாதிப்பிரி வினைகள் உருவாகி பூசல்கள் வலுத்த காலகட்டம். அக்கால கட்டத்தில் நின்று ‘குகனொடும் ஐவரானோம்’ என்னும் ‘அறத் தின் மூர்த்தியாளனாக’ ஒரு மன்னனை உருவாக்கிக் காட்டிய கம்பன் அச்சமூகத்தை இடித்த விசை பெரிது. அவன் கொல்லப் படாமல் இருக்க முடியாது. **– ஜெயமோகன்**

அயலக சுற்றுலாப் பயணம் என்பது வெளிநாட்டில் போய் நாம் வைக்கும் முதல் காலடி பற்றியது அல்ல. ஊர்திரும்பும் போது வைக்கும் கடைசி அடியில் நாம் புதுநாட்டுக்குள் நுழைவது போன்ற பிரமையை ஏற்படுத்த வேண்டும். **– செஸ்டர்டன்**

குழந்தை வளர்ப்பின் முக்கிய அம்சமே குழந்தைத்தன் மையை அழித்தொழிப்பதே. குழந்தைத் தன்மை முற்றாய் ஒழி கிற தருணத்திலேயே “அவன் இப்ப வளர்ந்திட்டான்” என்று சான்றிதழ் தருகின்றோம். **– ஆதவன்**

என் நம்பிக்கை உங்கள் நியாயங்களை விட எனக்குப் பெரி தாகப்படுகிறது; பிரியமாக இருக்கிறது. அது சிதைந்து போவது பெரிய நரக வேதனையாக இருக்கிறது. **– கவிதாசரண்**

நாம் எதைக் கேட்க விரும்புகிறோமோ, அதைச் சொல்லிக் கொண்டிருப்பவர்களை நம்புவதை முதலில் நிறுத்த வேண் டும். **– குருஷேவ்**

சமூகம், கலாசாரம், மதம், கலை, இலக்கியம், அரசியல், அறிவியல் இன்னபிற அனைத்தும் புனைவுத் தொகுதிகள் என் பதும், நான் மற்றும் நாம் என்பவையும் புனைவே என்பதும் சிறிது அதிர்ச்சி அளிக்கக் கூடியதாக இருக்கலாம். ஆனால் என்ன செய்வது, புனைவு மட்டுமே உண்மையானது – மற்ற உண்மைகள் அனைத்தும் புனைவுகள் என்கிறபோது! **– பிரேம் ரமேஷ்**

மனித அறிவின் வளர்ச்சியால் கண்டுபிடிக்கப்பட்ட விஞ் ஞானமும், தொழில்நுட்ப வளர்ச்சியும் அழிவுச் சாதனங்க ளின் களஞ்சியத்தை நிரப்புவதாக அமைந்து இருக்கும்போது, இதன் பின்னணியில் இவை தந்த வாழ்க்கை வசதிகளுக்கு என்ன பொருளோ நிச்சயமோ இருக்க இயலும் என்பது இரண்டா வது உலக மகாயுத்தம் எழுப்பிய கேள்வியாகும். கலை இலக் கியச் சிறப்பும் விஞ்ஞான முன்னேற்றமும் தொழில்நுட்ப வளர்ச் சியும் உயர்ந்த சமுதாயக் கொள்கைகளும் அணுகுண்டால் தாக்கப்பட்டு முண்டங்களாகப் பிறந்து வளர்ந்து மடியும் குழந்தை களுக்கு எத்தகைய அர்த்தத்தைத் தர இயலும்? **– அயனெஸ்கோ**

# இந்திய இராணுவ இரகசியங்களை விற்க முயற்சி



(புதுடில்லி)

இந்திய இராணுவத்தின் உளவுத்துறை முக்கிய பகுதியிலிருந்து இரகசிய விவகாரங்களை பாகிஸ்தான் ஐ.எஸ்.ஐ. உளவுத் துறைக்கு விற்க முயற்சித்த தொழில்நுட்ப பிரிவைச் சேர்ந்த ஒருவரைப் பிடித்து இரகசியமாக விசாரணை நடத்தப்படுகிறது.

இராணுவ உளவுப்பிரிவுப் பகுதியில் தலைமை எழுதுநராக பணியாற்றி வந்தவர் சிவதாசன். இவர் சொந்த மாநிலம் கேரளா.

இந்தியச் செய்திகள்

துபையில் உள்ள ஒரு உறவினர் மூலம் பாகிஸ்தான் ஐஎஸ்ஐ. முகவரை அணுகியுள்ளார். இரகசியத் தகவல்கள் தருவதாக ஒப்புக்கொண்டு பெரும் பணமும் பரிமாற்றம் செய்ய ஏற்பாடு செய்துள்ளார்.


இது உளவு வருவாய்பிரிவு இயக்குநராக அதிகாரிகளுக்கு தெரிய வந்துள்ளது. இதனையடுத்து சிவதாசன் இரகசியமாக கண்காணிக்கப்பட்டு வந்தார். இவரை அதிகாரிகள் கைது செய்து விசாரித்து வருகின்றனர். இவரிடமிருந்து சி.டி.க்கள் பென்டிரைவ் மற்றும் முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த விசாரணை நடத்தப்படாமல் இருந்திருந்தால் இது பாகிஸ்தானுக்கு சென்றிருக்கும் எனத் தெரியவருகின்றது.



ஆந்திராவின் ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சித் தலைவரான ஜெகன்மோகன் ரெட்டி சொத்துக்குவிப்பு வழக்கில் கைதாகி சிறையில் அடைக்கபட்டுள்ள நிலையில் இடைத்தேர்தல் நடைபெறும் மேற்கு கோதாவரியின் நார்சாபுரம்தொகுதியில் ஜெகன்மோகன் ரெட்டியின் தாயார் விஜயலெட்சுமி அவருடன் மகள் ஒய்.எஸ்.ஷர்மிளாவும் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

# பிரதமர் மீது நம்பிக்கையில்லை

## அன்னா ஹசாரே



(ரத்னகிரி)

பிரதமர் மன்மோகன்சிங் மீது முன்னர் நான் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தேன். இப்போது அந்த நம்பிக்கையை இழந்து விட்டேன் என சமூக சேவகர் அன்னா ஹசாரே கூறியுள்ளார்.

பலமான லோக்பால் மசோதாவை வலியுறுத்தி, மகாராஷ்டிரா மாநிலத்தில் விழிப்புணர்வு பிரசாரம் மேற்கொண்டுள்ள அன்னா ஹசாரே ரத்னகிரி என்ற இடத்தில் நிருபர்களிடம் கூறியதாவது,

ஊழலை ஒழிக்க மத்திய அரசு எதையும் செய்யவில்லை. பிரதமர் மன்மோகன்சிங் மீது, முன்னர் நான் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தேன்.

இப்போது அந்த நம்பிக்கையை இழந்து விட்டேன். நல்ல நடத்தை உள்ளவர்களைத் தேர்வு செய்து நாம் நாடாளு மன்றத்துக்கு அனுப்ப வேண்டும். அப்போதுதான் எதிர்பார்க்கும் மாற்றங்கள் நிகழும்.

கடந்த 65 ஆண்டுகளில் பொதுநலன் தொடர்பான எந்த ஒரு சட்டமும் லோக்சபாவிலோ அல்லது மாநில சட்டசபைகளிலோ நிறைவேறவில்லை. மக்கள் பிரதிநிதிகளில் பெரும்பாலானவர்கள் ஊழலில் ஈடுபடுகின்றனர்.

பொதுமக்கள் நிதியில் பெரும்பகுதி தலைவர்களாலும், அரசு அதிகாரிகளாலும் ஊழல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படுகிறது இவ்வாறு ஹசாரே கூறினார்.


# அரசியல் சார்பற்ற நிலையில் இராணுவத்தினர் பணியாற்ற வேண்டும்

(புதுடில்லி)

கடந்த காலத்தைப் பற்றி இப்போது பேசவேண்டாம். முன்னேறத்தை நோக்கிச் செயற்படுவோம் என புதிய இராணுவத் தளபதியாக பொறுப்பேற்றுள்ள பிக்ராம் சிங் கூறினார்.

நாட்டின் புதிய இராணுவத் தளபதியாக ஜெனரல் பிக்ராம் சிங பொறுப்பேற்றுக் கொண்டதை யொட்டி, டில்லியில் நேற்று முன்தினம் இராணுவ அணி வகுப்பு நடந்தது. இந்த அணி வகுப்பை ஏற்றுக்கொண்ட பிக்ராம் சிங், செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், இராணுவ அமைச்சர் அந்தோனி சில ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

இராணுவத்தில் கடந்த சில மாதங்களில் நடந்த பிரச்சினைகளை மறந்து விட்டு, சிறப்பாக பணியாற்றும்படி கூறியுள்ளார்.



எனவே கடந்த கால நிகழ்வுகளைப் பற்றி இப்போது பேச வேண்டாம். முன்னேற்றத்தில் மட்டும் கவனம் செலுத்தி, அதன்படி செயலாற்றுவோம்.


காரை ஓட்டும் போது, முன்னோக்கிப் பார்த்து தான் ஓட்ட வேண்டும். அதுபோலவே, பணி விஷயத்திலும் முன்னோக்கி செயலாற்றுவோம். இதுவரை இராணுவத் தலைமையகத்தில் ஐந்து பதவிகளை வகித்து விட்டேன் தற்போது வகிப்பது ஆறாவது பதவி.

கடந்த காலங்களில் என்னுடைய தலைமையிலான பணியில் எந்த பிரச்சினையும் இல்லை. ஏதாவது பிரச்சினை இருந்தால், அதை சரி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இராணுவத்தில் பணியாற்றும் அனைத்து வீரர்களுக்கும் ஒன்றைக் கூற விரும்புகிறேன். அரசியல் சார்பற்ற, மதச் சார்பற்ற நிலையில் பணியாற்ற வேண்டும். நாகாலாந்தின் திமாபூர் மாவட்டத்தில், இராணுவத்தினரால் போலி என்கவுன்டர் மேற்கொள்ளப்பட்டதாக புகார் எழுந்துள்ளது.

இதுகுறித்து நேர்மையாகவும், வெளிப்படையாகவும் விசாரணை நடத்தும்படி திமாபூர் மாவட்டத்தில் உள்ள இராணுவ அலுவலகத்துக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இந்த விஷயத்தில் எந்த ஒரு நிகழ்வையும் மூடி மறைக்க முயற்சி மேற்கொள்ளப்படாது என்றார்.

# பெயர் தேடும் ஷில்பா ஷெட்டி



(புதுடில்லி)


சினிமா உலகில் கொடிகட்ட பறந்த நடிகை ஷில்பா ஷெட்டி கடந்த 2009 ஆம் ஆண்டு தொழிலதிபர் ராஜ்குந்த்ராவை கரம் பிடித்தார். இவர்களுக்கு கடந்த 21 ஆம் திகதி மும்பை மருத்துவ மனையில் அழகான ஆண் குழந்தை பிறந்தது. சில நாட்கள் மருத்துவமனையில் ஓய்வெடுத்த ஷில்பா வீடு திரும்பினார்.

அப்போது அவரது குழந்தையை காணும் ஆர்வத்தில் ஏராளமான ரசிகர்கள் திரண்டனர். அத்துடன் பத்திரிகை புகைப்படக் காரர்களும் படமெடுக்க ஆர்வம் காட்டினர்.

ஆனால் குழந்தையை படமெடுக்க ஷில்பா அனுமதிக்கவில்லை. குழந்தை முகத்தையும் துணியால் மூடிக்கொண்டார். இது அனைவருக்கும் கடும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியது. தற்போது குழந்தைக்கு பெயர் சூட்ட ஏற்பாடுகள் நடந்து வருகிறதாம்.

என்ன பெயர் வைக்கலாம் என்று ஜோதிடர்களை வைத்து பெயர் தேர்வு செய்து வருகிறார்களாம். விரைவில் பெயர் சூட்டு விழாவை பிரமாண்டமாக நடத்த முடிவு செய்துள்ளாராம் ஷில்பா.

# ஆட்சியைக் கவிழ்க்கச் சதி; இரு அமைச்சர்களின் பதவி பறிப்பு



(புதுடில்லி)

தனது வெளிநாட்டுப் பயணத்தின் போது ஆட்சியை கவிழ்க்கும் சதியில் ஈடுபட்ட இரண்டு அமைச்சர்களின் பதவியை ஒரிசா முதல்வர் நவீன் பட்நாயக் பறித்துள்ளார்.

அத்துடன் அதிருப்தி "அணி தலைவரான மொகாபத்ரா எம்.பி. மற்றும் எம்.எல்.ஏ.க்கள் இருவரையும் கட்சியிலிருந்து நீக்கியுள்ளார். ஒடிசா மாநிலததில் பிஜு ஜனதாதளம் கட்சியின் ஆட்சி நடந்து வருகிறது.

முதல்வராக கட்சியின் தலைவர் நவீன் பட்நாயக் பணித்துள்ளார். இவருக்கும் கட்சியின் மூத்த ஆலோசகரும் கட்சிக்கான பல செயற்திட்டங்களை உருவாக்க காரணமாக இருந்தவருமான எம.பி. பியாரி மோகன் மொகாபத்ராவுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு முதல்வர் மீது மொகாபத்ரா கடும் அதிருப்தியில் இருந்தார்.

இந்நிலையில், முதல்வர் நவீன் பட்நாயக் சமீபத்தில் லண்டன் பயணம் மேற்கொண்டார். இந்தத் தருணத்தை பயன்படுத்தி கட்சியின் அதிருப்தி எம்.எல்.ஏ. க்கள் மற்றும் மூன்று அமைச்சர்களை மொகாபத்ரா தன் வீட்டுக்கு அழைத்து இரகசிய ஆலோசனை நடத்தினார்.

இதனால் பிஜு ஜனதா தளம் கட்சி உடையப்போகிறது என்றும அரசு கவிழும் அபாயமுள்ளது என்றும் காங்கிரஸ் ஆதரவுடன் புதிய அரசு அமையும் என்றும் செய்திகள் வெளியாகின.

இது பற்றிய தகவல் அறிந்ததும் முதல்வர் நவீன் பட்நாயக், தன் லண்டன் பயணத்தை ஒரு நாள் முன்னதாகவே முடித்துக் கொண்டு ஒரிசா திரும்பினார். ஒரிசா திரும்பும் வழியில் டில்லி வந்த அவர் அங்கு தன் கட்சி எம்.பி.க்களுடன் ஆலோசனை நடத்தினார். பின்னர் புவனேஸ்வர் திரும்பியதும், நேற்று முன்தினம் கட்சியின் மூத்த தலைவர்களுடன் ஆலோசனையில் ஈடுபட்டார்.

## கட்சிக்கு எதிராக செயற்பட்டவர்களை கொலை செய்தோம்



கேரள மாநிலம் இடுக்கி மாவட்ட மார்க்சிஸ்ட் செயலாளர் மணி பொதுக் கூட்டம் ஒன்றில் பேசிய போது, கட்சிக்கு எதிராக செயற்பட்டவர்களை கொலை செய்ததாக பட்டியலிட்டார்.

இந்த "கொலை வெறி" பேச்சு இந்தியா முழுவதும் அரசியல் வாதிகள் மத்தியில் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது.

பா.ஜ.க தலைவர் நிதின் கட்காரி, குஜராத் முதல்வர் நரேந்திரமோடி உள்ளிட்டோர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

மணி மீது நடவடிக்கை எடுக்கப்படும் என மார்க்சிஸ்ட் தலைவர் பிரகாஷ் கராத் தெரிவித்துள்ளார்.

மேலும் கேரள எதிர்க் கட்சி தலைவரும்,மார்க்சிஸ்ட் மூத்த தலைவருமான அச்சுதானந்தன், மணியை கடுமையாக விமர்சித்துள்ளார்.

இதற்கிடையே மணியின் "கொலை வெறி" பேச்சு பேஸ்புக், யுரியூப் உட்பட பல்வேறு இணையத்தளங்களில் வெளியிடப்பட்டுள்ளது.

இதனை தினமும் ஆயிரக்கணக்கானோர் படித்து வருகின்றனர். வெளிநாட்டு செய்தி தொலைக்காட்சி சனல்களிலும் மணியின் பேச்சு வெளியிடப்பட்டு வருகிறது.

கடந்த சில தினங்களுக்கு முன்பு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து பிரிந்த முக்கிய நபர் ஒருவர் கேரளாவில் நடு ரோட்டில் வெட்டி கொலை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# 31 ஆண்டுகளாக அமுலில் இருந்த அவசர சட்டம் எகிப்தில் நீக்கம்

எகிப்து நாட்டில் கடந்த 31 ஆண்டுகளாக அமுலில் இருந்த அவசர சட்டம் முடிவுக்கு வந்துள்ளது.

எகிப்தில் கடந்த 1981ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி அன்வர் சதாத் கொல்லப்பட்ட போது, அவசர சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து ஜனாதிபதியான ஹோஸ்னி முபாரக், இந்தச் சட்டத்தை ஒவ்வொரு ஆண்டும் நீட்டித்து வந்தார்.


இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி போராட்டக்காரர்கள் பலர் சிறையில் அடைக்கப்பட்டனர். கிட்டத்தட்ட 30 ஆண்டு காலம் ஜனாதிபதி பதவியை வகித்த முபாரக், மக்கள் புரட்சி மூலம் கடந்த ஆண்டு பதவியிலிருந்து விலகினார்.

இதையடுத்து இராணுவ உயர்மட்ட கவுன்சில் தற்போது இடைக்கால ஆட்சி நடத்துகிறது. எகிப்தில் 60 ஆண்டுகளுக்குப் பிறகு, கடந்த வாரம் ஜனநாயக முறைப்படி தேர்தல் நடந்தது. இந்த தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காததால் வரும் 16 மற்றும் 17ஆம் திகதிகளில் மீண்டும் தேர்தல் நடத்தப்பட உள்ளது.

ஜனநாயக நடைமுறைப்படி ஆட்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டதும், அவசர சட்டத்தை மீளப் பெறுவதாக இராணுவ உயர்மட்ட கவுன்சில் கடந்த ஜனவரி மாதம் உறுதியளித்தது.

இருப்பினும் இந்த சட்டம் மீளப் பெறாமலேயே இருந்தது. இந்நிலையில் நேற்று முன்தினம் இரவுடன் இந்த அவசர சட்டம் காலாவதியானது. இதை மேலும் நீட்டிக்கும் திட்டமில்லை என இராணுவ ஆட்சியாளர்கள் தெரிவித்துள்ளதால், 31 ஆண்டுகால அவசர சட்டம் முடிவு பெற்று விட்டது.

# நோயாளிகளை சரிவர பராமரிக்காத மருத்துவ தாதி பணி நீக்கம்



பிரித்தானியாவில் நோயாளிகளிடம் அலட்சியப் போக்குடன் நடந்து கொண்ட மருத்துவ தாதி பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

பிரித்தானியாவில் பிர்மிங்காமில் உள்ள பிரபல மருத்துவ மனையில் மருத்துவ தாதியாக பணிபுரிந்த சரிதா மித்தல்(வயது 46). என்பவர் நோயாளிகளிடம் மாத்திரைகளை கையில் கொடுக்காமல் தூக்கி எறியும் வழக்கத்தைக் கொண்டிருந்தார்.

இது தொடர்பாக பலர் புகார் கூறியதன் பேரில், பிரிட்டன் செவிலியர் சபை விசாரணை நடத்தியது. நோயாளிகள் பலரிடம் விசாரித்ததில் இவரது நடவடிக்கை உறுதிசெய்யப்பட்டது.

நோயாளிகள் அருகே சென்று மாத்திரையோ, மருந்தோ கொடுத்தால் தனக்கு நோய் தொற்றி விடும் என்ற பயத்தில் இவர், இது போல நடந்து கொண்டதாகக் கூறப்பட்டது.

நோயாளிகளின் படுக்கையை மாற்றும் விடயத்திலும் இவர் காலதாமதப் போக்கை கடைபிடித்ததாக புகார் கூறப்பட்டது. இதையடுத்து இவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

# சிரியாவில் இறந்தது போன்று நடித்து உயிர் பிழைத்த 11 வயது சிறுவன்



© AFP/Getty Images

சிரியாவில் மக்களைக் கொன்று குவிக்கும் மர்ம நபர்களிடம் இருந்து 11 வயது சிறுவன் தந்திரமாக உயிர் தப்பி உள்ளார்.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் அசாத்திற்கு எதிராக மக்கள் கடந்த ஓராண்டிற்கும் மேலாக போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த 2 நாட்களுக்கு முன்பு ஹவுலா நகரில் நள்ளிரவு வீடு புகுந்த மர்ம நபர்கள் துப்பாக்கியால் சுட்டு 108 பேரைக் கொன்றனர், பலர் காயம் அடைந்தனர்.

இச்சம்பவத்தில் 11 வயது சிறுவன் அலி எல்-சயீத் தந்திரமாக உயிர் தப்பி உள்ளார்

நள்ளிரவில் இவனது வீட்டிற்குள் துப்பாக்கி ஏந்திய மர்ம நபர்கள் 11 பேர் புகுந்தனர். அவர்கள் நன்றாக அயர்ந்து தூங்கி கொண்டிருந்தவர்களை சரமாரியாக சுட்டனர். அதில் அலியின் பெற்றோர் மற்றும் 6 வயது தம்பி நாடர் உள்பட 4 பேர் உயிர் இழந்தனர். ஆனால் அலி மட்டும் துப்பாக்கி சூட்டில் இருந்து தப்பினார். இருந்தும் இங்கு யாராவது உயிருடன் மிஞ்சியுள்ளனரா? என மர்ம நபர்கள் தேடினர்.

அப்போது அலி, இறந்து பிணமாக கிடந்த தனது தம்பியின் ரத்தத்தை எடுத்து தனது சட்டையில் தேய்த்து கொண்டு பிணங்களுடன் தானும் இறந்தது போல் படுத்து கொண்டார்.

அவனது நடிப்பை உண்மை என்று நம்பிய தீவிரவாதிகள் அலியை உயிருடன் விட்டு சென்றனர். தற்போது இந்தச் சம்பவம் வெளி உலகிற்கு தெரியவந்துள்ளது.

உலகச் செய்திகள்

# கொலை செய்த உடற் பாகங்களை அரசுக்கு அனுப்பிய நடிகர்

கனடிய நடிகர் ஒருவர், மர்ம நபர் ஒருவரைக் கொன்று விட்டு அவரது உடலைத்துண்டு, துண்டாக வெட்டி அரசு அதிகாரிகளுக்கு அனுப்பியதோடு, வீடியோவையும் அனுப்பி வைத்துள்ளார்.

கனடாவை சேர்ந்தவர் லூகா ரோக்கோ மாக்னோட்டா(வயது 29) என்பவர் ஆபாசப் படங்களில் நடிப்பவர். இவர் கனடா அரசு அதிகாரிகளுக்கு சமீபத்தில் ஒரு வீடியோ காட்சியை மின்னஞ்சலில் அனுப்பி உள்ளார்.

லூகா அனுப்பிய '1 Lunatic 1 Ice pick' என்ற அந்த வீடியோ படத்தில் மனித உடல் பாகங்களை துண்டு துண்டாக வெட்டி ஒரு சூட்கேஸில் வைப்பது போல படம் பிடிக்கப்பட்டு இருந்தது. வீடியோவின் ஆரம்பத்தில் அடையாளம் தெரியாத ஒரு ஆண் படுக்கையில் படுக்க வைக்கப்பட்டுள்ளார்.

அதன்பிறகு அவர் கத்தியால் குத்தப்படுகிறார். பிறகு அந்த நபரின் குரல்வளை அறுக்கப்படுகிறது.

கொடூரமாக கொலை செய்யப்பட்ட அந்த நபரின் உடலில் இருந்த ஒரு கால் கனடா கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைமையகத்திற்கும், ஒரு கை ஒட்டாவா தபால் நிலையத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. லூகா இருந்த வீட்டின் அருகே ஒரு சூட்கேஸ் கிடந்தது. அதை திறந்து பார்த்தபோது அதில் ஒரு ஆணின் பின்புறம் அழுகி, புழுத்துப் போய் இருந்தது.

ஆனால் இந்த வீடியோ எங்கு, எப்போது யாரால் படம் பிடிக்கப்பட்டது என்பது இன்னும் புதிராகவே உள்ளது. மேலும் வீடியோவில் வரும் நபரின் முகமும் மறைக்கப்பட்டுள்ளது.



பொலிஸாரின் விசாரணையில் வீடியோவில் வரும் சம்பவம் ஒரு வாரத்திற்கு முன்பு படம்பிடிக்கப்பட்டு இருக்கலாம் என்று தெரியவந்துள்ளது.

# அமெரிக்க ஜனாதிபதியாக மீண்டும் ஒபாமா பதவி ஏற்பார்



அமெரிக்காவில் நவம்பர் மாதம் நடைபெற உள்ள ஜனாதிபதி தேர்தலில் பராக் ஒபாமா மீண்டும் வெற்றி பெறுவார் என முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித்தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் ஜனாதிபதி ஒபாமாவும், குடியரசுக் கட்சி சார்பில் மிட் ரோம்னியும் போட்டியிடுகின்றனர்.

இந்நிலையில் தொலைக்காட்சியில் பேட்டியளித்த முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி கிளிண்டன் கூறியதாவது, தேர்தலில் யார் வெற்றி பெறுவார் என்பதை 5 முதல் 6 விஷயங்கள்தான் தீர்மானிக்கும் என்று கருதுகிறேன்.

அவை நாட்டின் பொருளாதார நிலை உள்ளிட்ட தேசிய பிரச்சினைகளாகவே இருக்கும். இப்போதைய நிலையில் போட்டி கடுமையாக இருக்கும் என்று கருதப்பட்டாலும், தேர்தல் நடைபெறும்போது நிச்சயமாக ஒபாமாவுக்குதான் அதிக ஆதரவு இருக்கும். எனவே அவர் மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார் என்று நம்புகிறேன் என்றார் கிளிண்டன்.

புளோரிடா மாகாணத்தில் நடத்தப்பட்ட கருத்து கணிப்பு ஒபாமாவைவிட ரோம்னிக்கு ஆதரவு சற்று கூடுதலாகவே இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தேசிய அளவில் இருவருக்கும் கடும் போட்டி இருக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும் ஜனாதிபதியாக ஒபாமா மேற்கொண்டுள்ள சாதனைகள் அவருக்கு மீண்டும் வெற்றியைத் தரும் என்று அவரது ஆதரவாளர்கள் நம்பிக்கைத் தெரிவித்துள்ளனர்.

# அமெரிக்க வீரர்கள் யாரும் பாகிஸ்தானில் இல்லை



(வொஷிங்டன்)

பாகிஸ்தானில் இராணுவப் பயிற்சி அளிக்கும் அமெரிக்க வீரர்கள் யாரும இல்லை என்று அமெரிக்க இராணுவ தலைமையகம் பென்டகன் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானின் பெஷாவர் நகரில் தீவிரவாதிகள் ஊடுருவலைத் தடுப்பது குறித்து, அந்நாட்டு வீரர்களுக்கு அமெரிக்க வீரர்கள் பயிற்சி அளித்து வந்தனர்.

இந்நிலையில் நேட்டோ படை தாக்குதலில் தவறுதலாக பாகிஸ்தான் வீரர்கள் 24 பேர் பரிதாபமாக இறந்தனர். அதன்பின் பாகிஸ்தானில் இருந்து அமெரிக்க வீரர்கள் வெளியேற வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது. அதன்படி, அமெரிக்க வீரர்கள் மீளப் பெறப்பட்டனர். எனினும் 10இற்கும் அதிகமான அமெரிக்க வீரர்கள் தங்கியிருப்பதாக பாகிஸ்தான் குற்றம் சாட்டிவருகிறது.

இதுகுறித்து அமெரிக்க இராணுவ தலைமையகம் பென்டகன் செய்தி தொடர்பாளர் ஜான் கிர்பி கூறுகையில், பாகிஸ்தானில் அமெரிக்க பயிற்சியாளர்கள் யாரும் இல்லை. ஒருங்கிணைப்பு அதிகாரிகள் 2 பேர் மட்டும் தான் பெஷாவரில் இருந்தனர். அவர்களும் இப்போது ஆப்கானில் உள்ள பக்ரம் பகுதியில் உள்ளனர் என்றார்.

# எலிசபெத் அரசிக்கு சார்ள்ஸின் பரிசு

பிரிட்டன் அரசியாக எலிசபெத் பதவியேற்று 60 ஆண்டுகள் நிறைவடைவதை ஒட்டி, இளவரசர் சார்ள்ஸ் தன் அன்புத்தாய்க்கு பரிசளிக்க முடிவு செய்துள்ளார்.

இதன் முதல் நிகழ்வாக பக்கிங்ஹாம் அரண்மனையில் விழா நடைபெறுகிறது, இதில் பொப் இசை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதன் பின் லண்டன் தெருக்களில் பெரிய ஊர்வலம் நடத்தப்படும், தேம்ஸ் நதிக்கரையில் ஆயிரம் படகுகள் பவனி வரும்.

பிபிசியில் வெளியாகும் ஆவணப் படத்தில், தங்கள் தனிப்பட்ட வாழ்வில் தாயும் மகனுமாக இருந்த காட்சிகள் இடம் பெறும். இதுவரை மக்கள எவரும் எங்கும் பார்த்திராத புகைப்படங்களைக் காணலாம்.

சிறுவர்களான இளவரசர் சார்ள்ஸும், இளவரசி ஆனியும் இருக்கும் படங்களைப் பார்க்கலாம். இவர்கள் இருவரும் 1957ஆம் ஆண்டில் கிழக்கு இங்கிலாந்தின் கடற்கரை மணலில் விளையாடிய படங்களும் உண்டு.

இளம் தாயாக இருந்தது முதல் இன்று பாட்டியானது வரை எலிசபெத் அரசியாரின் குடும்பப் பொறுப்புகளையும், அவற்றை அவர் மேற்கொண்ட விதத்தை இந்த படங்கள் உணர்த்தும்.

தியாகம், பொறுப்புணர்ச்சி, ஒப்படைப்பு ஆகியவற்றின் திருவுருமாக அரசியார் விளங்குவதாகக் கூறிய இளவரசர் சார்ள்ஸ் தன் தாயாரைக் குறித்து அதிகப் பெருமை அடைந்தார்.




A.J.Nimalrajan

# பேஸ்புக்கின் புதிய வெளியீடு




பிரபல சமூக இணையதளமான பேஸ்புக் Facebook Camera என்ற ஒரு புதிய மென்பொருளை வெளியிட்டு உள்ளது. இந்த மென்பொருளை ஐபோன்களில் உபயோகிக்க முடியும். இந்த மென்பொருள் மூலம் மொபைலில் எடுக்கக் கூடிய போட்டோக்களை நேரடியாக பேஸ்புக் தளங்களில் பகிரலாம். ஒரே நேரத்தில் ஒன்றுக்கும் அதிகமான போட்டோக்களை உங்கள் மொபைலில் இருந்து பகிரலாம். 4.9 MB அளவுடைய இந்த மென்பொருளை இலவசமாக வழங்குகிறது பேஸ்புக் நிறுவனம். சாதாரண பேஸ்புக் மொபைல் அப்ளிகேசனை விட இந்த மென்பொருள் வேகமாக இயங்கும் என்று அறிவித்து உள்ளது.

## பேஸ்புக் குரூப்பில் Upload File




உலகம் முழுவதும் சுமார் 380 மில்லியன் பேஸ்புக் பயனாளிகள் பேஸ்புக் குறுப் வசதியை உபயோகித்து வருகின்றனர். இப்பொழுது பேஸ்புக் குறுப்பில் Upload File என்ற ஒரு புதிய வசதியை அறிமுக படுத்தி உள்ளது பேஸ்புக் நிறுவனம். இந்த வசதியின் மூலம் உங்களிடம் உள்ள பைல்களை மற்ற தளங்களின் உதவி இல்லாமல் நேரடியாக அப்லோட் செய்து பகிர்ந்து கொள்ளலாம். உதாரணமாக உங்களிடம் ஒரு பிடிஎப் பைல் இருக்கிறது என வைத்து கொள்வோம். இதற்கு முன்னர் மற்றத் தளங்களில் அப்லோட் செய்து அந்த லிங்கை தான் பேஸ்புக்கில் பகிர முடியும். இனி அப்படி செய்யத் தேவையில்லை நேரடியாக பேஸ்புக்கிலேயே பகிர்ந்து கொள்ளலாம்.

## மென்பொருளின் சிறப்பம்சங்கள்:

- ஒரே நேரத்தில் பல போட்டோக்களைப் பகிர முடியும்.
- உங்களின் பேஸ்புக் நண்பர்கள் சமீபத்தில் பகிர்ந்த போட்டோக்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் காணலாம்.
- போட்டோக்களை தேவைக்கு ஏற்ப வெட்டவும்(Crop), சில ஸ்பெஷல் எபெக்ட்களை சேர்த்து பேஸ்புக்கில் பகிரலாம்.
- இந்த மென்பொருள் மூலம் Tag, Captions வசதிகளை நீங்கள் பகிரும் போட்டோக்களில் சேர்த்துக் கொள்ளலாம்.
- இது முற்றிலும் இலவசமான மென்பொருள்.





## Huawei Dongle ஐ Unlock செய்வது எப்படி?

Dongle I Unlock செய்வது எப்படி என்று பார்ப்போம்.Dongle I Unlock செய்வதற்கு கடைக்கு சென்றால்,எப்படியும் உங்களிடம் 250 ரூபாய் சேவை கட்டணமாக அறவிடுவார்கள். அதை நான் இங்கு இலவசமாக சொல்லித்தருகிறேன்.

இணையச்சேவை வழங்குநர்களின் (Airtel, Mobitel, Dialog,Etisalat) Dongle இனை நாம் வாங்கினால் அவர்களுடைய SIM ia தவிர வேறு எந்த SIM யையும் பாவிக்க இயலாதவாறு தடுத்து வைத்து இருப்பார்கள். நாம் வேறு ஒரு நிறுவனத்துடைய SIM இனை Dongle இல் போட்டால் Unlock Code கேட்கும். அதில் சரியான Code இனை நாம் கொடுத்து விட்டால் அந்த Dongle . Unlock செய்யப்பட்டு விடும். சரி இந்த Unlock Code இனை எப்படி




கண்டுபிடிப்பது?

முதலில் உங்களுடைய Dongle இன் 15 இலக்கத்தை கொண்ட IMEI Number I கண்டுபிடியுங்கள். இது Dongle இன் பின் புறத்தில் காணப்படும்.

இதை http://www.bb5.at/huawei.php?imei= *************** அப்படியே Copy செய்து, இதில் இருக்கும் * இற்கு பதிலாக உங்களுடைய IMEI Number யை கொடுத்து Address Bar இல் Paste செய்து கொள்ளுங்கள்.


இப்போது உங்களுடைய Dongle இற்குரிய Unlock Code கிடைக்கும்.

அதை அப்படியே Copy செய்து விட்டு, வேறு ஒரு நிறுவனத்துடைய SIM இனை Dongle இற்குள் போடுங்கள். உங்களிடம் Unlock Code கேட்கும், அந்த இடத்தில் Paste செய்து கொள்ளுங்கள் Unlock ஆகி விடும்.

## இணையதளங்களை முடக்க ஹேக்கர்கள் சதி; கூகுள் எச்சரிக்கை

**உலகின்** அனைத்து கம்ப்யூட்டர்களையும் கட்டுப்படுத்தும் வகையில், புதிய வைரசை ஹேக்கர்கள் பரப்பியுள்ளதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியிருக்கிறது. இந்த புதிய வைரஸ்களால் வரும் ஜூலை மாதம் இணையதளங்கள் முடக்கப்படுவதற்கான வாய்ப்பிருப்பதாக கூகுள் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வைரஸால் பாதிக்கப்பட்ட கம்ப்யூட்டர்களை சரிசெய்து தருவதாக, ஹேக்கர்கள் மூலம் சர்வதேச அளவில் வெளியிடப்பட்ட ஒரு விளம்பரத்தினால் இந்த கம்ப்யூட்டர் வைரஸ் பாதிப்பு



ஏற்பட்டதாக தகவல் அம்பலமாகி உள்ளது. இந்த வைரஸ் பாதிப்பினால் இதுவரை 3 லட்சத்து 80 ஆயிரம் கம்ப்யூட்டர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது சம்பந்தமாக அமெரிக்க புலனாய்வு அமைப்பு FPI, வைரஸ் பாதிப்பிலிருந்து கம்ப்யூட்டர்களை பாதுகாக்கும் வகையில் முயற்சிகளை மேற்கொண்டது.

கம்ப்யூட்டர் வைரசால் பாதிக்கப்பட்டுள்ளதா என்பதை கண்டறியவும், அப்படி பாதிக்கப்பட்டிருந்தால் அதை சரி செய்யும் வழியினையும், அமெரிக்க புலனாய்வு அமைப்பு ஏற்படுத்திய இணையதளத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால், சிக்கன நடவடிக்கை காரணமாக இந்த பாதுகாப்பு இணையத்தை மூடுவதற்கு FPI முடிவு செய்துள்ளது. இதனால் புதிய வைரசால் இணையதளங்கள் முடக்கப்படும் அபாயம் இருப்பதாக கூகுள் எச்சரித்துள்ளது.

## எக்ஸெல் COMBIN பங்சன்

**எக்ஸெல்** தொகுப்பில் COMBIN என்று ஒரு பங்சன் உள்ளது. இதனைப் பலர் பயன்படுத்தியிருக்க மாட்டார்கள். ஏன், இது எதற்கு என்றே பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். தெரிய வேண்டும் என்ற அவசியமும் இல்லாமல் இருந்திருக்கலாம். தேவை ஏற்படும் போது நாம் இதனைத் தேடி அறிந்து கொள்வோம். இதனை இங்கு காணலாம்.

இந்த பங்சன், ஒரு செட் எண்கள் அல்லது எழுத்துக்கள் அல்லது இரண்டையும் கலந்தவற்றைக் கொண்டு எத்தனை வகையாக இணைக்கலாம் என்பதனை உடனே காட்டும். எடுத்துக்காட்டாக 26 எழுத்துக்கள் ஆங்கிலத்தில் உள்ளன.


10 எண்கள் உள்ளன. (0 முதல் 9 வரை) . இவற்றைப் பயன்படுத்தி நான்கு கரக்டர்கள் உள்ள இணைப்புகள் எத்தனை உருவாக்க முடியும்?

நாம் பேப்பர் பேனா எடுத்துப் போட்டால் இன்று மட்டுமல்ல ஒரு வாரத்திற்கு மேல் ஆகலாம். எக்ஸெல் கண் சிமிட்டும் நேரத்தில் சொல்லி விடும். அதற்கு இந்த பங்சன் உதவுகிறது.

இந்த பங்சன் செயல்பட பங்சன். கீழ்க்கண்டவாறு அமைகிறது


=COMBIN (universe, sets). இதில் universe என்பது புதிதாக அமைக்கப்படுவதற்கான டேட்டா.

இங்கே 26 எழுத்துக்களும் பத்து எண்களுமாகும். sets என்பது ஒவ்வொரு இணப்பிலும் எத்தனை கேரக்டர் இருக்க வேண்டும்



என்பதனைக் குறிக்கிறது. எனவே நாம் மேலே சொன்ன டேட்டாவிற்கு போர்முலா கீழ்க்கண்டவாறு அமைகிறது : =COMBIN(26+10,4)

எத்தனை இணைப்பு இதில் உருவாகும் என்று அறிய பலர் ஆர்வமாக இருப்பீர்கள் இல்லையா? 58,905 இணைப்பு கரக்டர்களை உருவாக்கலாம்.




## இணையம் ஒரு போதை?

சிகரெட், மது போல இன்டர்நெட்டும் ஒரு போதை என ஓர் ஆய்வு தெரிவிக்கிறது. ஒரு நாள் இன்டர்நெட் இணைப்பு இல்லாமல், அதனைப் பார்க்க முடியவில்லை என்றால், என்ன பதை பதைப்பு ஏற்படுகிறது.

மெயில் பார்க்க முடியவில்லை, என் பேஸ்புக் நண்பர்களுடன் செய்தி பரிமாற முடியவில்லை என்று அத்தனை பேரும் பதற்றம் அடைகின்றனர். பித்துப் பிடித்தவர் போல மாறுகின்றனர்.

இங்கிலாந்தில் 18 முதல் 65 வயது வரை உள்ள ஆயிரம் பேரை இது குறித்து கருத்து கேட்ட போது, சிகரெட்டுக்கு எப்படி, அதனைப் பயன்படுத்துபவர்கள் அடிமையாகிறார்களோ, அதே போலத்தான் இன்டர் நெட்டுக்கும் என கருத்து தெரிவித்துள்ளனர்.

இன்டர்நெட் இணைப்பு இல்லை என்றால், அது என் ஒரு கையை வெட்டியது போல இருக்கும் என்றார் ஒருவா?.

இவர்களில் பெரும்பாலானவர்கள் பேஸ்புக், ட்விட்டர், மெயில் -- ஆகியனவற்றின் தொடர்பு கிடைக்காமல் போவதே இந்த மனநிலைக்குக் காரணம் என்று தெரிவித்துள்ளனர்.

இரவு படுக்கப் போகும்போது பேஸ்புக், ட்விட்டர் அப்டேட் செய்து படுக்கைக்குச் செல்வதைப் பழக்கமாகப் பலர் கொண்டுள்ளனர். எனவே இது தடைப்படுகையில், தூக்கம் வராமல் தவிக்கின்றனர்.

ஆனால், இந்தக்கணக்கெடுப்பில் 21% பேர், இன்டர்நெட் இல்லை என்றால், ஆஹா! இன்று விடுதலை சுதந்திரமாக இருப்பேன் என்றும் கருத்து தெரிவித்துள்ளனர்.

# அந்தணரல்லாத பூசகர்களுக்கு விசேட பயிற்சிப் பட்டறை

(முழங்காவில்)

அந்தணரல்லாத இந்து பூசகர்களுக்கான இரண்டு வார வதிவிடப் பயிற்சிப் பட்டறையொன்றை நடத்துவதற்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடைவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறை எதிர் வரும் 11ஆம் திகதி தொடக்கம் 25ஆம் திகதிவரை முள்ளிய வளை வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் நடைபெற வுள்ளதாக இந்து கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சியில் கலந்துகொள்ள ஆர்வமுள்ள இந்துப் பூசகர்கள் இந்து காலாசார திணைக்களத்தோடு 011255264, 0112552641 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (112)

# மின்தடை பற்றிய தகவல்

பத்திரிகைகளில் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த இடங்களுக்கு மேலதிகமாக வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ்அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்யவேண்டியிருப்பதால்,

03.06.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப்பிரதேசம், திருநெல்வேலிப்பிரதேசம், தட்டார்தெரு, கோம்பயன்மணல் பிரதேசம், கச்சேரிப் பிரதேசம், யாழ் நகரம் முழுவதும், கொட்டடி, நாவாந்துறை, மீனாட்ச்சிபுரம், குருநகர் ஆகிய இடங்களிலும்,

05.06.2012 செவ்வாய்க்கிழமை, 07.06.2012 வியாழக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம், உரும்பிராய் மற்றும் மருதனார்மடம் பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும்,

08.06.2012 வெள்ளிக்கிழமை, 10.06.2012 ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை புன்னாலைக் கட்டுவன், அச்சசெழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம், மருதனார்மடம், உடுவில், மானிப்பாய், சங்குவேலி, கட்டுடை, சுதுமலை ஆகிய இடங்களிலும்,

06.06.2012 புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை புன்னாலைக் கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

09.06.2012 சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப் பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்சாரசபை அறிவித்துள்ளது.

# சந்தேக நபர்களை 48 மணி நேரம் தடுத்து வைக்க சட்டத்திருத்தம்?

(கொழும்பு)

கைது செய்யப்படும் சந்தேக நபர்களை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்துவதற்குமுன் 48 மணித்தியாலங்களுக்கு தடுத்து வைப்பதற்கு பொலிஸாருக்கு அதிகாரமளிக்கும் வகையில் குற்றவியல் நடைமுறைக் கோவையில் திருத்தம் செய்வதற்கு நீதியமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. தற்போது 24 மணித்தியாலங்கள் வரையே இவ்வாறு தடுத்து வைப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவு போன்ற குற்றங்களுக்கான விசேட பட்டியலொன்றையும் இத்திருத்தம் கொண்டிருக்கும். நாட்டில் அதிகரித்துவரும் குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவதே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும் என அமைச்சின் உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சட்டத் திருத்தத்தை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வரவேற்பதாக அதன் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். குற்றச்செயல்கள் அதிகரித்து வருவதால் சட்டத்தரணிகள் இதற்கு ஆதரவு வழங்குவதாக அவர் கூறியுள்ளார்.

பொலிஸ் நிலையங்களில் சட்டத்தரணிகளின் உரிமைகள் பாதுகாக்கப்படும், தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களை சட்டத்தரணிகள் நேரடியாக சந்திப்பதற்கு அனுமதி வழங்கப்படும் என சட்டத்தரணிகள் சங்கத்திற்கு பொலிஸ் மா அதிபர் உறுதியளித்துள்ளார் என விஜேதாஸ ராஜபக்ஷ கூறினார்.

# கடந்த வாரம் மட்டும் 21 சாராய வழக்கு

கடந்த வாரம் சாராயம் விற்பனை செய்தமை, சாராயம் காச்சியது தொடர்பாக 21 வழக்குகள் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பதாக யாழ்.பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார். இந்தக் காலப்பகுதியில் ஹெரோயின் பாவனை தொடர்பாக இரண்டு வழக்குகளும் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இத்தகவலைத் தெரிவித்தார். (பா)

## குற்றச்செயல்களில்...

துஷ்பிரயோகம் மேற்கொண்டுள்ளார். இந்தச் சந்தேக நபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தி அவர் தற்சமயம் சிறைச்சாலையில் உள்ளார்.

15 ஆயிரம் ரூபா பெறுமதியான கூரைத் தகரங்களைத் திருடிய சம்பவத்திலும் குற்றவாளி கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸ் பிரிவில் வீடொன்றில் இருந்து இருந்து பவுண் நகையை கொள்ளையிட்ட சந்தேக நபர் கைது செய்யப்பட்டதுடன், நகையும் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் அந்த வீட்டாரின் நெருங்கிய தொடர்புடைய ஒருவரே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், கோப்பாய் பொலிஸ் பிரிவில் வீடு உடைத்து திருடப்பட்ட டி.வி.டி. பிளேயர், ரீ.வி., வி.சி.டி., எம்.பி-3 போன்ற இலத்திரனியல் சாதனங்களும் மீட்கப்பட்டுள்ளன.

கொடிகாமம் பகுதியில் கடந்த மாதம் 29 ஆம் திகதி வீடு ஒன்றை உடைத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான உடைமைகளைக் களவாடியமை, கடை ஒன்றை உடைத்து 16 ஆயிரத்து 500 கிட் காட்களைக் களவு எடுத்தமை தொடர்பாக நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகின்றது.

இவர்களது தகவலை அடுத்து கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற 11 இலட்சத்து 7 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்ட சம்பவம் குறித்த தகவல் வெளியாகியுள்ளது. அத்துடன் சித்திரை மாதம் 29 ஆம் திகதி நடைபெற்ற 6 இலட்சத்து 29 ஆயிரம் தங்கப் பொருட்கள் களவாடப்பட்டமை, பங்குனி மாதம் பாடசாலையை உடைத்து நான்கு கணினிகள் அதற்குரிய பொருட்கள் களவாடப்பட்டமை குறித்த தகவல்கள் கிடைக்கப் பெற்றிருக்கின்றன.

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவில் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு கையடக்கத் தொலைபேசி திருடிய குற்றச்சாட்டில் சந்தேக நபர் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 26 ஆம் திகதி அச்சுவேலி பொலிஸ் பிரிவில் தனிமையில் இருந்த வயோதிபப் பெண் வீட்டின் கூரையைப் பிரித்து இறங்கியவர்களால் கொலை செய்யப்பட்டமை இது குறித்து ஆறு சந்தேக நபர்களிடம் வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. கொலையாளி விரைவில் பிடிபடுவார் எனவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார். (பா)

## தகவல்...

பெண்கள் ஊடகப் பேரவையின் நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். புலி ஆதரவு புலம்பெயர் தமிழர்கள் தங்களது நோக்கங்களைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக தகவல் தொழில்நுட்பத்துறையை பிழையாக பயன்படுத்திக் கொள்கின்றனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எந்தவொரு புதிய தொழில்நுட்பத்திலும் ஆபத்துக்கள் இல்லாமல் இல்லை என அவர் தெரிவித்துள்ளார். எவ்வாறான ஆபத்துக்கள் காணப்பட்டாலும் நவீன தொழில்நுட்பப் பயன்பாடு மிகவும் அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## அமெரிக்காவிடம்...

இரகசிய செயற்திட்டத்தை முதலில் நாடாளுமன்றத்தில் வெளியிட வேண்டும்.

தேசிய விவகாரங்களில் இரகசியமான பேரங்கள் இருக்க முடியாது. அமெரிக்கா, ஐ.நா. அல்லது வேறு வெளிநாட்டு அமைப்புகளுக்கு இரகசிய உறுதிமொழிகளை வழங்குவதற்கு முன்னர், செயற்திட்ட நடவடிக்கை குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிப்பதே பொருத்தமானது. என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## மத்திய...

வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் குறித்த மாணவன் குறித்த பாடசாலையில் இன்றைய நிகழ்வு ஒன்றுக்காக மாணவர்களுடன் யாழ்.மத்திய கல்லூரிக்கு அழைத்து வரப்பட்டிருந்ததாகவும், சம்பவ நேரத்தில் குறித்த மாணவனும், பிறிதொரு மாணவனும் மத்திய கல்லூரியின் பின்புறமாக இருந்த இந்த நீச்சல் தடாகத்திற்கு வந்ததாகவும் அதனுள் இறங்கி நீந்துகையில் நீச்சல் தெரியாத அந்த மாணவன் நீரில் மூழ்கி இறந்ததாகவும் தெரிய வருகின்றது.

சம்பவ நேரம் அப்பகுதியில் கடமையில் நின்றிருந்த பொலிஸார் ஒருவர் நீச்சல் தடாகத்தினுள் பாய்ந்த மாணவனைக் காப்பாற்ற முயற்சித்த போது அது கைகூடவில்லை என்றும் யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

மாணவனது சடலம் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் யாழ்.பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டது. (பா)

## திறந்த...

ஒரு தடையாக உள்ளது. எனவே எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் இந்நிலையம் சிறந்து விளங்க வேண்டும்.

உயர்கற்கை நிலையங்களில் கல்வியை மேற்கொள்வதன் மூலம் பெறக்கூடிய பயன்கள் மற்றும் வேலைவாய்ப்பு தன்மைகள் பற்றி மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். குறிப்பாக பாடசாலைகள் மட்டத்திலிருந்து தெளிவுபடுத்தல்களை ஆரம்பிக்க வேண்டும். அப்போது தான் இந்த செயற்பாடுகள் பூரண பயனை அடையும். இது போன்ற கற்கை நிலையங்கள் தொடர்பில் மக்களுக்கு போதிய தெளிவு இன்மை நிலவுகிறது அதனைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

நாடாளுமன்ற உறுப்பினரால் என்ரிப் திட்டத்தின் கீழ் 50 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டு புனரமைக் கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட இந்நிகழ்வில் இலங்கை திறந்த பல்கலைகழத்தின் உபவேந்தர் உபாலி விதானபத்திரண, மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், இலங்கை திறந்த பல்கலைகழகத்தின் பதிவாளர் விந்தியா ஜயசேன, அதன் பணிப்பாளர் நிசாந்த, ஓய்வு பெற்ற அரச அதிபர் துரைராஜா, ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் மாவட்ட அமைப்பாளர் தவநாதன் மற்றும் விரிவுரையாளர்கள், பணியாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## யாழ்.மத்திய...

மோதுண்ட நிலையில் படுகாயமடைந்த அவர் உடனடியாகவே யாழ்.போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனளிக்காது உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை, ஆசிரியரின் மரணச்சடங்கு இன்று மதியம் 2.00 மணியளவில் சுன்னாகம் பிரதேச செயலக ஒழுங்கையில் இடம் பெறவிருப்பதை முன்னிட்டு சகல ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், சேவைக்கழக உறுப்பினர்கள், இன்ரறக்கழக உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும், சார்ண உறுப்பினர்கள், பரியோவான் முதலுதவிப் படையினர், பாண்ட் வாத்தியக்குழு உறுப்பினர்கள் அனைவரையும் சீருடையுடன் பாடசாலையில் காலை 9.00 மணிக்கு ஒன்றுகூடுமாறு யாழ்.மத்திய கல்லூரியின் அதிபர் அறிவித்துள்ளார்.

## உள்நாட்டில்...

குழுவை இலங்கைக்கு அனுமதிக்குமாறு நவிபிள்ளை அரசிடம் கேட்டுள்ளார்.

நவிபிள்ளை தனது பயணத்துக்கான ஏற்பாடுகளைக் கவனிக்கவோ, பாதுகாப்பு ஒழுங்குகளை மேற்கொள்ளவோ இந்த அதிகாரிகளை அனுப்புவதானால் அதுபற்றி அரசாங்கம் கவனத்தில் எடுத்துக் கொள்ளும். அவர்கள் தொழில்நுட்ப உதவிகளை வழங்க விரும்பினால், அரசாங்கத்தின் இணக்கத்துடன் தான் அதைச் செய்ய முடியும். யாரும் வந்து இங்கு விசாரணைகளை நடத்த அனுமதிக்க முடியாது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## சுற்றுலாப்...

செய்தது. ஏற்கனவே தமது சொந்த இடத்திற்குச் சென்ற மக்கள் பல மணிநேரக் காத்திருப்பு மற்றும் பயணங்களால் களைப்படைந்திருந்தனர். வேறு வழியின்றி மினவும் சிரமப்பட்டுத் தமது சுயமுயற்சியால் மக்கள் தமது வீடுகளுக்குச் சென்றனர்.

போர் நிறைவடைந்து உள்ளூர் சுற்றுலாவில் நாட்டின் பெரும்பாலான மக்கள் சந்தோசமாக வாழ்கின்ற போதும், போர்க்காலங்களிலும் பெரும் கஷ்டங்களுக்கு உள்ளாகி சமாதான காலத்திலும் தங்களது துன்பம் முற்றாக நீங்கவில்லை என நெடுந்தீவுப் பயணி ஒருவர் தனது ஆதங்கத்தை வெளியிட்டார்.

# நயினாதீவு படகு கட்டண அதிகரிப்பு ஆலய நிர்வாகம் தீர்மானிக்க இயலாது


## அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

குறிகாட்டுவான் படகு சேவைக்கட்டணம் அதிகரிப்பு தொடர்பாக ஆலய நிர்வாகக் கூட்டத்தில் தீர்மானிக்க முடியாதெனவும் இதனை யாழ். மாவட்ட விலை நிர்ணய குழுவே தீர்மானிக்கும் எனவும், இவ்வாறான கூட்டங்களில் படகு சேவை கட்டண உயர்வை தவிர்த்து ஏனைய பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாமென யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

நயினாதீவு பெருந்திருவிழா தொடர்பான கூட்டம் யாழ். செயலகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்ட படகு உரிமையாளர்கள் கருத்து தெரிவிக்கையில், படகின் இயந்திர தாதிகள், டீசல் போன்றவற்றின் அதிகரிப்புக்கு ஏற்ப படகுக் கட்டணம் ரூபா 30 இல் இருந்து 40 ரூபாவாக உயர்த் துமாறு கோரியுள்ளனர்.

இதற்கு யாழ். மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் செ.பிரணவநாதன் தெரிவிக்கையில், குறிகாட்டு



வானில். இருந்து நெடுந்தீவிற்கு செல்வதற்கான படகுக் கட்டணம் 60 ரூபா மட்டுமே. இது 13 கடல் மைல் தூரத்தை கொண்ட நெடும பயணம்.


ஆனால் குறிகாட்டுவானில் இருந்து நயினாதீவிற்கு 2 கடல் மைல் தூரத்திற்கு தற்போது அறவிடும் 30 ரூபாவே மிகக் கடுமையான வீதம் என ஆணையாளர் தெரிவித்தார்.

இவரைத் தொடர்ந்து அரச அதிபர் சு.அருமைநாயகம் தெரிவிக்கையில், படகுக் கட்டணம் தொடர்பாக மாவட்டவிலை நிர்ணய குழுவால் விலை நிர்ணயம் செய்யப்பட்டு வேலணை பிரதேச சபைக்கு அறிவிக்கப்படும் எனவும் குறிகாட்டுவான்-நயினாதீவு துறைமுக விஸ்தரிப்பு தொடர்பாக முக்கியமாக ஆராயப்பட வேண்டியுள்ளதாவும் காலத்தின் தேவைகருதி விஸ்தரிக்கப்படவிருப்பதால் அவ்விடயம் தொடார்பாக பின்னர் ஆராய்யப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் மிகவும் வசதிவாய்ந்த பொருத்தமான படகுகள் மின்வசதியுடன் இரவு சேவைக்கு அனுமதிக்கப்படும் என்றும், மேலும் 500 கே.வி. மின்சார ஜெனரேற்றர் அடுத்த வாரம் சுன்னாகத்திலிருந்து நயினாதீவுக்கு கொண்டு செல்லப்படும் எனவும் இதன் மூலம் 24 மணிநேர மின் கிடைக்கக்கூடும் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் நயினாதீவு, குறிகாட்டுவான் படகுகள் இணைக்கும் விதத்தில் கடற்படையினர் பூரண ஒத்துழைப்பு வழங்குவர் என தெரிவித்துள்ளார்.

# பிரகீத் எக்நெலிகொட குறித்து கவனம் செலுத்தும் அமெரிக்கா



லங்கா ஈ நியூஸ் ஊடகவியலாளர் பிரகீத் எக்நெலிகொட காணாமற்போன சம்பவம் தொடர்பில் கவனம் செலுத்தி வருவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

காணாமற் போதல் சம்பவம் தொடர்பில் நம்பகமான முறையில் இலங்கை அரசாங்கம் விசாரணை நடத்த வேண்டுமென அமெரிக்கா கோரியுள்ளது. ஊடகவியலாளர்களும், ஊடக நிறுவனங்களும் சுயாதீனமாக இயங்கக் கூடிய ஓர் சூழ்நிலையை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

ஊடக அடக்குமுறைக்கு உட்பட்டு கொல்லப்பட்ட, காணாமல் போன அல்லது வேறும் நாடுகளில் தஞ்சம் அடைந்துள்ள சிரேஷ்ட ஊடகவியலாளர்களின் பட்டியலில் பிரகீத் எக்நெலிகொடவின் பெயரையும் அமெரிக்கா இணைத்துள்ளது. பிரகீத் எக்நெலிகொட கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் காணாமற் போயிருந்தார்.

# ஊடகவியலாளர் தாக்குதல் கண்டித்து ஆர்ப்பாட்டம்

(அம்பாறை)



அம்பாறை அட்டாளைச்சேனை பிராந்திய ஊடகவியாளர் ஒருவரை கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கடந்த 28 ஆம் திகதி தாக்கிய சம்பவத்தைக் கண்டித்து அட்டாளைச்சேனை பொதுச்சந்தை சதுக்கத்தின் முன்னால் நேற்றுப் பகல் ஊடகவியாளர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

இந்த ஆர்ப்பாட்டத்தை அம்பாறை மாவட்ட மீடியா போரம், மூன்பிறைட் ஊடகவியாளர் சங்கம், தேசிய ஐக்கிய ஊடகவியாளர் ஒன்றியம், முஸ்லிம் ஐக்கிய ஊடகவியாளர் ஒன்றியம் ஆகிய நான்கு ஊடகவியாளர் சங்கங்கள் ஒன்றிணைந்து நடத்தின.

இதில், பேனாமுனைக்கு முன் காடைத்தனம் வெற்றுத் தூசு, ஊடகவியாளருக்கு எதிரான அடக்கு முறையை நிறுத்து, ஊடக சுதந்திரத்தை நிலைநிறுத்த போராடுவோம், என்பன உட்பட பல வாசகங்கள் தாங்கிய பதாகைகளுடன் சந்தை பொதுச் சதுக்கத்திற்கு முன்னால் பகல் 12.00 மணி தொடக்கம் ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# முபாரக்கிற்கு ஆயுள் தண்டனை



எகிப்திய முன்னாள் ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்கிற்கு நேற்றைய தினம் ஆயுள் தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. எகிப்தினை தனது குடும்ப ஆட்சியாக ஆண்டு வந்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்த கிளர்ச்சியாளர்கள் பலரை ஹொஸ்னி முபாரக் கொலை செய்ய உத்தரவிட்டதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இந்த வழக்கு விசாரணை ட்றயல் அட்பார் முறையில் கடந்த 10 மாதங்களாக நடந்து வந்த நிலையிலேயே குற்றவாளியாகக் காணப்பட்ட ஹொஸ்னி முபாரக்கிற்கு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்ப்பினை ஆதரித்து மக்கள் குதூகலத்தில் குதித்தமையையும் காணக்கூடியதாக இருந்ததாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஹொஸ்னி முபாரக்குடன் அவரது உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஹபீப் அல் அட்லிக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்கா, பிரிட்டன் அகதிகளை ஏற்க மறுப்பு

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை அகதிகளுக்கு பிரித்தானியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் அகதி அந்தஸ்து வழங்க மறுத்துள்ளன.

அவுஸ்ரேலியாவுக்கு அகதியாகச் சென்றவர்களுள் 51 பேருக்கு ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் பேரவை அகதி அந்தஸ்து வழங்கி இருந்தது.

அவர்களை பிரித்தானியா மற்றும் அமெரிக்காவில் குடியேற்ற பரிந்துரைக்கப்பட்டிருந்தது. எனினும் பாதுகாப்புக் காரணங்களுக்காக அவர்களை ஏற்றுக்கொள்ள அந்த நாடுகள் மறுத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இனங்காணப்பட்ட தாக்குதலாளிகள்

(யாழ்ப்பாணம்)

சிறிரெலோ அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் எஸ்.செந்தூரனை தாக்கியவர் இனங் காணப்பட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை மரண வீடொன்றுக்கு சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளை கோண்டாவில் பகுதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் தாக்கிவிட்டு தப்பிச்சென்றுள்ளனர். படுகாயமடைந்த செந்தூரன் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இதேவேளை, சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் மற்றும் வைத்தியசாலை பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். குறித்த தாக்குதலை மேற்கொண்டவர்கள் பிரதேச சபை தவிசாளர் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) ஒருவரின் மகன் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசாரணையை அடுத்து வழிமறித்து தாக்கியவர்கள் செந்தூரனிடம் மன்னிப்பு கோரியதாக தெரியவருகிறது.

(எஸ்)

# பாலியல் துஷ்பிரயோகம்; பிக்குவிற்கு 7 வருட சிறை

(லண்டன்)



லண்டனில் வயது குறைந்த சிறுமியை பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கிய பௌத்த பிக்கு ஒருவருக்கு பிரித்தானிய நீதிமன்றம் 7 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

கிழக்கு லண்டனில் அமைந்துள்ள தமெஸ் பௌத்த விகாரையின் விகாராதிபதியான பகலகம சோமரத்ன தேரருக்கே இவ்வாறு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட பௌத்த விகாரையில் வைத்து வயது குறைந்த சிறுமியை பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கியதாக இந்தப் பௌத்த பிக்கு மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில், இக்குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதை அடுத்து, 65 வயதான பகலகம சோமரத்ன தேரரை கடந்த மாதம் நீதிமன்றம் குற்றவாளியாக அறிவித்திருந்தது.

ஹீத்ரோ விமான நிலையத்தில் வைத்து கடந்த ஆண்டு நவம்பர் மாதம் கைது செய்யப்பட்ட இந்தப் பௌத்த பிக்குவுக்கு நீதிபதி நேற்றுமுன்தினம் சிறைத்தண்டணை வழங்கித் தீர்ப்பளித்தார்.

அத்துடன் இந்தப் பௌத்த பிக்குவை பாலியல் குற்றவாளிகளின் பட்டியலில் இணைக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதுடன், அவரை சிறுவர்களுடன் தொடர்பான செயற்பாடுகளில் இருந்து விலகியிருக்க வேண்டும் எனவும் நீதிமன்றம் பணித்துள்ளது.

பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பில் இவர் மீது பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 75 முன்னாள் போராளிகள் சமூகத்துடன் இணைப்பு

(வவுனியா)

புனர்வாழ்வு பெற்றுவந்த முன்னாள் போராளிகளில் 75 பேர் நேற்றைய தினம் அவர்களின் குடும்பத்தினருடன் இணைக்கப்பட்டனர்.

வவுனியா மற்றும் கந்தக்காடு புனர்வாழ்வு முகாம்களில் புனர்வாழ்வு பெற்ற 72 ஆண்களும் 3 பெண்களும் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய ஐயாத்துரை மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் அவர்களது குடும்பத்தினருடன் இணைக்கப்பட்டனர்.

இறுதிச் சண்டைகளின் முடிவில் இராணுவத்தினரிடம் சரணடைந்த 12 ஆயிரம் பேரில் 11 ஆயிரம் பேர் புனர்வாழ்வுப் பயிற்சியின் பின்னர் சமூகத்தில் இணைக்கப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் ஏ.தசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இன்னும் 1200 பேரளவில் தமது காவலில் இருப்பதாகவும், இவர்களில் புனர்வாழ்வுப் பயிற்சி பெறுபவர்கள் சுமார் 700 பேருக்கு எதிராக வழக்குத் தொடரப் போவதாகவும் திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

எஞ்சியுள்ள புனர்வாழ்வு பெறுவோர் அனைவரையும் இந்த வருட இறுதிக்குள் விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



இந்நிகழ்வில் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சின் செயலாளர் ஏ.தசநாயக்க, புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் ஹெட்டியாராச்சி, அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் எஸ். சதீஸ்குமார், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 யூன் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.